கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு
நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்
திருவள்ளுவராண்டு 2049
மலர் - 11 இதழ் - 7 - அக்டோபர் - 2019

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு
எஸ். சண்முகநாதன்
தி.ரத்தினசபாபதி
அ.கணேசன்
அ.கிருஷ்ணமூர்த்தி
ஜி. சரவணன்

இதழ் வடிவமைப்பு
ஞா. சரிதா

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: www.keetru.com

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
சந்தா தொகையை
New Century Reader's Sangam
என்ற பெயரில் அனுப்பலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்.............................................. 04

காலனி ஆட்சியில் துப்புரவு
டாக்டர். சு.நரேந்திரன்.............................................. 11

காஷ்மீர் பிரச்சினையில் நேரு
அ.மார்க்ஸ்.............................................. 15

திரும்பிப் பார்க்கும் செவ்வியல் தமிழ்
சுபாஷ் சந்திரபோஸ்.............................................. 21

குடுகுடுப்பைக்காரர் வாழ்வியல்: இனவரைவியல் நோக்கில் கள ஆய்வு அனுபவங்கள்
ந.முருகேசபாண்டியன்.............................................. 39

சிற்றூர் வரலாறு
பாவண்ணன்.............................................. 47

அடித்தள மக்களின் அடையாளங்கள்
சி.ஆர்.ரவீந்திரன்.............................................. 51

மொழி மட்டும் தனியாக வளராது
த.ஸ்டாலின் குணசேகரன்.............................................. 57

உள்ளூரிலிருந்து உலக இலக்கியவியலுக்கு ஒரு பயணம்
கி.பார்த்திபராஜா.............................................. 59

பெரும்பேராசிரியரின் ஆசிரியர்கள்
முனைவர் இரா. வெங்கடேசன்.............................................. 63

# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

## A Priest's Encounter With Revolution

### AN AUTOBIOGRAPHY

**JOSEPH VADAKKAN**

**The Christian Literature Society**

## என்றே குதிப்பும் கிதப்பும்

**(ஒரு கத்தோலிக்கக் குருவின் சுயசரிதை)**

**ஜோசப் வடக்கன்**

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

நான்கு இயல்களைக்கொண்ட ஃபாதர் வடக்கனின் சுயசரிதையில் இரண்டாவது இயல், 1957இல் கேரளத்தில் அமைந்த கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் அவரது பங்களிப்பைக் கூறிச் செல்கிறது. இப்போராட்டத்தில் அவர் பங்கேற்றமை குறித்த அவரது தன்னிலை விளக்கமாகவும் இது அமைந்துள்ளது. மற்றொரு வகையில் அவரது குற்றவுணர்வின் வெளிப்பாடாகவும் இதைக் கருத இடமுள்ளது. கம்யூனிஸ அனுதாபியாகவும் கம்யூனிஸ இயக்கத்தின் தலைவர்கள் சிலருடன் நெருக்கமான உறவு கொண்டவராகவும் அவர் இருந்துள்ளார். தொழிற்சங்க உணர்வும் உரிமைக்காக குரல் எழுப்பும் குணமும் அவரது இளமைக்கால வாழ்க்கையில் வெளிப்பட்டுள்ளது.

இத்தகைய பின்புலத்தில் வளர்ந்த இவர் எப்படி, உலகிலேயே முதல்முறையாகத் தேர்தல் முறையில் தேர்வு செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தின் தலைவர்களில் ஒருவராக மாறினார் என்பது வியப்பிற்குரியது மட்டுமல்ல, விவாதத்திற்கு உரிய ஒன்றுமாகும். இவரது இந்நிலைப்பாடு குறித்து எழுப்பப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் தாம் சில செய்திகளைக் கூறவேண்டியிருப்பதாக இவ்வியலின் தொடக்கத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.. அவர் கூறும் செய்திகளை, ‘நடைமுறை அனுபவம் சார்ந்தவை‘, ‘தத்துவநிலை சார்ந்தவை‘ என இரண்டாகப் பகுத்துக்கொள்ளலாம்.

நடைமுறை சார்ந்த ஒன்றாகத் தொழிற்சங்க அனுபவம் ஒன்றைக் குறிப்பிடுகிறார். இவரது குருமாணவர் வாழ்க்கையின்போது சமூகப்பணி தொடர்பான பயிற்சியைப் பெறவேண்டியிருந்தது. இதன் பொருட்டு கல்லேற்றும்கரா என்ற ஊரிலுள்ள கத்தோலிக்க ஆயர் இல்லத்தில் இப்பயிற்சி பெற வந்த மாணவர்கள் தங்கியிருந்தனர். இவர்கள் தங்கியிருந்த காலத்தில் தொழிலாளர் பிரச்சினை ஒன்று இப்பகுதியில் உருவாகியிருந்தது.


**முந்திரி ஆலைப் போராட்டம்**

இப்பகுதியில் உள்ள ஆலூர், புல்லூர் என்ற இரு ஊர்களில் இயங்கிவந்த முந்திரி தொழிற்சாலைகளை அவற்றின் உரிமையாளர்களான கத்தோலிக்க முதலாளிகள் கதவடைப்புச் செய்துவிட்டனர். ஆலையில் பணிபுரிந்த தொழிலாளர்களின் பெரும்பகுதியினர் கத்தோலிக்கப் பெண்பிள்ளைகள். அவர்களது கோரிக்கைகள் எளிமையானவைதான். ஆனால் ஆலைகளின் உரிமையாளர்கள் தம் ஆதாயத்தில் சிறு அளவைக்கூடக் குறைத்துக்கொள்ள விரும்பவில்லை. தம் வேண்டுகோள்களை ஆலையின் தொழிலாளர்கள் முன்வைத்தபோது அவற்றின் உரிமையாளர்கள் ஆலைகளை மூட்டிவிட்டனர். இதனால் இங்கு பணியாற்றி வந்த 800 தொழிலாளர் குடும்பங்கள் பட்டினிக்காளாயின.

தொழிற்சாலைகளைத் திறக்காவிடில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக பட்டினிப் போராட்டம் நடத்துவது என்று சமூகப்பணிக்காகப் பயிற்சி பெற வந்த குரு மாணவர்களும் அங்குப் பணியாற்றிய குருக்கள் சிலரும் முடிவெடுத்தனர். குருமாணவர் என்ற நிலையில் இவரால் அதில் பங்கெடுக்க இயலவில்லை. கத்தோலிக்கக் குரு ஒருவரும் கத்தோலிக்க ஆசிரியர் ஒருவரும் பட்டினிப் போராட்டத்தில் பங்கேற்பது என்று முடிவானது. இத்தொழிற்சாலையில் செயல்பட்டு வந்த தொழிற்சங்கங்கள் கம்யூனிஸ்ட் தலைமையின் கீழ் இருந்தன. ஆலை முதலாளிகளுக்கு ஆதரவான கருங்காலிகளாக இவர்களைக் கம்யூனிஸ்டுகள் கருதியதால் இவர்களுக்கு எதிராக ஒன்றுதிரண்டனர்.

இதனால் ஒருபக்கம் ஆலை முதலாளிகளின் எதிர்ப்பையும் மற்றொருபக்கம் கம்யூனிஸ்டுகளின் எதிர்ப்பையும் இவர்கள் எதிர்கொள்ள நேரிட்டது.

இவ்விரண்டு அமைப்புகளுக்குமிடையே நெருக்குண்ட நிலையில் நாத்திக கம்யூனிஸ்டுகளையும் சுயநலம்கொண்ட ஆலை முதலாளிகளையும் எதிர்ப்பதென்ற முடிவுக்கு இவர் வந்தார். இதனடிப்படையில் அணி ஒன்று உருவானது. தொழிலாளர் நல அமைச்சர் தலையீட்டினால் விசாரணை ஆணையத்திற்குள் இப்பிரச்சினை கொண்டுசெல்லப்பட்டதுடன் கதவடைப்பு காலத்துக்கான ஊதியம் வழங்கவும் கட்டளையிடப்பட்டது. இதனால் கோபமுற்ற ஆலை முதலாளிகள் பிரச்சினைக்கு இவர்தான் காரணம் என்றும் பட்டினிப்போராட்டத்தில் ஈடுபட்ட குருவையும் மற்றவர்களையும் இவர்தான் தூண்டிவிட்டார் என்றும் ஆயரிடம் முறையிட்டனர். மற்றொரு பக்கம் இவர்கள் மீது கம்யூனிஸ்டுகள் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். இரிஞ்



சிலக்குடா நகரிலுள்ள அய்யங்காவு திடலில் பொதுக்கூட்டம் நடத்தி இவ்விரு பிரிவினரையும் இவர் கடுமையாகச் சாடினார். இதன் தொடர்ச்சியாக திரிசூர் நகரிலும் ஒரு கூட்டம் நிகழ்ந்தது.

இவருடைய ஐந்தாண்டுகால குருமாணவர் பயிற்சிக்கல்லூரி வாழ்வில் கம்யூனிஸம், கம்யூனிஸ எதிர்ப்பு குறித்த நூல்களைப் படித்தறிந்திருந்தார். இதனால் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான விவாதங்களை முன்வைத்தார். திரிசூரிலுள்ள பணக்காரர்களும் மேட்டிமையோரும் இவரது உரையை விரும்பினார்கள். மற்றொரு பக்கம் திரிசூரில் செயல்பட்ட வணிக நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக இவர் எடுத்த நிலைப்பாடானது ஒரு தவறான மனிதனுக்கு ஆதரவளித்துவிட்டோமோ என்று அவர்களை எண்ணும்படிச் செய்துவிட்டது. இவரது இச்செயல்பாடு குறித்து ஆயரிடம் முறையிட்டனர்.

*1951-52* காலத்தில் திருவிதாங்கூர்-கொச்சி மாநிலத்தில் இவரது கம்யூனிஸ எதிர்ப்பு உரைக்காக இவரை விரும்பி அழைத்தனர். அப்போதைய தேர்தல் அரசியல் சூழலில் முதலாளித்துவ எதிர்ப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டு கம்யூனிஸ எதிர்ப்புக்கே முக்கியத்துவம் தரப்பட்டது என்பதை இவர் ஒத்துக்கொள்கிறார்.

இவை தவிர தமது கம்யூனிஸ எதிர்ப்புக்கான நடைமுறை சார்ந்த காரணங்கள் எவற்றையும் இவர் குறிப்பிடவில்லை. அடுத்து தத்துவ அடிப்படையிலான சில காரணங்களை அவர் முன்வைத்துள்ளார். முடிந்த அளவுக்கு அவரது கூற்றாகவே அதைக் குறிப்பிடலாம்.

**தத்துவார்த்த எதிர்ப்பு**

கம்யூனிசம் மீதான தம் எதிர்ப்புக்கு மூன்று காரணங்களை. ஃபாதர் வடக்கன் முன்வைக்கிறார்:

முதலாவது காரணம் மார்க்ஸின் இயக்கவியல் பொருள்முதல்வாதம் முற்றிலும் சரியானதல்ல. இப்பொழுதும் கூட இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.எதிர்ப்பு குறித்த விதி (Law of opposition), மறுத்தல் குறித்த விதி. (Law of Negation) மாறுதல் குறித்த விதி (Law of transformation) என்ற மூன்று விதிகளைத், தம் ஆய்வேட்டுக்கான ஆதாரங்களாக மார்க்ஸ் கொண்டிருந்தார். இவ்விதிகளின் துணையுடன் உயிரின் தோற்றம், அளவு மாறுபாடு (Quantitative Change) பண்புமாறுதல் (Qualitative transformation) என்பனவற்றை விளக்குகிறார். இயக்கவியல் கோட்பாடானது உயிரின் தோற்றம் பொருளின் இயக்கவியல் அடிப்படையில் நிகழ்வதாக விவாதிக்கிறது. அணு மற்றும் ஆற்றல் குறித்து விளக்கும் நவீன அறிவியல் வளர்ச்சியானது மார்க்ஸின் இக்கோட்பாட்டைப் புறந்தள்ளுகிறது. எதிர்மறையின் விதியும் கூட. வலுவான ஆதாரம் கொண்டதல்ல. மாறுதல் குறித்த விதிமட்டுமே இன்றளவும் நல்ல ஆய்வுக்கருவியாகப் பயன்படுகிறது.பொருளானது தகுந்த அளவில் இணையும்போது பண்பு மாறுபாடு நிகழும். ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் தண்ணீர் ஆவியாக மாறுகிறது.ஒரு குறிப்பிட்ட நிலையில் வெப்பம் குறையும்போது பனிக்கட்டியாகிறது. முதலில் அது தண்ணீராக இருந்து பின்னர் அது நீராவியாகவோ பனிக்கட்டியாகவோ ஆகிறது. இம் மாறுதலானது எந்த ஒரு புறச்சக்தியாலும் நிகழவில்லை. மார்க்ஸின் கருத்துப்படி மாறுதல் விதியின்படி இது நிகழ்கிறது. டார்வின் கூறியதும் இதை ஒத்ததுதான்.உயிரின் தோற்றமும் மனிதனின் தோற்றமும் பரிணாமத்தின் அடிப்படையில் நிகழ்கின்றன. டார்வினின் கருத்துப்படி பொருள் உயிராக மாறுவதற்கு எந்த ஒரு புற ஆற்றலும், (வெளிக்காரணியும்) தேவையில்லை. / இப்பரிணாமக் கோட்பாட்டுடன் நான் தொண்ணூறு விழுக்காடு உடன்படுகிறேன். ஒரு குழந்தையானது சோதனைச்சாலையில் உருவாக்கப்பட்டால் அதை நான் நூறு விழுக்காடு ஏற்றுக்கொள்வேன். அப்போதும் கூட என்னுடைய கடவுள் நம்பிக்கை தளர்ந்துவிடாது. பொருளுக்குள் உயிர் எவ்வாறு வந்தது என்பது இன்றும் புதிராகவே உள்ளது. உயிரின் தோற்றத்தை மார்க்சியம் நிருபித்தாலும் கூட நான் ஒரு இறைமறுப்பாளனாக மாறமாட்டேன். உண்மையான எதார்த்தமானது தானாகத் தோன்றி தானாக நிலைத்திருப்பதுதான். தோற்றமும் முடிவும் இல்லாததையே கடவுள் என்பேன்.

இதன் காரணமாகவே நான் மார்க்சிசத்தை எதிர்த்தேன். இக்காரணத்தாலேயே இப்போதும்கூட என்னால் முழுமையான மார்க்சியவாதியாக மாறமுடியவில்லை.

ஃபாதர் வடக்கனின் இக்கூற்றை, விரிவான மேற்கோளாகக் காட்டியமைக்குக் காரணம் தத்துவநிலையில் குறிப்பாக இறைமறுப்பில் அவருக்கு உடன்பாடில்லை என்பதை வெளிப்படுத்துவதற்குத்தான் (அவர் கத்தோலிக்க சமயக் குரு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.) ஆன்மீக நோக்கிலான இக்காரணங்கள் மார்க்சியத்தை அவர் முழுமையாக ஏற்றுக்கொள்வதில் தடையாக இருந்ததைக் குறிப்பிட்டுவிட்டு மார்க்சின் ஏனைய முடிவுகளில் தமக்கு உடன்பாடு உள்ளதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

மார்க்சின் பொருளியல் கோட்பாடு தம் மீது செல்வாக்கு செலுத்தியது என்பதை ஒத்துக்கொள்வதுடன் வர்க்கப் போராட்டத்திலும் தமக்கு நம்பிக்கை உண்டு என்கிறார். ஜனநாயக நடைமுறைகள் தோல்வியடையும்போது இரத்தம் சிந்தும் புரட்சியின் வாயிலாக இந்திய மக்கள் பொருளாதார விடுதலையை அடைவார்கள் என்கிறார். மார்க்சின் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்துடன் ஆன்மீகம் இணையும்போது தம் பன்னிரு மீனவச் சீடர்களுடனான கிறித்துவின் ராச்சியம் வரும் என்கிறார். மக்களாட்சி விழுமியங்களை நிலைநிறுத்தும் வழிமுறையாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, தாம் உறுதியாக நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கம்யூனிஸ்டுகளின் தன்னிச்சைப் போக்கும் (autocratic) சோவியத் தாளத்திற்கேற்ப ஆடும் அமைப்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விளங்கியதும் தமது கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நிலைபாட்டிற்குக் காரணம் என்கிறார்.

**எதிர்ப்பினைச் செயல்படுத்துதல்**

இவ்வாறு கம்யூனிஸம் குறித்த முரணான பார்வைகளைக் கொண்டிருந்த வடக்கன் பாதிரியாருக்கு அவரது கம்யூனிஸ எதிர்ப்பை வெளிப்படுத்தும் வாய்ப்பாக விமோசன சமிதி நடத்திய போராட்டங்கள் அமைந்தன. கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி கேரளத்தில் உருவாவதற்கு ஓராண்டுகளுக்கு முன்னர்தான் 1956 மார்ச்சில் இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1957 ஏப்ரல் 5ந்தேதி கம்யூனிஸ்ட் அமைச்சரவை பதவியேற்றது.

சாமானிய மக்களால் தேர்வு செய்யப்பட்ட இவ்வரசு அம்மக்களின் நலனை முன்னிறுத்தி இரு முற்போக்கான சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தது.

ஒன்று, நிலச்சீர்திருத்தச் சட்டம், மற்றொன்று கல்வித்துறை சீர்திருத்தச் சட்டம். இவ்விரு சட்டங்களும் முற்போக்கான தன்மை கொண்டவை. பரந்தஅளவிலான மக்கள் பிரிவினருக்கு நன்மை பயக்கும் இவ்விரு சட்டங்களையும் இருவேறு பிரிவினர் தம் சுய ஆதாயத்தை முன்னிறுத்தி கடுமையாக எதிர்த்தனர்.

நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் முக்கிய கூறாக நிலமற்ற ஏழைக்குடியானவர்களுக்குப் பயிர் செய்யவும் குடியிருக்கவும் நிலம் வழங்குதல் அமைந்திருந்தது. இவ்வாறு நிலம் வழங்க நிலஉச்சவரம்புச் சட்டத்தின் வாயிலாக நிலங்களைக் கையகப்படுத்த கேரள அரசு முடிவெடுத்திருந்தது. இம்முடிவின்படி பெருநிலஉடைமையாளர்கள் தம்மிடமிருந்த அதிகப்படியான உபரிநிலங்களை இழப்பது தவிர்க்கவியலாத ஒன்றாக அமைந்தது.


கல்விச்சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்ததில் ஜோசப் முண்டசேரி என்ற முன்னாள் கல்லூரிப் பேராசிரியருக்கு முக்கிய பங்கு இருந்தது. கத்தோலிக்கரான இவர் கத்தோலிக்கக் கல்லூரி ஒன்றில் பேராசிரியராகப் பணியாற்றியவர். நல்ல இலக்கியவாதி. (மலையாள மொழியில் இவர் எழுதிய நாவலொன்று 'பேராசிரியர்' என்ற தலைப்பில் தமிழில் வெளியாகியுள்ளது). கம்யூனிஸ்ட் அமைச்சரவையில் இவர்தான் கல்வியமைச்சராக இருந்தார். ஒர் ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பதன் அடிப்படையில் கல்வித்துறையில் மேற்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்த அனுபவ அறிவு இவருக்கு இருந்தது. கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் நிலை மிகவும் அவலத்திற்குரியதாக இருந்தது. பணிநியமனத்திற்குக் கையூட்டு, பணிப் பாதுகாப்பின்மை, மாத ஊதியத்தில் முறைகேடாகப் பிடித்தம் செய்தல் (அ.மாதவையா எழுதிய 'சத்யானந்தன்' நாவலில் இதனைப் பதிவு செய்துள்ளார்) என்பன முக்கியக் குறைபாடுகளாக இருந்தன. 1959வது ஆண்டு நிலவரப்படி ஆசிரியர் பணியில் நிலவிய கையூட்டு குறித்து 'ஆசிரியர் பணி நியமனத்திற்காக கல்விக்கூட நிர்வாகத்திற்கு ஆயிரம் ரூபாய் கையூட்டாகக் கொடுக்கவேண்டும்' என்று ஃபாதர் வடக்கன் எழுதியுள்ளார். 1974வாக்கில் இது 5ஆயிரம் ரூபாயாக உயர்ந்துவிட்டது என்கிறார்.

கல்விச்சீர்திருத்தச் சட்டமானது, வேலைவாய்ப்பு நிறுவனத்தின் பதிவேடுகளின் அடிப்படையில் பணி வழங்குவதைக் கட்டாயமாக்கியது. ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக ஊதியம் வழங்கியதுடன் பணிப்பாதுகாப்பையும் உறுதி செய்தது. கத்தோலிக்கத் திருச்சபையும் நாயர் சேவா சங்கமும் நடத்திவந்த கல்விநிறுவனங்களில் இக்குறைபாடுகள் மிகுந்திருந்தன. இவ்விரு அமைப்புகளுக்கும் நிதி வழங்கும் அமுதசுரபிகளாக அவை நடத்தி வந்த கல்வி நிறுவனங்கள் விளங்கின.

ஏழைகளுக்கு நிலம் வழங்கும் நிலச்சீர்திருத்தச் சட்டம் தேவையான ஒன்றுதான் என்பது ஃபாதர் வடக்கனின் கருத்தாக இருந்துள்ளது. இச்சட்டத்தை அவர் ஆதரித்துள்ளார். மன்னத் பத்மநாபன் உள்ளிட்ட விமோசன சமிதியின் தலைவர்களிடம் அவர்கள் அமைக்க இருக்கும் புதிய அரசானது வேளாண்மை உறவுகள் தொடர்பான சட்டவரைவில் மாறுதல் எதையும் செய்யமாட்டோம் என்று உறுதி கூறினால்தான் விமோசன சமிதி இயக்கத்தை ஆதரிப்பேன் என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார். மன்னத் பத்மநாபனுடன் இணைந்து உரையாற்றிய விமோசன சமிதி பொதுக்கூட்டங்களிலும் தாம் இதைத் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரத்தில் கல்விச் சீர்திருத்தச் சட்டவரைவின் சில விதிகளுடன் அவருக்கு உடன்பாடு இல்லை. ஆசிரியர் பணிநியமனத்தில் நிலவும் கையூட்டையும் முறையற்ற ஊதியப் பிடித்தத்தையும் தடுத்தல், பணிப்பாதுகாப்பு வழங்கல் தொடர்பான விதிகளை அவர் வரவேற்றபோதிலும் கல்வி முழுவதும் கம்யூனிஸ்ட் அமைச்சரவையின் கட்டுப்பாட்டுக்குள் செல்வது ஆபத்தானது என்று கருதி அஞ்சியுள்ளார்.

தம்முடைய அச்சம் ஆதாரமற்றது என்பதைப் பின்னர் இவர் உணர்ந்துள்ளார். கம்யூனிசத்தின் சர்வாதிகார இயல்பு, அதன் போதனைகள் என்பன குறித்த தவறான பார்வை பத்திரிகை அறிக்கைகளின்


STUDIES ON INDIAN MARXISM SERIES NO. 1

A Priest's Encounter with Revolution

AN AUTOBIOGRAPHY

by

JOSEPH VADAKKAN

Published by

THE CHRISTIAN LITERATURE SOCIETY

FOR

THE CHRISTIAN INSTITUTE FOR THE STUDY OF RELIGION AND SOCIETY

P.O. BOX 4600, BANGALORE-560046

அடிப்படையில் தம்மிடம் உருவானமையே இதற்குக் காரணம் என்று விளக்கமளித்துள்ளார். அதே நேரத்தில் ஆசிரிய நியமனம், நேரடி ஊதியம் வழங்கல், பணிப்பாதுகாப்பு குறித்த விதிகளை ஆதரித்துள்ளார். இக்காலகட்டத்தில் அவர் எழுதிய கட்டுரைகளிலும் குறுநூல்களிலும் இதைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளேன் என்றும் எழுதியுள்ளார். இருப்பினும் அதை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்பதில் ஒருவிதமான குழப்பம் இவரிடம் இருந்துள்ளமை புலப்படுகிறது.

திரிசூர் கத்தோலிக்க ஆயரைச் சந்தித்து மறைமாவட்டம் (டயோசிஸ்) நிர்வகிக்கும் பள்ளிகளில் ஆசிரியர் நியமனத்தின்போது கையூட்டு வாங்கமாட்டேன் என்று வெளிப்படையாகக் கூட்டத்தில் உறுதியளித்தால் இப்போராட்டத்தில் தாம் கலந்துகொள்வதாகக் கூறினார். ஆயர் இதனை ஏற்றுக்கொண்டார்! மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று ஆயரின் இவ்வுறுதிமொழியை ஆசிரியர்களுக்கு இவர் அறிவித்தார். புனித தோமையார் கல்லூரியில் நடந்த ஆசிரியர் கூட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். ஆயரும் இக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார். தம்முடைய நிர்வாகத்திலுள்ள மறைமாவட்டப் பள்ளிகளில் நிகழும் ஆசிரியர் நியமனத்திற்கு, கையூட்டு வாங்கமாட்டேன் என்று தெளிவாகக் கூறினார். ஆயரின் இக்கூற்று அனைவரையும் ஈர்த்தது. கேரள அரசின் கல்விச்சட்ட வரைவுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட இக்கூற்று ஊக்கமளித்தது. விமோசன சமிதி நடத்திய போராட்டத்தின் தலைவர்களில் ஒருவரான மன்னத் பத்மநாபனின் கட்டுப்பாட்டில் இருந்த நாயர் சேவா சங்கம் நடத்திவந்த பள்ளிகளில் கையூட்டுமுறை அதிகளவில் இருந்தது.

நாயர் நிலவுடைமையாளர்களும் கத்தோலிக்க நிலவுடைமையாளர்களும் நிலச்சீர்திருத்தச் சட்டத்தால் தம்மிடமிருந்த அதிகப்படியான நிலங்களை அரசு எடுத்துக்கொள்வதைத் தடுக்க விரும்பினர். கத்தோலிக்கத் திருச்சபை தன் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில் நிகழ்த்திவரும் ஊழல்களையும் முறைகேடுகளையும் தொடர விரும்பியது. 'கத்தோலிக்கத் திருச்சபை தம் பள்ளிகளைக் காப்பாற்ற விரும்பினால் அது எங்கள் நிலங்களைப் பாதுகாக்கவேண்டும்' என்பது பெருநிலவுடைமையாளர்களின் கருத்தாக அமைந்தது என்று ஃபாதர் வடக்கன் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கத்தோலிக்கர்-நாயர்களின் கூட்டணியாக விமோசன சமிதி உருப்பெற்றது.

'அதி பிற்போக்காளர்களின் கூட்டாக' இதைத் தாம் கருதியதாக ஃபாதர் வடக்கன் குறிப்பிட்டுள்ளார். கம்யூனிஸ்டுகள் - கம்யூனிஸ்ட் அல்லாதவர்கள் என்று எதிர் எதிராக இரு அணிகள் உருவான நிலையில் இரண்டுக்கும் இடைப்பட்ட நடுநிலையான அணி ஒன்றுக்கு இடமில்லாமல் போய்விட்டது. இப்போராட்டகால நிகழ்வுகள் சிலவற்றை கூறிச் செல்லும் ஃபாதர் வடக்கன் அதில் தம்முடைய பங்களிப்பையும் 'தொழிலாளி' என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை வெளிக்கொண்டு வந்ததையும் விவரித்துச் செல்கிறார். இறுதியாக இப்போராட்டத்தின் விளைவாக 1959 ஜுலை 31இல் குடியரசுத் தலைவரின் ஆணையின்படி கேரள அரசு கலைக்கப்பட்டது.

இதன்பின்னர் அப்போதைய மேற்கு ஜெர்மனி அரசு ஜெர்மனிக்கு வரும்படி பாதர் வடக்கனுக்கு அழைப்பு விடுத்தது. கம்யூனிஸ்ட் ஆட்சியைக் கலைப்பதில் தமது பங்களிப்புக்கான வெகுமதியே இவ்வழைப்பு என்று வெளிப்படையாக இவர் ஒப்புக்கொள்கிறார். அவர் மேற்கொண்ட அய்ரோப்பிய பயண அனுபவங்கள் குறித்தும் கிறித்தவர்களின் புண்ணிய தலங்களுக்குச் சென்றமை போப்பாண்டவரைச் சந்தித்தமை என்பனவற்றையும் பதிவு செய்துள்ளார்.

**புதிய அரசும் நில வெளியேற்றமும்**

கம்யூனிஸ்ட் ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர் நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. பிரஜா சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்த பட்டம் தாணுப்பிள்ளை முதல்வரானார்.

ஆடம்பரமான மேற்கத்திய வாழ்வை இவர் அனுபவித்துக்கொண்டிருந்தபோது மனிதநேயமற்ற சில செயல்கள் கேரளத்தில் நடந்துகொண்டிருந்தன. மழை பொழியும் ஜுலை மாதத்தில் உடும்பன்சோலை என்ற பகுதியில் வாழ்ந்துகொண்டிருந்த இரண்டாயிரம் குடும்பங்களை, கடுமையான மழைக்காலம் என்றும் பாராது அமராவதி காட்டுப்பகுதிக்குள் காவல்துறையினரை ஏவி புதிய கேரள அரசு விரட்டியடித்தது.

இவ்வாறு விரட்டப்பட்டவர்களில் பலர் காட்டில் இறந்துபோயினர். இறப்பின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. நூற்றுக்கணக்கானோர் நோய்வாய்ப்பட்டனர். நிலவெளியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு அய்ந்து சென்ட் அளவு நிலம் வழங்கக்கூட புதிய அரசு முன்வரவில்லை. தம்மைப் போன்றவர்கள் இரவும் பகலும் உழைத்து

உருவாக்கிய ஓர் அரசு இத்தகைய செயலைச் செய்யும் என்பதை இவரால் நம்பமுடியவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஏ.கே.கோபாலன் (இனி ஏகேஜி) பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ அங்கு சென்று அம்மக்களுக்கு ஆதரவாகப் பட்டினிப்போராட்டத்தை மேற்கொண்டார். ஓர் அரசியல் புயல் மலைப்பகுதியில் உருவாகிவிட்டது.

103 டிகிரி காய்ச்சலுடன் திரிசூர் வந்த இவர் ஓய்வெடுக்கவேண்டும் என்ற அறிவுரையைப் பொருட்படுத்தாமல் அமராவதிக்குச் சென்றார். இவர் சென்றபோது ஏகேஜியை கைது செய்து கோட்டயம் மருத்துவமனையில் சேர்த்திருந்தனர். அமராவதி மலைக்குன்றுகளில் செங்கொடி பறந்துகொண்டிருந்தது. இவர் சென்றபோது ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற ஆர்ப்பாட்டம் காண்போரை ஈர்க்கும் வகையில் நிகழ்ந்துகொண்டிருந்தது.

முழக்கங்கள் எழுப்பிக்கொண்டிருந்த இளைஞன் ஒருவன் இவரை நோக்கி ஓடிவந்து தன் நெஞ்சில் அடித்தவாறு 'நீங்கள் இங்கிருந்தால் இது நிகழ்ந்திருக்குமா 'என்று உரக்கக் கூவினான். கம்யூனிஸ எதிர்ப்பு அணியில் அவன் செயல்பட்டவன் என்பதை இவர் அறிந்துகொண்டார். அதேபோழ்து ஊர்வலத்தில் சென்றவர்கள் இவரைச் சூழ்ந்துகொண்டனர். அவர்களில் பெரும்பாலோர் சிரியன் கிறித்தவர்களின் பாரம்பரிய ஆடைகளை அணிந்திருந்தனர். 'தந்தையே நீங்கள் எங்களைக் காப்பாற்றவேண்டும், காவல்துறையினர் ஏகேஜியை அழைத்துச் சென்றுவிட்டனர்.' என்று கதறினர். இது இவரது உள்ளத்தைத் தொட்டது. 'அவர்களுடன் சேர்ந்து நானும் அழுதேன்' என்று குறிப்பிட்டுவிட்டு என்ன நிகழ்ந்தது என்பதை அவர்களிடம் கேட்டறிந்ததாக எழுதியுள்ளார்.

'உங்களுக்காக நானும் இறப்பேன், ஏகேஜியும் நானும் கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்களும் கூட்டாக இணைந்து இந்த வெளியேற்றத்தை எதிர்ப்போம்' என்று அவர்களுக்கு உறுதியளித்தார்.

நாற்பது குடும்பங்கள்கூட தங்குவதற்கு இடம் போதாத இரு கொட்டகைகளில் ஏறத்தாழ பத்தாயிரம் எண்ணிக்கையிலான ஆண்களும் பெண்களும் தங்கியிருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் குளிரில் நடுங்கியவாறே மரங்களின் கீழ் இருந்தனர். இவர் அங்கு சென்ற அன்று குறைந்தது முன்னூறு குழந்தைகளாவது நோய்வாய்ப்பட்டிருந்தனர். அக்குழந்தைகளில் பல சாவின் விளிம்பில் இருந்தன.

எந்த ஒரு அமைச்சரும் அந்த இடத்தைப் பார்வையிட வரவில்லை. ஒரு கத்தோலிக்கக் குருவோ துறவினியோ அங்குத் தென்படவில்லை. ஒன்று அல்லது இரண்டு இளங்குருக்கள் நிலவெளியேற்றத்தை எதிர்க்க முன்வந்தனர். அவர்களைக் கைது செய்துவிடுவதாக காவல்துறை அச்சுறுத்தியதும் அவர்கள் அமைதியாகத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

'குருக்கள் அமராவதிக்குச் செல்லக்கூடாது. அரசை எதிர்க்கக்கூடாது. குருக்களுக்கு அரசியல் தேவையில்லை. கம்யூனிஸ்டுகள் இப்பிரச்சினையை எதிர்கொள்ளட்டும்' என்பதே கத்தோலிக்க ஆயர்களின் நிலைப்பாடாக இருந்தது என்ற உண்மையை இவர் போட்டுடைக்கிறார். (இதே ஆயர்கள் குருக்களையும் துறவினிகளையும் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடும்படி சில மாதங்களுக்கு முன்பு தூண்டிவிட்டனர். குருக்களுக்கு அரசியல் தேவையில்லை என்று அப்போது ஆயர்களுக்குத் தெரியவில்லை!)

நம்முடைய அமைச்சரவையையே நாம் எப்படி எதிர்ப்பது என்பது விமோசன சமிதி நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்டோரின் கருத்தாக இருந்தது. நம்முடைய (காங்கிரஸ்) அமைச்சர் சாக்கோவின் கட்டுப்பாட்டில் காவல்துறை உள்ளது. எனவே காவல்துறையின் வரம்புமீறல் குறித்துப் பேசுவது என்பது கம்யூனிஸ்ட் பரப்புரையாகிவிடும். காங்கிரஸ் கட்சியினரின் கூற்றாக இது வெளிப்பட்டது. தம் கட்சியைச் சேர்ந்த பட்டம் தாணுப்பிள்ளை முதலமைச்சராக இருந்ததால் பிஎஸ்பி அமைதி காத்தது. இந்நிகழ்வுகள் குறித்து முஸ்லீம் லீக் அலட்டிக்கொள்ளவில்லை. இப்போக்குகளால் இவர் தளர்ந்துவிடவில்லை. கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளராகப் பரவலாக அறியப்பட்ட வடக்கன் பாதிரியார் கம்யூனிஸ்ட் தலைவர் ஏகேஜியை அரவணைத்துக்கொண்டது கம்யூனிஸ்ட் அல்லாதாரிடம் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

**எதிர்ப்புச் செயல்பாடுகள்**

அமராவதி மக்களின் அவலநிலை குறித்து உள்ளத்தைத் தொடும் வகையிலான அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதைப் பத்திரிகைகளுக்கு வழங்குவதற்காக இவர் திரிசூர் சென்றார். மனோரமா பத்திரிகை அலுவலகம் சென்று தம் அறிக்கையை கொடுத்ததுடன் அதன் உரிமையாளர் மேத்யூவிடம் தாம் கண்ட காட்சிகளை விவரித்துக் கூறினார். மனிதநேயம்கொண்ட மேத்யூ பத்திரிகையாசிரியர்களை அழைத்து இது தொடர்பாக அரசை விமர்சித்து தலையங்கம் எழுதும்படிக் கூறியதுடன் ஃபாதர் வடக்கனின் அறிக்கையை முழுமையாக வெளியிடுவதாகவும்

உறுதியளித்தார். ஆனால் இவை இரண்டும் அச்சில் வரவில்லை. இதே கதிதான் இவர் உருவாக்கி வளர்த்த 'தொழிலாளி' பத்திரிகைக்கு எழுதி அன்ப்பிய கட்டுரைக்கும் நேர்ந்த்து. ஆயரின் ஆணைப்படி இது அச்சிடப்படவில்லை.

பெருநிலவுடைமையாளர்கள் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் ஆகியோரின் அரசியல் பின்புலமே இதற்குக் காரணம் என்பதை இவர் பின்னால் அறிய நேரிட்டது. இதன் தொடர்ச்சியாக இவர் விரிவாகக் கூறியுள்ள செய்திகள் கேரளத்தின் நிலப்பிரச்சினை தொடர்பாக ஆழமான அறிவு கொண்டவர் என்பதையும் நிலமற்ற ஏழைகளின் மீதான இவரது சார்புநிலையையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. (பக் 86-88).

கம்யூனிஸ்ட் அமைச்சரவை கலைக்கப்பட்டதும் மன்னத் பத்மநாபனும் தோட்ட முதலாளிகளாக விளங்கிய கிறிஸ்தவர்களும் வனத்துறை நிலங்களை ஆக்கிரமித்ததுடன் அங்கு ஏற்கனவே வாழ்ந்துகொண்டிருந்த ஏழைக்குடியானவர்களை வெளியேற்றியதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆயர்களும் துறவற சபைகளும் விமோசன சமிதி போராட்டத்தின்போது அமெரிக்காவிடமிருந்து பணம் பெற்றதையும் பெருநிலக்கிழார்களுக்கும் மலைத்தோட்ட முதலாளிகளுக்கும் ஆதரவாக இருந்ததையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

**நடைப்பயணம்**

அமராவதியில் அல்லல் பட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு உணவு, போர்வை ஆகியனவற்றை வழங்கும் பணியை மேற்கொண்டதுடன் காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், பிற இயக்கம் சார்ந்தோர் அடங்கிய நடைப்பயணம் ஒன்றுக்கும் இவர் ஒழுங்கு செய்தார். கோட்டியூரில் இருந்து தொடங்கிய இப்பயணத்தில் அரசியல் கட்சிகளின் கொடிகள் இடம்பெறவில்லை. 400 மைல் தொலைவில் உள்ள தலைநகர் திருவனந்தபுரம் நோக்கி நடைப்பயணமாகப் புறப்பட்ட இப்பயணம் 46 நாட்களில் அங்கு சென்றடைந்தது. செல்லும் வழியில் நாள்தோறும் பொதுக்கூட்டங்களும் ஆங்காங்கு நடந்தன. அம்பலவயல் என்னும் ஊரிலும் நிலவெளியேற்றம் நிகழும் என்ற அச்சம் இருந்ததால் அங்கிருந்தும் ஓர் அணி புறப்பட்டது. இந்நடைப்பயணத்திற்கு ஆங்காங்கே வரவேற்புகளும் நிகழ்ந்தன. கேரள மாநிலக் காங்கிரஸ் கட்சி, தன் கட்சி உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்வதற்குத் தடை விதித்தது. ஆனால் இதை மீறி ஆயிரக்கணக்கான காங்கிரசார் கலந்துகொண்டனர். பாலை எனும் நகரில் இவர் உரையாற்றுவதாக இருந்தது. ஆனால் பாலை ஆயர் தம் மறைமாவட்ட எல்லைக்குள் இவர் உரையாற்றத் தடை விதித்தார். திரிசூர் ஆயரும் இவர் உரையாற்ற அனுமதி மறுத்தார். ஆனால் ஊர்வலத்திற்கு வரவேற்பு நிகழ்ந்த இடங்களில் இவர் உரையாற்றினார். நடைப்பயணத்தின் இறுதியில் திருவனந்தபுரம் பழவங்காடி திடலில் நிறைவுக்கூட்டம் நடந்தது. இதில் இவரும், ஏகேஜி, வர்க்கீஸ், வெலிங்டன் ஆகியோரும் உரையாற்றினர். நிலவெளியேற்றத்திற்கு எதிரான பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் இந்நடைப்பயணம் முக்கியப் பங்காற்றியது. நிலவெளியேற்றம் தொடர்பான மனுவைப் பெற்றுக்கொள்வதற்குக்கூட முதலமைச்சர் மறுத்தார். பின்னர் அஞ்சல் வழியாக அனுப்பப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக முதல்வர் பட்டம் தாணுப்பிள்ளைக்கு எதிரான கருப்புக்கொடிப் போராட்டம் நடந்தது. பலர் கைதாகி, காவல்துறையின் சித்திரவதைகளுக்கு ஆளாகினர். கேரளத் திருச்சபையையும் இவரையும் பாதுகாக்கும் முகமாக, சமூகம், சமூகப்பணி குறித்த கல்வி பயில இவரை வெளிநாடுகளுக்கு அனுப்பினர். இது ஒருவகையான நடைமுறைத் தந்திரம்தான். (இப்போதும்கூட பல மறைமாவட்டங்களில் இது தொடர்கிறது).

பட்டம் தாணுப்பிள்ளை ஆளுனராக்கப்பட்டார். அவரையடுத்து காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சங்கர் என்பவர் முதல்வராக்கப்பட்டார். இவருக்கு எதிராக சாக்கோ என்பவரின் தலைமையில் காங்கிரஸ் கட்சிக்குள் ஒரு குழு இயங்கியது. இக்காலத்தில் இவர் பங்கேற்று நடத்திய போராட்டங்கள் குறித்தும் அரசு வன்முறை குறித்தும் கனடா நாட்டுக்குச் சென்று உயர்கல்வி பெற்றமை குறித்தும் சில செய்திகளைக் கூறியுள்ளார்.

இதுவரை ஃபாதர் வடக்கனின் குருத்துவ வாழ்க்கை குறித்து எதையும் நாம் விரிவாகத் தெரிந்துகொள்ளவில்லை. கம்யூனிஸ எதிர்ப்பணியில் அவர் செயல்பட்டமை குறித்தும் நிலவெளியேற்றத்திற்கு எதிராகக் கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து செயல்பட்டமை குறித்தும் தெரிந்துகொண்ட அளவுக்கு ஒரு கத்தோலிக்கக் குருவாக அவரது பணி எவ்வாறு இருந்தது என்பதை நாம் அறிந்துகொள்ளவில்லை. அவரது குருத்துவப் பணிதான் ஃபாதர் என்ற அடைமொழியை அவரது பெயருக்கு முன்னால் வழங்கியுள்ளது. எனவே அப்பணி குறித்து அறிந்துகொள்ளும்போதுதான் அவரைப்பற்றி முழுமையாக அறிந்துகொண்டவர்களாவோம்.

அடுத்த இதழில் பங்குக்குரு வடக்கனை நாம் சந்திப்போம்.

தொடரும்



கட்டுரை

# காலனி ஆட்சியில் துப்புரவு

## டாக்டர். சு.நரேந்திரன்

நல்ல குடிநீர் வேண்டும், சாக்கடை பராமரிப்பு வேண்டும், துப்புரவு மேம்பட வேண்டும் என்று தின, மாத இதழ்களில் எழுதியும், அகில இந்திய அளவிலும், சென்னையிலும் மாநாடுகளை நடத்தியும், சட்டமன்றத்திலும் துப்புரவு குறித்த கோரிக்கைகளை வலியுறுத்தியும் வந்ததன் பொருட்டு, 1908இல் அரசு சுகாதாரத்தை மேம்படுத்த மூன்று மடங்கும், உள்ளாட்சி அமைப்புகள் இரண்டு பங்கும் துப்புரவிற்கான மானியத் தொகையை உயர்த்தின.

ஆகவே, இவைகளை மேம்படுத்த மாநகர, நகர, மாவட்ட மற்றும் உள்ளாட்சி நடைபெறும் இடங்களிலும் கொள்ளை நோய், பிறப்பு - இறப்பு ஆகியவைகளுக்கான சட்ட திட்டங்களும், காய்கறி சந்தை, மிருகங்கள் இறைச்சிக்காக வெட்டப்படும் இடம் ஆகியவைகளைக் கண்காணிக்கத் துப்புரவு பணியாளர்களுக்குப் பயிற்சியும் மற்றும் அம்மை குத்தவும், கொள்ளை நோயைத் தடுக்க பணியாளர்களும் நியமிக்க அல்லது பணியை மேம்படுத்த நினைத்தாலும் இதற்காக அரசு அளித்த நிதி போதுமானதாக இல்லை. மேலும், நகரங்களிலும், சிறுநகரங்களிலும் துப்புரவுக்கான சட்ட திட்டங்களை அமல்படுத்த நடவடிக்கை எடுத்தாலும், அதிக சதவீத மக்களுக்குப் போதிய கல்வி அறிவு அற்ற நிலையில் சட்டத்தை மிக அரிதாகவே நிறைவேற்ற முடிந்தது. எடுத்துக்காட்டாகக் குடிநீர் குளத்தில் குளிப்பது, துவைப்பது, ஆற்றில் படுகையில் பிணத்தைப் புதைப்பது, எரிப்பது போன்றவைகளுடன் பிறப்பு - இறப்பைப் பதிவு செய்வது ஆகியவைகளைத் தவறாது செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்திக்க முடியவில்லை.

நிதிப் பற்றாக்குறை காரணமாகத் துப்புரவுக்கான பணி நகரத்தில் ஓரளவு மேற்கொண்ட அளவில் மிகக் குறைந்த அளவே கிராமப்புறங்களில் நிறைவேற்ற முடிந்தது. மேலும், இதற்காகத் துப்புரவுப் பணியாளர்கள் இங்கு நியமிக்கப்படவில்லை, மாவட்ட மருத்துவ அலுவலருக்கு நான்கு மாவட்டங்களில் மட்டுமே துப்புரவுப் பணிக்கான உதவியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

### கிராமப்புற துப்புரவு

குடிநீர் வசதியும், தினம் தேவைப்படும் சாக்கடைப் பராமரிப்பும் 63 நகராட்சிகளில் 20 நகராட்சியில்தான் (1900) நடைபெற்று வந்தன. இதன் காரணமாகத் துப்புரவுக் கமிஷனரின் ஆண்டு அறிக்கையின்படி எங்கெல்லாம் நல்ல குடிநீரும், சாக்கடைப் பராமரிப்பும் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் காலராவினால் ஏற்படும் இறப்பும், தண்ணீரினால் பரவும் நோய்களும் மற்ற இடங்களைவிட மிகக் குறைவாகவே இருந்தன.

கிராமப்புற நிலை இப்படி இருக்க நகர்ப்புறங்களிலும் 1910-1990 வரை, உதக மண்டலத்தில் மட்டுமே மூடிய சாக்கடைத் திட்டம் அமலில் இருந்தது. இதே காலத்தில் மதராஸ், வேலூர், மதுரை போன்ற இடங்களில் மூடிய சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஆக, இவைகளை நோக்க வெள்ளையர்கள் தாங்கள் வாழும் மலைவாசஸ்தலத்தையே முதலில் தூய்மையாக்கிக் கொள்ள முனைந்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

**சுதேசிகளிடமிருந்து தனித்து வசிக்கத் திட்டம்**

வெள்ளையர்கள் மண், தண்ணீர், காற்று மற்றும் வசிப்பதில் உயரமான இடம் என்ற கொள்கையின் அடிப்படையில் தனித்து வாழும் கொள்கையில், "கண்டோன்மென்ட், சிவில் லைன்ஸ், சிவில் ஸ்டேஷன், ஹில் ஸ்டேஷன்" ஆகியவைகளைத் திட்டமிட்டு சட்டப்படி உருவாக்கினர்.

உடலளவிலும், உள்நாட்டு சமூகத்தினரை விட்டு விலகி இருக்க இத்திட்டம் வகை செய்தது.

ஆனாலும், அவர்களைச் சுற்றி வசிக்கும் அவர்களுக்கான தொழிலாளிகள் இருப்பிடம் புழுதி படிந்து, குப்பைக் கூளங்களுடனே காணப்பட்டன.

இத்தருணத்தில் பிளாரன்ஸ் நைட்டிங்கேலின் செய்தி, "துப்புரவு என்பது கலாச்சாரம்" என்றது. இது காலனி அரசு காதுகளில் பாய்ந்தது. ஆனாலும் 1921 சானிடரி கமிஷனர் 1871 - 1921 வரை இந்தியாவில் துப்புரவுப் பணி (50ஆண்டுகள்) பெரும் தோல்வியே என்று கருத்து தெரிவித்தார்.

திரு. கிளீன் (Clean) இதனை உறுதிப்படுத்தும் விதமாக இந்திய மருத்துவப் பணி இயக்கம் தடுப்புமுறை மருத்துவத்தை போலித் தன்மையுடன், பாசாங்குடன், குற்ற உணர்வால் ஏற்படும் புண்படும் நிலையிலேயே மேற்கொள்கிறது என்று சாடுகிறார். (Medicine and the Raj, P. 161).

**துப்புரவு - அம்மை காலரா**

காலனி அரசு கொள்ளை நோய்களைத் தடுக்க சற்று கூடுதலான அக்கறை காட்டியது. இது மாகாண அரசு சுதேசி மக்களிடம் தடுப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வற்புறுத்தியதனால் ஆகும் 19ஆம் நூற்றாண்டின் கடைசிக் காலங்களில் நோயைத் தடுப்பதற்கு முக்கியம் தடுப்பு முறையே என்ற சித்தாந்தம் பாக்டீரியாக்களைக் கண்டுபிடித்த பிறகு, கடைப்பிடிக்கப்பட்டது. இதன் காரணமாக பெரியம்மைக்கான தடுப்பூசியை மக்களுக்குப் போட வேண்டிய முயற்சிகளை அரசு முன்னெடுத்தது. இதற்குப் பெரிய முட்டுக்கட்டை மாட்டிலிருந்து அம்மைப் பாலினால் அம்மை குத்துவது ஆகும், மேலும் இதை எல்லோரும் குத்திக்கொள்ள சில சட்டதிட்டங்களைப் போட வேண்டியதாயிற்று. ஆனாலும், தென் இந்தியாவில் அம்மை குத்திக் கொள்வதில் மக்களிடம் இருமனப் போக்கே இருந்தது. இவ்வூசி மனிதர்களிடமிருந்து தயாரித்த தடுப்பூசியைவிட சிறந்ததாகவே இருந்தது. இருப்பினும் மக்கள் குழந்தைகளை அம்மை குத்திக்கொள்ள அனுமதிக்கவில்லை. இதனால் பெரியம்மை ஒழிப்பில் ஆரம்ப காலங்களில் மிகுந்த மாற்றம் ஏற்படவில்லை.

அம்மை குத்துதல் மறுமுறை குத்தினால் இப்பாலில் தேவையான தடுப்பு ஆற்றல் உள்ளதா என ஐயப்பாடு இருந்தது. மற்றும் இவ்வம்மைப்பாலை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இந்தியா முழுமையும் அதைக் கெடாது எடுத்துச் செல்ல தொழில்நுட்ப ரீதியாகக் கடினமாக இருந்தது, இதனைக் கணக்கில் கொண்டே, நல்ல அம்மைப் பாலைத் தயாரிக்க ஆய்வு நிறுவனங்களைத் தென்னாட்டில் நிறுவ அரசு நினைத்தது. மேலும் மேலை மருத்துவக் கண்டுபிடிப்பான அம்மைப் பாலை இந்திய மக்களுக்குப் போட்டு அதன் பயன்பாட்டை அறிய ஒரு சோதனைக் களமாகக் காலனி அரசு நினைத்தது எனக் கூறலாம். (V. Gayathri, Ph.D. thesis, p. 232).

தமிழகத்தில் அம்மைப்பால் குத்தியவர்கள், இந்தியாவில் சரியான படிப்பறிவு இல்லாதவர்களாகவே இருந்தனர். இத்தனைக் கஷ்டங்கள் இருப்பினும் அம்மை குத்துவதினால் பெரியம்மையினால் ஏற்படும் இழப்பு 1990க்குப் பிறகு குறைந்தது.

ஆனால், இதற்கு மாறாக காலரா இறப்பு குறையாது மிகையாகவே இருந்தது. இருப்பினும் துப்புரவினாலே காலராவை சுயமாக ஒழிக்க முடியும் என எண்ணப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் 1880க்குப் பிறகு தஞ்சாவூர் போன்ற கொள்ளை நோய்கள் ஏற்படும் இடங்களில் இறப்பு விகிதம் கூடிக் காணப்பட்டது. இதற்குக் காரணம் சாக்கடை, போதிய வெளிச்சம், காற்றோட்டமின்மை, மக்கள் நெரிசல் எனக் கூறப்பட்டு அதற்கான துப்புரவுத் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனாலும் இதற்கான காலரா ஊசியே முக்கிய தடுப்பு முறையாக அமைந்தது.

கிராமங்களில் காலரா கொள்ளை நோயாக வரும் காலத்தைக் கணித்து அதற்கான தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. நல்ல குடிநீர், குழாய், சாக்கடையைத் தகுந்த முறையில் அப்புறப்படுத்துதல், மற்றும் வாழ்க்கை முறையை சுத்தமாக வைத்துக்கொள்வது ஆகியவைகள் மேற்கொள்ளப்பட திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைக்கு வந்தன. இது கொள்ளை நோயாக காலரா வரும் நிலையில் இறப்பைக் குறைக்காவிடினும் காலரா பரவுவதைத் தடுத்தது. அரசு நுண்ணுயிர் மேதைகளான ஹாப்கின்ஸ்

மற்றும் ராபர்ட்காக் உதவிகளையும் பெற்றுக் கொண்டது. ஆனாலும் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் கிராம மக்களைக் கொள்ளை நோய்களுக்கான தடுப்பு முறைகளையும் மருத்துவத்தையும் தெரிந்துகொள்ள அரும்பாடு பட்டதன் விளைவாக தென்னிந்திய காலனி அரசியல் இறப்பு சதவீதம் குறைந்தது. இந்த இறப்பு மேற்கூறியவைகளினால் இல்லை. இந்தியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வு, இயற்கையான நோயெதிர்ப்புத் தன்மை, சத்துணவு உண்பது ஆகியவைகளினாலேயே என்று ராபின் ஜெப்ரே (Robin Jaffrey 1488) போன்றவர்கள் கூறுகிறார்கள். இருப்பினும் ரயில், குடிநீர் விநியோகம், பாதுகாப்புத் திட்டங்கள் போன்றவைகள் இந்திய சுதந்திரத்திற்குப் பின் மிகுந்த பயனளித்தன.

கொள்ளை நோய்களுக்கும் இறப்பு சதவீதத்திற்கும் உள்ள உறவைப் பார்க்கும் போது இது குடிநீர் மற்றும் பயன்படுத்திய நீரை வெளியேற்றுவது ஆகியவைகளினால் ஏற்படும் சிக்கல் (சாக்கடை) ஆகியவைகளேயாகும். 1880இல் அரசு துப்புரவிற்கான தன் செலவினத்தைக் குடிநீர், சாக்கடைத் திட்டங்களுக்கு ஒதுக்கியது. ஆனால், கிராமப்புறங்களுக்குத் தேவையான பண ஒதுக்கீடு தேவையான அளவு இன்றி மிகவும் பற்றாக்குறையாகவே இருந்தது. அதிலும் ஒதுக்கிய நிதியும் மற்ற செயல்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டதால், கிராமப்புறங்களுக்கு மிகக் குறைந்த அளவில் துப்புரவிற்கு நிதி கிடைத்தது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது கொள்ளைநோய் வீரியமாக இருக்கும் நிலையைத் தவிர மற்ற காலங்களில் மிக வேகமாகத் தடுப்புமுறையை அரசு எடுத்துக்கொள்ளவில்லை. மலேரியாவைப் பொருத்தமட்டில் 1910ம் ஆண்டு தடுப்பு முறைக்கான முயற்சிகள் நிறுத்தப்பட்டது. (Medicine and Raj, p.208).

இதுபோல பொதுநல வாழ்வுக்கான செலவீடு 1880 இல் 25,42,070ஆக இருந்தது. 1930இல் இது 70,94,090 ஆகக்கூடியது. ஆனால் துப்புரவிற்கான செலவீடு 1912 -13இல் 11,64,319 ஆக இருந்தது. 1919-1920இல் 13,95,372ஆக மிகக் குறைவாகவே செலவழிக்கப்பட்டது.

இதைச் சுதேச இதழ்கள் வன்மையாகக் கண்டித்ததன் பொருட்டு 20ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் துப்புரவிற்கான செலவினம், காலரா மற்றும் காய்ச்சல்களுக்காகவும் கூடியதால் இறப்பவர்கள் எண்ணிக்கை ஓரளவு குறைந்த அளவில் இருந்தது. ●




19-9-2019 அன்று திருப்பூர் புதிய பேருந்துநிலையம் அருகில் என்சிபிஎச் மற்றும் என்பிடி இணைந்து நடத்திய 35வது தேசிய புத்தகத் திருவிழாவை முன்னாள் திருப்பூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ஆர்.கிருஷ்ணன் திறந்துவைத்தார். முதல் விற்பனையை மாமன்ற முன்னாள் உறுப்பினர் சு.சிவபாலன் தொடங்கி வைக்க அரிமா ஜீவானந்தம் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் மாமன்ற முன்னாள் உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன், எம்.ரவி தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், ஆர் ஈஸ்வரன் தமுஎகச, என்சிபிஎச் கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் மற்றும் கோவை கிளை மேலாளர் எஸ்.குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# எஸ்.ஆர்.எம். தமிழ்ப்பேராய விருதுகள் 2018


**25-09-2019 அன்று வழங்கப்பட்டன.**


புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது
**கவிப்பித்தன் எழுதிய 'நீவாநதி' நாவல்.**


அழ.வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது
**முனைவர் இரா.கற்பகம் எழுதிய 'மந்திர மரமும் மாய உலகங்களும்'**

பரிதிமாற் கலைஞர் தமிழ் ஆய்வறிஞர் விருது
**முனைவர் ஆ.தனஞ்செயன் எழுதிய 'விளிம்புநிலை வழக்காறுகள்'**

விருது பெற்ற படைப்பாளிகளுக்கு 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்.'
வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.





கட்டுரை

# காஷ்மீர் பிரச்சினையில் நேரு

## அ.மார்க்ஸ்

**காஷ்மீர் குறித்த நேருவின் அணுகல்முறையும் பா.ஜ.க வின் அணுகல் முறையும் எதிர் எதிரானவை**

ஜம்மு காஷ்மீர் மற்றும் லதாக் என காஷ்மீர் இப்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பகுதிகளுமே இன்று மத்திய அரசின் அதிகாரத்திற்குள் (Union Territories) கொண்டு செல்லப்பட்டு விட்டது. காஷ்மீரை இவ்வாறு இரண்டாக மட்டுமல்ல ஜம்மு / காஷ்மீர் பள்ளத்தாக்கு / லதாக் என மூன்றாகப் பிரிப்பதே ஆர்.எஸ்.எஸ் – ஜனசங் அமைப்புகளின் நோக்கங்களாக இருந்து வந்தன. இதை அவர்கள் வெளிப்படையாகவே கோரி வந்தனர்.

ஆர்.எஸ்.எஸ் பின்னணியுடன் செயல்பட்ட பால்ராஜ் மதோக்கின் “பிரஜா பரிஷத்” அமைப்பு இந்தக் கருத்தை முன்வைத்தது. இயக்கம் நடத்தியது. இந்திய ஆட்சி அதிகாரம் வெள்ளை ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்திய அரசுக்கு மாறியபோது அந்த ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய காங்கிரஸ் கட்சிக்குள்தான் இன்றைய பா.ஜ.கவும் அன்று இருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதோடு,

(i)வல்லபாய் படேல், சியாமா பிரசாத் முகர்ஜி, குல்சாரிலால் நந்தா, லால் பகதூர் சாஸ்திரி எனப் பலரும் நேரடியாக இந்து மகாசபையில் இல்லாவிட்டாலும் கூட இந்துத்துவக் கருத்து உடையவர்களாகவே இருந்தனர் என்பதையும்,

(ii)பொதுவாகக் காங்கிரசே அப்போது பெரிதும் உயர்சாதி ஆதிக்கத்தின் கீழ் வலதுசாரிப் பண்புடன்தான் விளங்கியது என்பதையும்,

(iii)காந்தியும் நேருவும் உண்மையில் வெள்ளைக்காரர்களுக்கு எதிராக மட்டுமின்றி இவர்களையும் எதிர்த்துத்தான் அரசியல் செய்ய நேர்ந்தது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

காந்தி கொலைக்குப் பின்தான் இந்துமகாசபை, ஆர்.எஸ்.எஸ் முதலான அமைப்புகளில் உள்ளோர் காங்கிரசுக்குள் இருக்க இயலாது எனும் முடிவெடுக்கப்பட்டபோது காங்கிரசிலிருந்து

பிரிந்தவர்கள்தான் இன்றைய பா.ஜ.கவின் முன்னோடியான "பாரதீய ஜனசங் கட்சி" யாக உருவெடுத்தனர்.

காஷ்மீர் குறித்த என் நூலில் (என்ன நடக்குது காஷ்மீரில்?) நேரு இந்தியாவுடனான இணைப்பின்போது காஷ்மீருக்கு அளித்த வாக்குறுதியை எவ்வாறெல்லாம் மீறினார் என்பதை விரிவாகச் சொல்லியுள்ளேன். ஒப்பந்தப்படி 370வது பிரிவின் கீழான உரிமைகளை நீர்க்கச் செய்ததிலும், கருத்துக் கணிப்பு நடத்தாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்து ஷேக் அப்துல்லாவைச் சிறையிட்டதிலும் நேருவின் செயல்பாட்டை யாருமே நியாயப்படுத்திவிட இயலாது என்பதிலும் ஐயமில்லை.

ஆனால் அதே நேரத்தில் நேருவின் அணுகல்முறை நூறுசதம் ஆர்.எஸ்.எஸ், ஜனசங் அணுகல் முறையிலிருந்து மாறுபட்டு இருந்தது என்பதைப் புரிந்து கொள்வது அவசியம். எக்காரணம் கொண்டும் ஜம்மு காஷ்மீரை மூன்று பகுதிகளாகப் பிரிக்க வேண்டும் என்பதை நேரு ஏற்கவில்லை. இன்று மோடியும் அமித்ஷாவும் வெறிகொண்டு பள்ளத்தாக்கு முஸ்லிம் மக்களை கொடுஞ்சிறைக்குள் முடக்கி அவர்களை வழிக்குக் கொண்டுவர வேண்டும் என முயல்கிறார்களே, அப்படியும் அவர் நினைத்ததில்லை.

காஷ்மீர் பிரச்சினையை மிக விரிவாகத் தொடர்ந்து பல பத்தாண்டுகளாக ஆய்வு செய்து அம் மக்களின் நியாயங்களை மகா துணிச்சலுடன் பேசிவரும் அறிஞர் ஏ.ஜி.நூரானி இதை விரிவான ஆதாரங்களுடன் தொடர்ந்து கூறி வந்துள்ளார். இப்போது Frontline இதழில் எழுதியுள்ள கட்டுரையிலும் அதை விரிவாகச் சொல்லுகிறார். அதை இங்கு, இன்று அவர் சொல்வதென்பது நேருவைக் காப்பாற்றும் நோக்கில் அல்ல. மாறாக இன்று மோடி- அமித்ஷா ஆட்சி காஷ்மீரில் மேற்கொண்டுவரும் வரலாறு காணாத ஒடுக்குமுறை எவ்வகையிலும் அவர்கள் நினைக்கும் நோக்கத்தை நிறைவேற்ற உதவாது என்பதைச் சுட்டிக் காட்டத்தான்.

சற்று விரிவாகப் பார்க்கலாம்.

**"ஒடுக்குமுறையும் இராணுவ அடக்குமுறையும் மக்களை ஒருங்கிணைக்கப் போவதில்லை" - நேரு**

ஜவஹர்லால் நேரு அடிப்படையில் ஒரு ஜனநாயகவாதி. அவர் தவறுகளே செய்யாதவர் என்பதல்ல. அவரைக் கொண்டாடுவதோ கும்பிடுவதோ நம் நோக்கமல்ல. ஆனால் வைகோவைப்போல ஒரே அடியாக மோடியையும் நேருவையும் ஒன்றாக்கிவிட முடியாது. 2002 குஜராத் படுகொலைகளுக்குப் பின்னும் குஜராத்திற்குச் சென்று, தமிழர்கள் வாழும் பகுதியில் நரேந்திர மோடிக்காகப் பிரச்சாரம் செய்தவர்தான் வைகோ என்பதை நாம் மறந்துவிட இயலாது.

ஷேக் அப்துல்லாவின் முன்னிலையில் நேருவும் மன்னன் ஹரிசிங்கும் செய்துகொண்ட இணைப்பு ஒப்பந்தத்திற்கு (Instrument of Accession, 1949 Dec 31). பின்னர் பாகிஸ்தானுடன் இந்தியா செய்துகொண்ட அசையாநிலை ஒப்பந்தத்திற்கும் (Stand-still Agreement-, 1947, Oct 26) மத்தியில்தான் நேருவின் இந்தியா அய்.நா அவையில் ஒரு முறை அல்ல இருமுறை இந்த ஒப்பந்தங்களை முன்வைத்து இது ஒரு தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதை ஏற்றுக் கொண்டது. அதன் மூலம் அய்.நா மத்தியஸ்தத்திற்கு ஒரு வரலாற்று பூர்வமான ஆதாரத்தையும் பதிவு செய்தது என்பதை எல்லாம் நாம் மறந்துவிடலாகாது. நேருவுக்குப் பின்வந்தவர்கள் இது மூன்றாவது முகமை ஏதும் தலையிடமுடியாத உள்நாட்டுப் பிரச்சினை எனச் சொல்வதற்கு நேருவின் இந்தச் செயல்பாடுகள்தான் இன்றளவும் ஒரு தடையாக உளளதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்படிச் சொல்வது எதுவும் நேருவைக் குற்ற நீக்கம் செய்து இந்தப் பிரச்சினையிலிருந்து விலக்குவதாகாது. ஆனால் இந்திராகாந்தி உட்பட நேருவுக்குப் பின்வந்தவர்களின் அணுகல்முறைக்கும் நேரு இந்தப் பிரச்சினையை அணுகியதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

நேரு காலத்திலேயே ஒப்பந்தம் மீறப்பட்டது. நேருவும் காஷ்மீரை விட்டுவிடத் தயாராக இல்லை. ஆனால் நேருவின் அணுகல்முறை காஷ்மீர மக்களின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்படுவதன் மூலம் அவர்கள் மத்தியில் நம்பிக்கை ஊட்டி, ஒரு ஒப்புதலை அவர்களிடம் உருவாக்க வேண்டும் என்பதாக இருந்தது. எக்காரணம் கொண்டும் அவர்களது உரிமைகளைப் பறிப்பதோ, இராணுவத்தைக் கொண்டு அவர்களை அடக்குவதோ அவரது அணுகல் முறையாக இல்லை. நேரு அப்போது பேசிய இரண்டு உரைகளைச் சற்றுக் கூர்ந்து கவனிப்போம்.

"காஷ்மீர மக்களை நம்மை நோக்கி ஈர்ப்பதற்கு நமது மதச்சார்பற்ற அணுகல்முறை மற்றும் நமது அரசியல் சட்டம் ஆகியவற்றைக் காட்டிலும் வேறென்ன சாட்சியங்கள் இருக்க முடியும்?

ஜனசங்கம் (அதாவது பா.ஜ.க) அல்லது வேறேதும் ஒரு மதவாதக் கட்சி மேலுக்கு வரும் ஒரு சூழ்நிலையில் என்ன ஆகும் என ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள். கணந்தோறும் ஜனசங்கம் அல்லது ஆர்.எஸ்.எஸ் தம்மைப் பிறாண்டித் தொல்லை செய்யும் நாட்டில் ஏன் அவர்கள் (காஷ்மீரிகள்) இருக்க வேண்டும்? அவர்கள் வேறு எங்கு வேண்டுமானாலும் போவார்கள் நம்மோடு இருக்க மாட்டார்கள்." *(ஜனவரி 01, 1952ல் கொல்கத்தாவில் பேசியது. தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், தொகுதி 17, பக் 78))*

**பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவர் பேசியது:**

"நமது அரசியல் சட்டத்தின் மீதான எல்லா மரியாதைகளுடனும் சொல்கிறேன். உங்கள் அரசியல் சட்டம் என்ன சொல்கிறது என்பது பெரிதல்ல. காஷ்மீர் மக்கள் அது வேண்டாம் என்றால் அது அங்கே செயல்படுத்தப் படாது. ஏனெனில் அவர்கள் ஏற்காத பட்சத்தில் பிறகென்ன மாற்றாக இருக்க முடியும்? அவர்கள் அதை ஏற்கவில்லை என்பதாகக் கொண்டு கட்டாயமாக அவர்கள் மீது திணிப்பதும் வற்புறுத்துவதும்தானே? அப்படி நாம் அவர்களை வற்புறுத்தப் போகிறோமா? அதன்மூலம் தவறாக வழிநடத்தப்பட்ட சிலர் வெளிநாடுகளில் இருந்து கொண்டு நமக்கு எதிராகப் பரப்பும் குற்றச்சாட்டை நியாயப்படுத்தப் போகிறோமா?

"உத்தரப் பிரதேசம், பீஹார் அல்லது குஜராத் போன்ற ஒரு பகுதியைக் கையாள்வது போல காஷ்மீரையும் அணுகலாம் என நினைக்காதீர்கள். வரலாற்று ரீதியாக மட்டுமின்றி புவி இயல் ரீதியாகவும் இன்னும் எல்லா வகைகளிலும் ஒரு குறிப்பான பின்னணியுள்ள பகுதி அது. நமது பகுதிக்குப் (local) பொருத்தமான கருத்துக்கள் மற்றும் முன் அனுமானங்களை (prejudices) எல்லாப் பகுதிகளுக்கும் நாம் கொண்டுசெல்ல முயன்றால் நாம் எந்தக் காலத்திலும் ஒருமைப்பாட்டைக் கட்ட (consolidate) முடியாது. எல்லோரையும் ஒருங்கிணைப்பதில் நாம் உண்மையாக இருந்தால் விசாலமான மனத்துடன் உண்மைகளை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் உடையவர்களாக நாம் இருக்க வேண்டும். உண்மையான ஒருங்கிணைப்பு என்பது உள ரீதியாகவும் இதயபூர்வமாகவும் நிகழ வேண்டும்.

ஏதேனும் உங்களின் ஒரு சட்டப்பிரிவை பிற மக்கள் மீது திணிப்பதால் அது சாத்தியப்படப் போவதில்லை." *(நாடாளுமன்ற உரை, ஜூன் 26, 1952).*



நேரு உலக வரலாற்றை அறிந்தவர். உலக வரலாற்றை எழுதியவர். இங்கு அவர் இதை உளமாறச் சொல்வதை நாம் விளங்கிக் கொள்கிறோம். இந்தச் சொற்களை அவர் இதோ இன்று நரேந்திரமோடியையும், அமித்ஷாவையும் நோக்கிச் சொல்லிக் கொண்டிருப்பதாகவே உணர்கிறோம்.

**மக்கள் விரும்பாவிட்டால் துப்பாக்கி முனையில் காஷ்மீர மக்களை நாம் வைத்திருக்க முடியாது" - நேரு**

காஷ்மீரை இரண்டாக அல்ல மூன்றாகப் பிரிப்பதே சங்கிகளின் நோக்கம் என்பதையும் இன்று அதில் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி இக்கட்டுரை தொடங்கியது. இப்படி காஷ்மீர் துண்டாடப் படுவதை ஷேக் அப்துல்லாவும் பின்னாளில் ஃபரூக் அப்துல்லாவும் கடுமையாக எதிர்த்தனர். பெரும்பான்மை முஸ்லிம்களாக இருக்கும் ஒரு பகுதியில் தாம் சிறுபான்மையாக இருக்க சங்கிகள் விரும்பவில்லை. முடி இழந்த மன்னன் கரன்சிங்கும் இதை ஆதரித்தார். ஜம்முவுக்கு மட்டுமாவது தான் தொடர்ந்து தலைவராக இருக்கலாம் என்கிற நப்பாசை அவருக்கு. ஆனால் இப்படியான முயற்சி இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு இரண்டரை மாவட்டம் போக மீதமுள்ள முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள காஷ்மீர் பூராவையும் வெள்ளித் தட்டில் வைத்து பாகிஸ்தானுக்கு அளிப்பதிலேயே இது முடியும் என அப்துல்லா தரப்பில் எச்சரிக்கப்பட்டது. அன்றைய உள்துறை அமைச்சராக இருந்த வல்லபாய் படேலிடம் நேருவும் இது குறித்து எச்சரித்தார்.

ஆர்.எஸ்.எஸ் ஆதரவுடன் பால்ராஜ் மதோக்கின் பிரஜா பரிஷத் இயக்கம் ஜம்மு காஷ்மீரை மூன்றாகப் பிரிப்பதற்கான போராட்டத்தைத் தொடங்கியபோது ஜவஹர்லால் நேரு தனது நண்பரும் அப்போதைய மே.வங்க முதல்வருமான பி.சி ராய்க்கு எழுதிய கடிதத்தில் (ஜூன் 29, 1953),

"இந்து வகுப்புவாதிகள் இப்படியான ஒரு இயக்கத்தை ஜம்முவில் தொடங்கினால் முஸ்லிம் வகுப்புவாதிகள் காஷ்மீரில் ஏன் செயல்படக் கூடாது? இன்றைய நிலை என்னவெனில் இப்போது நாம் கருத்துக் கணிப்பை நடத்தினால் காஷ்மீரில் உள்ள பெரும்பான்மை முஸ்லிம்கள் நமக்கு எதிராகவே வாக்களிப்பார்கள். சிறிய அளவில் சில வன்முறைகளும் கூட நிகழலாம்... எனவே காஷ்மீர் மாநிலத்தை இந்தியாவுடன் இணைப்பதற்கான பிரஜா பரிஷத்தின் இந்த இயக்கம் நேர்மாறான விளைவைத்தான் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. ஜம்மு பகுதியைப் பொருத்த மட்டில் பெரும்பான்மையான இந்துக்கள் (இந்தியாவுடனான) நெருக்கமான இணைப்பையே தாம் விரும்புகிறோம் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். என்ன நடந்தாலும் ஜம்மு இந்தியாவை விட்டுப் போகாது. யாருக்கும் அதில் அய்யம் ஏதுமில்லை. காஷ்மீர் பள்ளத்தாக்கில்தான் நாம் பெரிய அளவில் பிரச்சினைகளை எதிர்கொள்ளப் போகிறோம். பிரஜா பரிஷத் இயக்கத்தின் விளைவாக அதை இன்று நாம் இழக்கும் நிலையில் உள்ளோம். உளவியல் மட்டத்தில் நாம் அதை ஏற்கனவே இழந்துவிட்டோம். பழைய நிலையைத் திரும்ப அடைவது இப்போது கடினமாகிவிட்டது. காஷ்மீரில் வாழும் மக்களின் நம்பிக்கையை வென்றால்தான் நாம் காஷ்மீரை வெல்ல முடியும். இறுதி ஆய்வில் நாம் வந்தடைவது இதுதான். மக்கள் நம்மை விரும்பவில்லை என்பது தெளிவானால் துப்பாக்கி முனையில் அதை நாம் வைத்திருக்க முடியாது என்பது தெளிவு. முதல்முறையாக காஷ்மீரில் இப்போது 'இந்தியப் படைகளே வெளியேறு' எனும் மக்கள் குரல் ஒலிக்கிறது." (ஜவஹர்லால் நேருவின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் 22ம் தொகுதி, பக் 203- 220.)

காஷ்மீர் குறித்த ஒரு ஆழமான புரிதல் உடைய ஆய்வாளரும் சட்டவியல் நிபுணருமான ஏ.ஜி.நூரானி சொல்வார்: "நேருவுக்குப் பின் வந்த மத்திய அரசுகள் எல்லாம் காஷ்மீர் மக்களை வெளிப்படையாக உதாசீனம் செய்தன. இந்தியாவுடனான இணைப்பை காஷ்மீர் மக்கள் தொடக்கம் முதலாகவே விரும்பவில்லை. பாகிஸ்தானிலிருந்து வந்த ஆயுதம் தாங்கிய குழுக்களின் தாக்குதல் நடவடிக்கைகள்தான் ஷேக் சாகிபின் (ஷேக் அப்துல்லா) கைகளை அழுத்தி இந்தியாவுடனான இணைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட வைத்தன..."

பிரிவினைக் கலவரத்தின்போது பாக்கிலிருந்து இரு திசைகளில் வந்த இரண்டு தனியார் படையினரின் தாக்குதலிலிருந்து தற்காலிகமான ஒரு பாதுகாப்பிற்காக தன் விருப்பத்தை மீறி ஷேக் அப்துல்லா இணைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார் என்பதுதான் இதன் பொருள்.

பேட்ரிக் கார்டன் வாக்கர் எனும் பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவரிடம் நேரு காஷ்மீர் மாநிலத்தை இரு நாடுகளுடனும் இணைப்பது என்றொரு கருத்தை முன்வைத்தார் எனவும் நூரானி குறிப்பிடுகிறார். இணைப்பிற்கு முன்னதாக 1947 அக்டோபர் 25 அன்று நடந்த அமைச்சரவைப்

பாதுகாப்புக்குழு (Defence Committee of the Cabinet) ஆலோசனைக் கூட்டக் குறிப்பு (minutes of the meeting) சொல்லும் செய்தி முக்கியமான ஒன்று. காஷ்மீரை இந்தியாவுடன் கட்டாயமாக இணைத்துக் கொண்டவராக இன்று கருதப்படும் நேரு சொன்னார்: "கேள்வி என்னவெனில் இந்தத் தற்காலிக இணைப்பு என்பது பொதுவில் காஷ்மீர் மக்களை இந்தியாவுக்கு ஆதரவாக இட்டுச் செல்லுமா இல்லை அது ஒரு எரிச்சலூட்டும் அனுபவமாகத்தான் அவர்களுக்கு அமையுமா என்பதுதான்."

**ஏன் நேரு அப்படிச் சொன்னார்?**

ஏனெனில் மக்கள் அப்போது இந்தியாவுடன் இணையத் தயாராக இல்லை. இன்றுள்ள மன நிலையில்தான், அதாவது இந்தியாவுடன் இணைந்திருப்பது சாத்தியமில்லை எனும் மனநிலையில்தான் அப்போதும் காஷ்மீர் மக்கள் இருந்தனர். முன்னாள் ஜம்மு – காஷ்மீர் திவானும், தற்போது குப்பைக் கூடையில் தூக்கிக் கடாசப்பட்டுள்ள 370வது அரசியல் சட்டத்தின் பிரிவை வடிவமைத்தவருமான கோபால்சாமி அய்யங்கார் இந்த அமைச்சரவைக் கூட்டம் நடந்த அடுத்த நாள், "இந்தியாவுடனான உடனடியான இணைப்பு மேலும் அதிக எதிர்ப்பிற்கே வழிவகுக்கும்" எனக் கூறியது குறிப்பிடத் தக்கது. பிரிவினையை ஒட்டி இங்கு மேலெழுந்த முஸ்லிம் வெறுப்பு அரசியல் காந்தியின் படுகொலை, வலதுசாரி இந்துத்துவ அமைப்புகளின் திரட்சி ஆகியன காஷ்மீர முஸ்லிம்களை நம்பிக்கை இழக்க வைத்தன.

**வரலாறு நேருவை விடுதலை செய்யும்**

தொடக்கத்தில் இருந்த இந்த மனநிலை பிரஜா பரிஷத் மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளின் நடவடிக்கைகளால் போகப்போக இன்னும் அதிக இந்திய வெறுப்பாக மாறியது என்பதற்கு நூரானி பல வரலாற்று ஆதாரங்களை முன்வைக்கிறார். கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடத்தினால் ஷேக் அப்துல்லா வெல்வார் எனத் தொடக்கத்தில் நம்பப்பட்டது. அன்று ஷேக் அப்துல்லா வெல்வார் என்றால் ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணையும் என்பது



பொருள். மே 14, 1948 அன்று இந்திரா அவரது தந்தைக்கு எழுதிய கடிதத்திலும் ஷேக் அப்துல்லா வெல்வார் எனும் நம்பிக்கையையே காண்கிறோம்.

ஆனால் ஐந்தாண்டுகளில் நிலைமை மாறியது. ஜூலை 14, 1953 அன்று குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத், ஷேக் அப்துல்லா நம்பிக்கை இழந்துவிட்டதாக நேருவிடம் குறிப்பிட்டார். "95 சத காஷ்மீர மக்கள் இந்தியாவுடன் இருக்க விரும்பவில்லை" என நேருவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ஜெயப்பிரகாஷ் நாராயணனும் (மே1, 1956) பதிவு செய்கிறார்.

இடையில் இப்படி காஷ்மீர மக்கள் மத்தியில் இந்திய வெறுப்பு உருவானதில் ஆர்.எஸ்.எஸ் வழிகாட்டலில் 'பிரஜா பரிஷத்' மேற்கொண்ட வெறுப்பு நடவடிக்கைகள் முக்கிய பங்கு வகித்தன. இவர்களின் செயல்பாடுகள் இந்த நிலைக்குத்தான் கொண்டு செல்லும் என்பதை நேருவும் உணர்ந்திருந்தார். தனது எழுத்துக்களிலும் உரைகளிலும் அதை அவர் பதிவு செய்துகொண்டே இருந்தார். 1952 புத்தாண்டு தினத்தில் கல்கத்தாவில் நடந்த பேரணி ஒன்றில் பேசும்போது, "நாளை ஷேக் அப்துல்லா காஷ்மீர், பாகிஸ்தானுடன்தான் சேரவேண்டும் என விருப்பம் தெரிவித்தால் நானோ இல்லை நமது படைகள் அனைத்துமோ ஒன்றும் செய்ய இயலாது. அவர்களின் தலைவர் அப்படித் தீர்மானித்தால் அதுவே நடக்கும். ஜனசங் மற்றும் ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்) ஆகியவற்றின் நடவடிக்கைகள் அனைத்தும்

இந்த அம்சத்தில் பாகிஸ்தானின் கைப்பாவையாகச் செயல்படுவதாகவே அமைகின்றன. இவர்களின் வகுப்புவாத நடவடிக்கைகளால் தாம் வெறுத்துப் போயுள்ளோம் என காஷ்மீர மக்கள் கூறுகின்றனர். ஜனசங்கம் மற்றும் ஆர்.எஸ்.எஸ்சால் தொடர்ந்து தாம் முற்றுகை இடப்படும் ஒரு நாட்டில் அவர்கள் ஏன் இருக்க வேண்டும்? அவர்கள் வேறு எங்கு வேண்டுமானாலும் போவார்கள். நம்மோடு இருக்க மாட்டார்கள்.'' (ஜவஹர்லால் நேருவின் 'தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், 17ம் தொகுதி, பக்.77-78).

ஆம். காஷ்மீர் பிரச்சினையின் வரலாற்றை நாம் ஊன்றி ஆய்வு செய்தால் அது நேருவை அவர் மீதான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்வதாகவே அமைகிறது. காஷ்மீர் முழுமையாகச் சிதையாமல் இந்தியாவுடன் இருக்க வேண்டும் என எல்லோரையும் போலவே நேருவும் விரும்பினார். காஷ்மீர் மட்டுமென்ன பாகிஸ்தானும் கூட எல்லோருடனும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதானே காந்தி உட்பட எல்லோரது விருப்பாகவும் இருந்தது. ஆனால் இந்தத் துணைக் கண்டத்தை ஒரு மதச்சார்பற்ற அடையாளத்திலிருந்து பிரித்தெறிந்து குறிப்பான மத அடையாளத்துடன் கூடிய நாடாக மாற்றும் நோக்கம்தானே இன்றைய இந்த எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஊற்றுக் கண்ணாய் இருந்தது. ஒரு இருபதாண்டுகளுக்கு முன்பு கூட ஆர்.எஸ்.எஸ்சின் செய்தித் தொடர்பாளர் எம்.ஜி வைத்யா, காஷ்மீர் மாநிலத்தை மூன்றாகப் பிரிப்பது "பள்ளத்தாக்கில் மேலெழும்பியுள்ள நச்சு நடவடிக்கைகளை (virulence) கட்டுக்குள் கொண்டுவர உதவும்'' எனச் சொல்லவில்லையா? (Times of India, Sept 04, 2000). அதாவது இன்று ஆக்கப்பட்டுள்ளது போல பள்ளத்தாக்கிலுள்ள முஸ்லிம் மக்களை ஒரு மிகப்பெரிய அடக்குமுறை முகாமாக மாற்றிவிடலாம் என்பதுதானே இதன் பொருள்.

நேருவைப் பொருத்தமட்டில் இயல்பில் அவர் ஒரு ஜனநாயகவாதி. ஒரு நாத்திகர். இயல்பான மதச்சார்பற்ற மனநிலை கொண்ட முற்போக்குச் சிந்தனைகளுக்குச் சொந்தக்காரர். அவரது இரு முக்கிய நூல்களும் அதற்குச் சான்றாக அமைகின்றன. இங்கிருந்த சங்கிகள் எல்லோரும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் ஹிட்லர், முசோலினி ஆகியோருடன் தொடர்பு வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் முசோலினியின் அழைப்புகளை உதாசீனப் படுத்தியவர். பாபர் மசூதிக்குள் இராமர் சிலை வைக்கப்பட்டபோது முஸ்லிம்களைக் காட்டிலும் அதிகம் கலங்கியவர். எதிர்காலத்தில் இது மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் எனப் பதறியவர். ஆனாலும், இந்த நாட்டின் பிரதமராகவும், பெரும் மக்கள் ஆதரவு பெற்றவராக இருந்தபோதும் அன்று அந்தச் சிலைகளை அப்புறப்படுத்த இயலாதவராக இருந்த அன்றைய அரசியல் சூழலையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

இந்தப் பின்னணியில்தான், ஆர்.எஸ்.எஸ்சும் ஜனசங்கமும் காங்கிரசுக்குள்ளும், அமைச்சரவைக்குள்ளும் இருந்த நிலையில்தான் காஷ்மீர் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. காஷ்மீர் சிதையாமல் முழுமையாகவும் சுதந்திரமாகவும் இந்திய யூனியனில் இணைந்திருக்க வேண்டும் என்றே நேரு விரும்பினார். அவர் காஷ்மீர் இந்தியாவுடனேயே இருக்க வேண்டும் என விரும்பியதும் முயற்சித்ததும் உண்மை. ஆனால் இப்படிச் சிதைத்தோ இல்லை, முஸ்லிம்களை ஒரு பெரிய இராணுவ முகாமிற்குள் அடைத்தோ இந்த ஒருமைப்பாட்டைக் காக்க வேண்டும் என அவர் கனவிலும் நினைத்தார் இல்லை.

நேரு காஷ்மீர் மக்களுடனான ஒப்பந்தத்தை மீறியதும், வாக்கெடுப்பு நடத்தாமல் அரசைக் கலைத்து அப்துல்லாவை நெடுநாட்கள் வீட்டுக்காவலில் வைத்திருந்ததும் உண்மை. ஆனால் இந்தச் செயல்பாடுகள் மட்டுமே அன்றைய வரலாறு அல்ல என்பதைச் சொல்லத்தான் ஏ.ஜி.நூரானி போன்ற அறிஞர்கள் நம்முன் இத்தனை ஆதாரங்களுடன் அன்றைய வரலாற்றை அவிழ்க்கின்றனர். வரலாறு நேருவை விடுதலை செய்யும்.

***ஒரு பின் குறிப்பு: இந்தக் கட்டுரையை நான் திருத்தி அனுப்பும் இக்கணத்தில் (செப் 23, 2019 2 மணி) அமித்ஷா 370 வது பிரிவை தாங்கள் அழித்தொழித்ததை நியாயப்படுத்தி மும்பையில் நடத்தும் பேரணியில் பேசிக் கொண்டுள்ளார். "நேருவே இன்றைய எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம். அன்று பாகிஸ்தானுடனான போரை அவர் இடை நிறுத்தம்*** (cease-fire) ***செய்திராவிட்டால் இன்று காஷ்மீர் பிரச்சினையே இருந்திருக்காது. நேருவின் இடத்தில் வல்லபாய் படேல் இருந்திருந்தால் அது (போர் நிறுத்தம்) நடந்திருக்காது.." – எனக் கூறிக் கொண்டுள்ளார்.***

(மேற்கோள்கள் பல ஏ.ஜி நூரானியின் Kashmir: Murder of insaniyat எனும் (Frontline Aug 30, 2019) கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன)




# திரும்பிப் பார்க்கும் செவ்வியல் தமிழ்

சுபாஷ் சந்திரபோஸ்

**வ**றுமையில் வாடியவர்கள் பொருளைப் பெற்றபின் மகிழ்ச்சியோடு வருகின்றார்கள். அப்போது வறுமையால் வாடிய ஒரு கூட்டம் எதிர்ப்படுகின்றது. தாம் பொருள் பெற்றதைப் போன்று அந்தக் கூட்டத்தாரும் பெறவேண்டும் என்னும் நல்லெண்ணத்தில் வழி கூறி நெறிப்படுத்தலே ஆற்றுப்படை என்னும் இலக்கியமாகும்.

பத்துப்பாட்டு என்னும் பத்துப் பழந்தமிழ் பாடல்களில் ஐந்து ஆற்றுப்படை நூல்களாகும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை என்பவை அவை. இவற்றுள் முன்னுள்ளதைத் தவிர மற்றைய நான்கும் வறுமையில் வாடிய கலைஞர்களைப் பரிசில் பெற்ற கலைஞர்கள் மன்னர்களிடமும் வள்ளல்களிடமும் பரிசில் பெற ஆற்றுப்படுத்துபவை ஆகும்.

பொருள் வேண்டியோரை ஆற்றுப்படுத்தும் பாடல்கள் பற்றியே தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் / ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் / பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் / சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும் (தொல். பொருள். *88 : 3-6*).

கூத்தர், பேரியாழ் இசைக்கும் பெரும்பாணர், சிறுயாழை இசைக்கும் சிறுபாணர், ஏர்க்களமும் போர்க்களமும் பாடும் பொருநர் என இவர்களுக்குப் பொதுவானவர் ஆடற்கலையில் வல்ல பெண்பாலர் விறலியர். மூன்று வகைக் கலைப் பிரிவினருக்கும் ஆடற்கலை பொதுவானது என்பதால் கூத்தர், பாணர், பொருநர் என மூவரையும் குறிப்பிட்டு அடுத்துத் தொல்காப்பியர் விறலியைக் குறிப்பிடுகின்றார்.

மலைபடுகடாம் கூத்தரை ஆற்றுப்படுத்துவது: சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை பாணரை ஆற்றுப்படுத்துவன. பொருநராற்றுப்படை

களம்பாடுவோரை ஆற்றுப்படுத்துவது. இவை நான்கும் வறுமையில் வாடும் கலைஞர்களைப் பொருள் பெறுவதற்காக ஆற்றுப்படுத்துபவை ஆகும் இறைவன் அருள்பெற்ற புலவர் ஒருவர் பெறாத புலவரை ஆற்றுப் படுத்துவதே திருமுருகாற்றுப்படை.

முருகாற்றுப்படை என்பதற்கு முருகன்பால் வீடுபெறுவதற்குச் சமைந்தான் ஓர் இரவலனை ஆற்றுப்படுத்து வது என்பது பொருளாகக் கொள்க (தொல்.பொருள். 91) நச்சினார்க்கினியர் விளக்கம் அளிக்கின்றார். எனவே, தொல்காப்பியர் குறிப்பிடும் ஆற்றுப்படை அமைப்பில் இருந்து திருமுருகாற்றுப்படையை ஒரு வளர்ச்சி நிலையாகவே கொள்ளவேண்டும்.

நச்சினார்க்கினியர் முருகாற்றுப்படை என்று குறிப்பிடும் இந்நூலுக்குப் புலவராற்றுப்படை என்னும் பெயரும் உள்ளது. இருப்பினும் திருமுருகாற்றுப்படை என்னும் பெயரே பெருவழக்காக உள்ளது. பழந்தமிழ் வழிபாட்டு முறை சிறு தெய்வ வழிபாட்டு முறையில் அமைந்திருக்கும். எட்டுத்தொகையில் பரிபாடல், கலித்தொகை போலவே பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை மற்றவற்றை விடக் காலத்தால் பிற்பட்டது. திருமுருகாற்றுப் படையைப் பாடிய நக்கீரர் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர் என்பது உறுதியாகும் (பத்து. ஆராய். 632) என மா.இராசமாணிக்கனார் குறிப்பதும் இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

காலந்தோறும் ஆற்றுப்படை நூல்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அவை மேலுள்ள இருவகை அமைப்புகளிலேயே அடங்கிவிடும். இன்னொரு வகையான ஆற்றுப்படை நூல் மிகவும் வேறுபட்ட நிலையில், இக்காலத்திற்குத் தேவை என்னும் நிலையில் எழுதப்பட்டுள்ளது. வெளிவந்த ஒரே மாதத்திற்குள் (ஜூலை, 2019) பல பதிப்புகளைக் கண்டுள்ளது கவிஞர் வைரமுத்து எழுதியுள்ள தமிழாற்றுப்படை .

எல்லா ஆற்றுப்படை நூல்களும் செய்யுள் நடையில் இருக்க, தமிழாற்றுப் படை மட்டும் உரைநடையில் இருக்கிறது. பரிசில் பெற்ற கூத்தரும் பாணரும் பொருநரும் பரிசில் பெறாது வறுமையில் வாடுவோரை ஒரு மன்னன் அல்லது ஒரு வள்ளலிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்துவர். ஆனால், கவிஞர் வைரமுத்து தற்போது மக்களாலேயே தீண்டத்தகாத மொழியாகக் கருதப்படும் தமிழை இருபத்து நான்கு பெரு மக்களிடம் ஆற்றுப்படுத்துகின்றார்.

இந்த இருபத்து நான்கு பெருமக்களும் குறியீடுகள்தாம். இவர்கள் எல்லோரும் தமிழ் மொழியோடு தொடர்புடையவர்கள். ஏதாவது ஒருவகையில் தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள்; தமிழின் மேன்மையை வெளிப்படுத்தியவர்கள். கால அடிப்படையில் சிலரை ஒன்று சேர்க்கலாம்; பாடுபொருள் அடிப்படையில் ஒன்று சேர்க்கலாம்; தமிழரிடம் விழிப்புணர்வை ஊட்டிய அடிப்படையில் ஒன்று சேர்க்கலாம். சுருக்கமாகச் சொன்னால் தமிழர் வரலாறே இந்த இருபத்து நான்கு பேருக்குள் அடங்கி விடும்.

பொருள் பெற்ற கலைஞர், பொருள் பெறாதவரை ஆற்றுப்படுத்தும் ஆற்றுப்படை நூல்களில் இருந்து, தமிழாற்றுப்படை சற்று வேறுபடுகின்றது. ஒருவரிடம் இல்லை; இருபத்து நான்கு பெருமக்களிடம் நூலாசிரியர் தமிழை ஆற்றுப்படுத்துகின்றார்.

தமிழின் வளம் குன்றிவிட்டதா? இத்தனை பெருமக்களிடம் தமிழை நூலாசிரியர் ஆற்றுப்படுத்துவதற்கான காரணம் என்ன? என்றொரு வினா எழலாம். நாம் எவ்வளவுதான் கண்டும் காணாமலும் இருந்தாலும் தமிழ் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும். தமிழைத் தாய்மொழியாகப் பெறாதவர்கள் கொடுத்த நெருக்கடியிலும் அது வாழ்ந்து கொண்டுதான் இருந்தது. இக்காலத்தில் எல்லோரும் சேர்ந்து கொடுக்கும் நெருக்கடியிலும் தமிழ் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

'எங்கள் மூதாதையர் சேர்த்து வைத்த புண்ணியத்தைக் கொண்டு இன்னும் பலதலைமுறை பெருமையோடு வாழ்வோம்' எனச் சிலர் பேச்சு வாக்கில் கூறுவார்கள். அந்தக் கூற்றுத் தமிழ் மொழிக்கு முற்றிலும் பொருந்தும். உலகச் செவ்வியல் மொழிகளில் ஈப்ரு, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் வழக்கிழந்து விட்டன. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள பாணியின் அஷ்டாத்தியாயி என்னும் இலக்கண நூல், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் மிகவும் தொன்மையானவை. அம்மொழி தானாக வழக்கு இழக்கவில்லை. தேவபாடையை மற்றவர்கள் கற்கக் கூடாது என்று கழுத்தை நெரித்து விட்டார்கள். இப்போது உயிரூட்டக் கோடிக் கணக்கில் மைய அரசு ஒதுக்கியுள்ளது.

மொழியியல் (Linguistics) என்னும் மொழி பற்றிய அறிவியல் ஆய்வு வளர வடமொழி இலக்கண நூல்களே காரணமாக இருந்தன என்று மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழாற்றுப்படையில் கவிஞர் வைரமுத்து தமிழை ஆற்றுப்படுத்தும் பெருமக்களில் பலர்

இக்காலத் தமிழோடு தொடர்புடையவர்கள். எவ்வளவு இடுக்கண் வந்தாலும் சீரிளமையோடு வாழும் ஆற்றல் பெற்றது தமிழ்.

போகிறபோக்கில் ஒன்றைக் கூறிவிட்டுப் போவார்கள். அது வரலாற்றில் பெரும் அதிர்வுகளை உண்டாக்கும். அவற்றை நேர் செய்வதற்கு நீண்ட காலமாகும்.

இந்தியாவில் பேசப்படும் நான்கு மொழிக்குடும்பங்களில் தமிழ் சார்ந்த திராவிட மொழிக் குடும்பமும் சமஸ்கிருதம் சார்ந்த இந்தோ - ஆரிய மொழிக் குடும்பமும் வேறுவேறாக இருந்தாலும் நெருங்கிய தொடர்புடையவை. குறிப்பாக, ஒன்றுக்கொன்று சொற்களைக் கொடுத்து எடுத்துக்கொள்கின்றன. ஆனால் வடமொழி அறிந்த தமிழ் மண்ணில் பிறந்தவர்களே தமிழுக்குத் தாய்மொழி வடமொழியே என்று கைகூசாமல் எழுதுகின்றார்கள்.

பதினோராம் நூற்றாண்டில் புத்தமித்திரனார் என்பவரால் எழுதப்பட்ட வீரசோழியத்திற்கு அதே காலக் கட்டத்தில் உரை எழுதிய பெருந்தேவனார், தமிழ்ச் சொல்லிற்கு எல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கு எல்லாம் தமிழும் பெறும் (வீரசோ. 60) என எழுதுகின்றார்.

தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்குப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வடநூற் கடலை நிலை கண்டு உணர்ந்த சேனாவரையர் எழுதியுள்ள உரையில், தமிழ்ச் சொல் வட பாடைக்கண் செல்லாமையாலும் வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும் இவை வடசொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டன எனல் வேண்டும் (தொல்.சொல். 401) எனக் குறிப்பிடுகின்றார். பதினேழாம் நூற்றாண்டில் இலக்கணக் கொத்து என்னும் இலக்கண நூலை எழுதிய சாமிநாத தேசிகர் மேலுள்ளவர்களை விட இன்னும் மேலே போய், ஐந்து எழுத்தால் ஒருபாடை என்று / அறையவே நாணுவர் அறிவுடையோரே (இல.கொத். 7: 27-28) எனக் குறிப்பிடுகின்றார்.

வடமொழியிலும் தமிழிலும் உள்ள எழுத்துக்களைக் கவனமாகப் பட்டியல் இடுகின்றார். எ, ஒ, ழ், ற், ன் என்னும் ஐந்து எழுத்துக்கள் வடமொழியில் இல்லை. தமிழில் மட்டும் உள்ளன. இவை தவிர, தமிழில் பயன்படும் மற்ற எழுத்துகளை வடமொழிக்கு உரியவையாகக் கொள்கின்றார்.

வெளிநாட்டினர் சிலர் தம் பங்கிற்குச் சில நச்சு விதைகளை விதைத்தார்கள். நல்லவேளை, அவை சீமைக் கருவேலம் போலப் பரந்து வளரவில்லை. அவர்களிலேயே பலர் நாடு, மொழி, நாகரிகம் எனத் தமிழ் தொடர்பாகப் பல நல்ல விதைகளை விதைத்தார்கள். அவை அறிவியல் வளர வளர ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடிக் கொண்டிருக்கின்றன. அவை பற்றிப் பின்னர்ப் பார்க்கலாம்.

பல்லவர் காலத்திலும் வடமொழியே செல்வாக்குப் பெற்றிருந்தது அந்நியர் ஆட்சியிலும் அதே நிலைதான் தொடர்ந்தது. தமிழ் நாட்டில் தமிழைப் படிக்கப் போராட வேண்டிய சூழல் இருந்தது.

இன்றைய சூழலில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மருத்துவராகவும் பொறியாளராகவும் விஞ்ஞானியாகவும் பார்க்க விரும்புகிறார்கள். தமிழ்வழிக் கல்வியைப் பெரும்பாலானோர் விரும்புவதில்லை. இவற்றை விடக் கொடுமை பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் தாய்மொழியாகிய தமிழில் பேசிக் கொண்டால் தண்டம் போட்டுப் பணம் பெறுகிறார்களாம். இதனால்தான் தமிழ் தீண்டத்தகாத மொழியாகப் பார்க்கப்படுகின்றது என்று மேலே குறிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

நூலாசிரியர் கவிஞர் வைரமுத்துவைத் தமிழாற்றுப்படை என்னும் நூலை எழுதியமைக்காக எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒப்புக்காகச் சொல்லவில்லை. அக்காலம் முதல் இக்காலம் வரை தமிழன் என்றோர் இனமுண்டு/ தனியே அவற்கொரு குணமுண்டு (நாம...பாட. 19) என்பதை ஒட்டுமொத்தமாகத் தமிழாற்றுப்படை வழி வெளிப்படுத்தி இருக்கின்றார்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமும் பழந்தமிழ் இலக்கியங்களும் பழந்தமிழரின் அறிவின் தெளிவையும் முற்போக்குச் சிந்தனையும் காட்டுவன. கிரேக்கம் போன்ற தொன்மையான மொழிகளில் சில தத்துவ அறிஞர்கள் தோன்றி மானுடம் உய்யப்பல கருத்துகளைச் சொல்லி இருக்கின்றார்கள். ஆனால் தமிழைத் தவிர, தொன்மையான மொழிகளில் புராணங்களும் இதிகாசங்களுமே அதிகம் தோன்றி உள்ளன. ஒரு குலத்திற்கு ஒரு நீதி பேசும் மனுநீதிகளும் தோன்றி உள்ளன.

இடைக்காலத்தில் தமிழைப் பக்தி இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் கைக்கொண்டாலும் இக்காலத் தமிழில்தான் பழந்தமிழின் தொடர்ச்சியைப் பார்க்கமுடிகின்றது. சொர்க்கச் சிந்தனையை / நிறுத்திவிடு வர்க்கச் சிந்தனையை / வளர்த்து விடு... இனி எந்தத்

தேசமும் / மின்சாரத்தையும் / மார்க்ஸையும் ஒதுக்கி விட்டு / உயிர் வாழ முடியாது (வைர. கவி. ப.309). இவற்றைத் தமிழகத்தில் பதியம் போட்டவர்கள் தந்தை பெரியார், மகாகவி பாரதியார். வளர்த்துத் தழைக்கச் செய்தவர்கள் பலர். அவர்களிடம் எல்லாம் நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து தமிழை ஆற்றுப்படுத்துகின்றார்.

மேலே குறிப்பிட்டதைப் போன்று நூலாசிரியர் தமிழை ஆற்றுப் படுத்தும் இந்த இருபத்து நான்கு பெருமக்களும் குறியீடுகள் தாம். இவர்களுக்குள் பலர் கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இனி, தமிழ் மொழி, இலக்கிய, சமுதாய அடிப்படையில் தமிழால் அவர்கள் பெற்ற பெருமையையும் அவர்களால் தமிழ்பெற்ற பெருமையையும் விளக்கலாம்.

தமிழை இப்பெருமக்களிடம் ஆற்றுப்படுத்த நூலாசிரியருக்கு உரிமை உண்டு. தமிழைக் காத்த / செந்தமிழின் பாரதியைப் போலே நாட்டில் / தேனமுதப் பாவலன் யார்? என்னை விட்டால் (என்பழைய.ப.11) என்று அவரே குறிப்பிடுவதாலும் அந்த உரிமையை உறுதி செய்யலாம். தற்புகழ்ச்சிக்கும் இடம் உண்டு என்பதை நன்னூல் என்னும் இலக்கண நூலே குறிப்பிடுகின்றது. மன்னுடை மன்றத்து ஓலை தூக்கினும் / தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும் / மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும் / தன்னை மறுதலை பழித்த காலையும் / தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே (நன்: 53)

தமிழைப் படிப்பதில் ஒரு தேக்க நிலை; தமிழ்வழிக் கல்வியில் ஒரு தேக்க நிலை; பேச்சிலும் எழுத்திலும் தமிங்கிலம், மணிப்பிரவாளம். ‘இவற்றைப் பற்றி எல்லாம் கவலைப்படாதே; அக்காலம் முதல் இக்காலம் வரை உனக்குத் தொண்டு செய்தோரைப் பார்த்துப் பெருமைகொள்; இவர்களுடைய பணியால்தான் உலகெங்கிலும் உயர்ந்து நிற்கிறாய்; மற்ற மாநிலங்களை விட முற்போக்குச் சிந்தனையிலும் மூடநம்பிக்கை ஒழிப்பிலும் தனித்து நிற்கிறாய்’ என்று சொல்லாமல் சொல்வது போல நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து தமிழை இப்பெருமக்களிடம் ஆற்றுப்படுத்துகின்றார்.

**தொல்காப்பியர்**

தொல்காப்பியர் எழுதியுள்ள ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்திற்கு இணையாக இன்னொரு நூல் உலக மொழிகளில் தோன்றவும் இல்லை; தோன்றுவதற்கு வாய்ப்பும் இல்லை. தோன்றினால் மனம் உவந்து வரவேற்போம். பல மொழிகளை அறிந்த உலக அறிஞர்கள் தொல்காப்பியத்தின் அமைப்பை அறிந்து வியப்புக்கு ஆட்படுகின்றார்கள்.

உலகின் தொன்மையான மொழிகளில், செவ்வியல் மொழி என்னும் தகுதிப்பாடு பெற்ற மொழிகளில் மொழியின் எழுத்து, சொல், தொடர் அமைப்பை விளக்கத்தான் இலக்கணங்கள் தோன்றியுள்ளன. மக்களின் அக, புற வாழ்க்கையை விளக்கத் தமிழில் மட்டும்தான் இலக்கணம் தோன்றி உள்ளது.

தமிழர் இயற்கையோடு இயைந்து, அதனை நுட்பமாக அறிந்து வாழ்ந்த வாழ்க்கையில் முகிழ்த்ததே வாழ்வியலுக்கான இலக்கணம். வாழ்வோடு படைப்பிலக்கியங்களையும் படைப்பிலக்கியங்களோடு வாழ்வையும் தமிழர்கள் இடையறாது பேணி வந்ததே அது உயர்ந்திருப்பதற்கு முதற் காரணம். இலக்கணம் என்ற அறிவியல் மீது அது திட்டமிட்டுக் கட்டப்பட்டிருப்பது இரண்டாவது காரணம் (தமிழா. ப. 18). நூலாசிரியர் தொல்காப்பியத்தை மிகவும் நுட்பமாக உணர்ந்து இக்கருத்தைக் கூறியுள்ளார்.

பழந்தமிழகத்தை ஐந்தாகப் பகுத்துக்கொண்டு அவற்றின் முதல், கரு, உரிப் பொருளைக் கொண்டு இலக்கியங்களை யாத்தார்கள். மண் சார்ந்த இயல்பான வாழ்க்கை என்பதால் அதற்கு இயல்பாக இலக்கணம் எழுதும் சூழலும் வாய்த்து விட்டது. சட்டியில் இருப்பது அகப்பையில் வரும் என்பதற்குத் தொல்காப்பியப் பொருளதிகாரம் அருமையான சான்று. முற்போக்குச் சிந்தனைக்கும் இயல்பான வாழ்க்கைக்கும் முற்காலம், பிற்காலம் என்பவற்றை எல்லாம் அளவுகோலாகக் கொள்ளமுடியாது.

பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களும் தாங்கள் வணங்கும் தெய்வந்தான் இந்த உலகத்தைப் படைத்ததாகக் கூறிக் கொள்கிறார்கள். சந்திரன், செவ்வாய் என அண்டக் கோள்களைப் பற்றி ஆராய்ந்தாலும் மதக் கோட்பாடுகளில் இருந்து மாறாதவர்கள் இன்றும் இருப்பார்கள்; இனிமேலும் இருப்பார்கள். அவர்கள் நம்புவதோடு மட்டுமல்லாமல் அவர்களிடம் உண்மையைச் சொல்பவர் கலிலியோ பட்ட பாட்டுத்தான் படவேண்டும்; படுகிறார்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் எவ்வளவு தெளிவாக இந்த உலக உருவாக்கத்தைக் குறிப்பிடுகின்றார். நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் / கலந்த மயக்கம் உலகம் (தொல்.பொருள். 639: 1-2). இந்நூற்பா

அடிகளை எடுத்துக் கூறி, பூமியின் தோற்றம் குறித்து மறுதலிக்கப்பட்ட அனுமானங்களை மதங்கள் உருவாக்கி இருந்தபோது என்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க முதல் கருத்தை முன்னிறுத்தியவர் தொல்காப்பியர் (தமிழா. ப. 29) என்று எக்காலத்திற்கும் பொருந்தும் கருத்தைக் கூறிய தொல்காப்பியரிடம் பெருமிதத்தோடு தமிழை நூலாசிரியரிடம் ஆற்றுப்படுத்துகின்றார்.

தமிழ்மொழி பற்றி விளக்கும் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் மொழியியல் அறிஞர்கள் வியந்து பார்க்கும் வகையில் தமிழ்மொழி அமைப்பை விளக்குகின்றன. பெரும்பான்மையான இலக்கண விதிகள் இக்காலத் தமிழுக்கும் பொருந்தி வருகின்றன. 3000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட தொல்காப்பியரின் தமிழ் மொழிச் சட்டம், இன்று வரை ஒரு திருத்தத்திற்கும் ஆளாகாமல் உயிர்ப்போடு இயங்கி வருகிறது. சட்டம் வகுந்த தொல்காப்பியருக்கும் அது பெருமை; கட்டிக் காத்த தமிழர்களுக்கும் அது பெருமை (தமிழா. ப. 24). இவ்வகையான நிலைபேற்றிற்கு அடிப்படை, தமிழ் பேச்சு வழக்கு மொழியாகவும் செய்யுள் வழக்கு மொழியாகவும் இருப்பதே முதன்மையான காரணமாகும்.

தெய்வ மொழியாக இருந்தாலும் சரி, மக்கள் பேசும் மொழியாக இருந்தாலும் சரி, வேறுபட்ட மொழிபேசும் மக்கள் கலந்து வாழும்போது சொல்லைக் கொடுத்து, எடுத்துக் கொள்ளும் கடன் வாங்கும் முறை தவிர்க்க இயலாத ஒன்று. அவ்வாறு கடன் பெறும்போது அந்தந்த மொழியின் கட்டமைப்பு மீறாமல் இருக்கவேண்டும். இதைத்தான் தொல்காப்பியர், வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ / எழுத்தோடு புணர்ந்த சொல்லாகும்மே (தொல்.சொல். 395) என்னும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய பெருந்தேவனார், சேனாவரையர் போன்றோர் வடமொழியே எல்லா மொழிகளுக்கும் தாய் மொழி, அம்மொழிச் சொல்லே பிறமொழிகளுக்குப் போகும்; பிறமொழிச் சொற்கள் அம்மொழிக்குப் போகா என்கின்றார்கள். ஆனால் எழுநூற்றுக்கும் மேற்பட்ட திராவிடச் சொற்கள் வடமொழியின் வேதங்களிலும் இதிகாசங்களிலும் இடம்பெற்றிருப்பதை மொழியியல் அறிஞர்கள் (T.Burrow, 1968: 178) பட்டியலிடுகின்றனர்.

எனவே, முற்போக்குச் சிந்தனைக்குக் காலவரையறை இல்லை. தொல்காப்பியர் விளக்கியுள்ள இலக்கணம், கூறியுள்ள கருத்துகள் என்றும் ஏற்றுக் கொள்ளத்தக்கவை. இப்படிப்பட்ட ஒரு சிந்தனையாளரிடம் தமிழை ஆற்றுப்படுத்தும் தமிழாற்றுப்படையின் நூலாசிரியரின் தொடக்கமே ஓர் எதிர்பார்ப்புடன் நீள்கிறது.

**கபிலரும் அவ்வையாரும்**

இலக்கணம் என்னும் நிலையில் தமிழை ஒருவரிடம் மட்டும்தான் ஆற்றுப்படுத்த நூலாசிரியரால் முடிந்தது. தொல்காப்பியருக்கு ஒப்பாரும் மிக்காரும் யாரும் இல்லை. ஆனால் பாட்டும் தொகையும் எனப்படும் சங்க இலக்கியங்களைப் பாடியோர் நூற்றுக் கணக்கானோர். சரியாகச் சொல்லவேண்டும் என்றால் பத்துப்பாட்டு எட்டுத்தொகையில் சிறிதும் பெரிதுமாக (சிற்றெல்லை 3 அடி பேரெல்லை 782 அடி) 2381 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கபிலர் பாடியவை 235 பாடல்கள்!

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் / அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம் (பார. பாட . 1868) எனப் பாடிய பாரதி பரம்பரையில் தோன்றியவர் நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து. தம் பங்கிற்கு பெண்ணுக்கும் மாற்றமுண்டு / வாகைசூடும் ஆற்றலுண்டு (திரைப்பா. 1:21) எனப் பாடுகின்றார்.

எனவேதான் தமிழை ஆற்றுப்படுத்தச் சங்ககாலப் புலவர்களில் ஐம்பது - ஐம்பது விழுக்காடுகளாகக் கபிலரையும் ஔவையாரையும் தேர்ந்தெடுத்துள்ளார். சங்க காலப் புலவர்களில் கபிலர் பல்வேறு சிறப்புகளைப் பெற்றவர். குறிப்பாகச் சங்க காலப் புலவர்களாலேயே பெருமையாகப் பேசப்பட்டவர். நல்லிசை வாய்மொழிக் கபிலன் (அகம். 78: 15-16), விளங்கு புகழ்க் கபிலன் (புறம். 53:12) நல்லிசைக் கபிலன் (பதிற். 86: 12-13) பொய்யா நாவின் கபிலன் (புறம். 174:10) என்றெல்லாம் சமகாலப் புலவர்களால் குறிஞ்சிக் கபிலர் போற்றப்படுகின்றார்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மலைபடு செல்வங்களைப் பட்டியலிட்ட கபிலர் உலகத்தின் முதல் சுற்றுச் சூழல் பெரும் புலவராகிறார் (தமிழா. ப: 40) என்று நூலாசிரியர் கபிலருக்குப் புகழாரம் சூட்டுகின்றார்.

பூமியைத் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திய காலம் வரை செழிப்பாகத்தான் இருந்தது. உலகம் வாணிபக் கூடம் ஆனவுடன் அங்கிங்கெனாதபடி பார் முழுவதும் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு விட்டன. அந்நியர்கள் வந்து காடு, மலைகளை அழித்துக் காபித் தோட்டங்களும் தேயிலைத் தோட்டங்களும் ஆக்கினார்கள். நம்மவர்கள்

மலைகளையே பிளந்து மாளிகை கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இது ஒருபக்க நிலை இல்லை; உலக முழுப்பக்க நிலையே இதுதான்.

காலங்கள் மாறும்; கடல்கள் இடம் மாறும்; நிலவியல் மாறும்; பருவங்கள் தடுமாறும் (தமிழா. ப. 43) என நூலாசிரியர் கூறுவதுபோல இப்போது எல்லாம் அழிந்தாலும் கபிலர் பாடிய பாடல்களில் ஐந்நில வளங்களும் தமிழ் உள்ளவரை செழித்திருக்கும்.

கபிலரை ஆய்வு செய்த இராம. ஆநிரைக் காவலன், சங்க இலக்கியங்களிலேயே மிகுதியான பாடல்களைப் பாடிய ஒரே புலவர், சங்கத் தொகை நூல்கள் அனைத்திலேயும் இடம் பெற்றுள்ள ஒரே புலவர், ஐந்து திணைகளையும் பாடிய ஒரே புலவர், பிற்காலக் கல்வெட்டினால் சிறப்பாகப் புகழப்படும் ஒரே புலவர், சங்க காலத் தலைமைப் புலவர் கபிலர் ஒருவரே (2002, பக். 1 - 2) என்று கபிலரின் சிறப்புகளைப் பட்டியலிடும்போது குறிப்பிடுகின்றார். 'ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல ஆண்பாற் புலவர்களில் தமிழாற்றுப் படை நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து ஏன் தமிழை ஆற்றுப்படுத்த கபிலரைத் தேர்ந்தெடுத்தார் என்பது இப்போது புரிகின்றது. யாதும் ஊரே! யாவரும் கேளிர் (புறம். 192:1) என்னும் வைர அடியை ஐக்கிய நாட்டுச் சபையில் பதிய வைக்கும் அளவிற்குப் புகழ்பெற்ற கணியன் பூங்குன்றனார், நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின் (புறம். 195 : 6-7) என்று உலக மக்கள் அனைவரையும் ஆற்றுப்படுத்திய நரிவெரூஉத் தலையார் என ஒட்டு மொத்தச் சங்கம் பாடியோருக்குக் குறியீடாக நூலாசிரியர் கபிலரைத், தமிழுக்கு இனங் காட்டுகின்றார்.

ஆண்களுக்கு நிகராக ஐம்பது விழுக்காடு அளவு மகளிர் இருந்தாலும் மூன்றில் ஒரு பங்கு உரிமை கொடுக்கவே மறுக்கிறார்கள். பெயர் தெரிந்த, தெரியாத ஏறக்குறைய 600 சங்கப் புலவர்களில் 41 பேர் பெண்பாற் புலவர்கள். ஆண்பாற் புலவர்களுக்கு ஐம்பது விழுக்காடாகக் கபிலரும் பெண்பாற் புலவர்களுக்கு ஐம்பது விழுக்காடாக ஔவையாரும் இடம்பெறுகின்றனர். பெண்கள் தொடர்பான ஒரு சிறுகதைத் தொகுப்பிற்கு இக்கட்டுரையாளர் சூட்டிய பெயர் ஐம்பது விழுக்காடுகள் (2010). படைப்பாளர்களால் இப்படித்தான் செய்யமுடியும்.

இந்த வகையில் தமிழ் சந்திக்க வேண்டிய ஒரு பெண்பாற் புலவராகக் கவிஞர் வைரமுத்து ஔவையாரைச் சரியாகத் தேர்ந்தெடுத்துள்ளார். தலைமை ஏற்ற தாய்வழிச் சமுதாய இறக்கத்திற்கும் ஆணாதிக்கச் சமுதாயத் தோற்றத்திற்குமான காலக் கட்டத்தில் பிறந்தவர். தாய்வழிச் சமூகம் நொறுங்கி உடைந்த பிறகு ஆணாதிக்கச் சிந்தனைகளோடு ஒரு சமூகத்தை வழிநடத்தத் தலைப்பட்டன. தங்களை முன்னிறுத்திக் கொண்ட ஆண் மூளைகள் பெண்களுக்கான இருத்தல் - இயக்கம் இரண்டுக்குமான வாழ்வியலைச் சட்ட வழியாகவும் மரபு வழியாகவும் வரையறுத்தன (தமிழா. ப. 47).

அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் ஔவையாருக்கும் இருந்த நட்பைத் தம்பாணியில் விளக்குகின்றார் நூலாசிரியர். ஆரம்பத்தில் பரிசில் கொடுக்காமல் காலம் தாழ்த்திய நெடுமான் அஞ் சியிடம் கூறுமாறு, எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே (புறம். 206: 13) வாயிற் காவலனிடம் சொல்வதில் தொன்மைத் தாய்மையின் மாண்பு பீறிட்டு வெளிப்படுகின்றது.

சங்க கால ஔவையாரையும் பிற்கால ஔவையாரையும் ஒருமுகப்படுத்திப் பெண் குலத்திற்கான குறியீடாகத் தமிழை ஔவையாரிடம் நூலாசிரியர் ஆற்றுப்படுத்துகின்றார்.

**திருவள்ளுவர்**

தொல்காப்பியரை ஒரு தராசுத் தட்டில் அமர வைத்தால் உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரை இன்னொரு தட்டில் வைக்கவேண்டும். இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த பழந்தமிழரையும் அவர்தம் மொழியையும் உலகுக்கு அடையாளம் காட்டியவர் தொல்காப்பியர். மானுடப் பிறப்பில் பேதம் காட்டியவர்களுக்கு, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (திருக். 972:1) மரண அடி கொடுத்தவர் திருவள்ளுவர். இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயே தமிழர்கள் முற்போக்குச் சிந்தனையாளர்கள் என்பதற்கான அடையாளங்கள் இவர்களது எழுத்துக்கள். தமிழாய்ந்த உலக அறிஞர்கள் வியக்கிறார்கள். தமிழர்கள் உணரவேண்டும்.

உலக மூலை, முடுக்குகளில் உள்ள எல்லா நூல்களில் இருந்தும் கருத்துகளை எடுத்துக் கூறி, அவை ஒரு வட்டத்துக்குள் மானுட சமுதாயத்தைப் பார்க்கின்றன. வள்ளுவம் மட்டும்தான் உலக மக்களை ஒரே குலத்தில் பார்ப்பதாகக் கவிஞர் வைரமுத்து குறிப்பிடுகின்றார். வள்ளுவரின் வாக்குகள் தமிழரின் அடையாளம் மட்டுமில்லை. கால மதிப்பீடுகளில் வள்ளுவரின் கனிவும் கருணையும் மனித நாகரிகத்தின் மாண்பு சுட்டுவதைக் காட்டுவது மட்டுமே என் முயற்சியாகும், (தமிழா.ப.62) எனக் கூறுவதன்வழி, வள்ளுவம்

தமிழகத்தில் மலர்ந்து உலகமும் முழுவதும் மானுட மாண்பு என்னும் மணத்தைப் பரப்புகின்றது என்று நூலாசிரியர் எழுதுகின்றார்.

தமிழாற்றுப்படை நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து தமிழைத் திருவள்ளுவரிடம் ஆற்றுப்படுத்தும் பாங்கை, மானுட இனத்தில் பேதம் காண விரும்புபவர்கள் கூட மனமுவந்து ஏற்றுக் கொள்வார்கள். மானுட விழுமியங்களைக் கூறுவதில் வள்ளுவத்திற்கு நிகர் வள்ளுவம்தான்.

**இளங்கோவடிகள் முதலானோர்**

திருவள்ளுவரைத் தொடர்ந்து தமிழாற்றுப் படையில் இளங்கோவடிகள் அப்பர், ஆண்டாள், செயங்கொண்டார், கம்பர், திருமூலர் போன்றோரிடம் கவிஞர் வைரமுத்து தமிழை ஆற்றுப்படுத்துகின்றார். ஒவ்வொருவருமே ஒவ்வொரு வகையில் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

சிலப்பதிகாரம் தொடர்பான கருத்துக்கள், காலம் போன்றவற்றில் உள்ள வேறுபாடுகளை எல்லாம் நூலாசிரியர் பட்டியலிட்டு விட்டு முத்தாய்ப்பாகக் கூறுகின்றார். சிலப்பதிகாரத்தை தமிழர்கள் ஏன் சீராட்ட வேண்டுமெனில், அழிந்த தமிழ் நாகரீகத்தின் ஆதாரம் அது என்பதால்தான். ஏற்கெனவே தமிழினம் இழந்தது கொஞ்சமன்று. எல்லைகள் - இலக்கணங்கள் - இலக்கியங்கள் - ஆயுதங்கள் - ஆலயங்கள் என்று எவ்வளவோ இழந்திருக்கிறது. அனைத்துக்கும் மொத்தமாய் அது கட்டிக்காக்க வேண்டிய கலை ஆவணம் சிலப்பதிகாரம்தான் (தமிழா.ப. 74).

இப்போது உலகமயத்தால் பல இனமக்களின் தனித்தன்மை, மொழி போன்றவை எல்லாம் மொட்டையடிக்கப்படுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகள் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் அவர்களுக்குள் போரிட்டுக் கொண்டாலும் வடபகுதிப் பேரரசர்களை இந்தப் பகுதியில் வாலாட்ட விடவில்லை என்பதைப் பழைய பாரத நாட்டு வரை படங்கள் பார்த்தாலே அறிந்து கொள்ளலாம்.

இந்தியாவில் ஒற்றுமை இன்மையால் அந்நியர்கள் நுழைந்தார்கள். திராவிடர்களிடம் ஒற்றுமை இன்மையால் இந்திய மயத்தில் உரிமைக்காகப் போராட வேண்டி இருப்பதை நூலாசிரியர் நுட்பமாக வெளிப்படுத்துகின்றார்.

போராட்டத்தாலும் திராவிட அரசியல் அதிகாரத்தாலும் பெற்ற சமூக நீதி, இட ஒதுக்கீடு விழுக்காடுகள் தற்போது கரையத் தொடங்கிவிட்டனர்.

அடுத்து, நூலாசிரியர் தமிழை அப்பரிடம் ஆற்றுப்படுத்துகின்றார். அப்பரின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை வரிசைப்படுத்துகின்றார். எல்லாவற்றையும் துறந்து அரண்மனையைவிட்டு வெளியேறிய சித்தார்த்தன் புத்தராகவே இறுதி வரை வாழ்ந்தார். அசோகரும் கூட அப்படித்தான். வள்ளலார், தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர், அண்ணா, கலைஞர் எனப் பலரும் பழுத்த ஆத்திகக் குடும்பங்களில் இருந்து வெடித்துக் கொண்டு வெளியே வந்தவர்கள்; இறுதிவரை அதற்குள் போய் முடங்கவில்லை.

ஆன்மீகத்தில் இருந்து நாத்திகத்திற்கு வந்து மறுபடியும் பழைய இடத்திற்குத் திரும்பிச் செல்ல முதன் முதலாகக் கோடு போட்டவர் அப்பராகத்தான் இருக்க முடியும். எப்படி இருந்தாலும் அப்பரின் கருத்துகள் நூலாசிரியரைத் தம் பக்கம் கவர்ந்து கொள்கின்றன. தமிழ்மீது படர்ந்த வடமொழி இருள், சைவத்தின் மீது படிந்ததாகக் கருதப்பட்ட சமண இருள், சமூகத்தின்மீது படிந்த சாதிய இருள் இந்த மூவ்விருள் கிழிக்கத் தன்னையே சுடராய்க் கொளுத்திக் கொண்டதுதான் அப்பர் பெருமானின் பெருவாழ்வு (தமிழா. ப. 88).

எப்படிப் பார்த்தாலும் சமயவாதிகள் கருத்துமுதல்வாதம் பேசிக் கொண்டு பொருள்முதல்வாதத்தில்தான் குறியாக இருந்தார்கள். சோழநாட்டின் அரைப் பங்குக் குறையாத நிலம் கோயில் சார்ந்தே உள்ளது. அப்பர் அவ்வாறு பொன், பொருளுக்காக யாரையும் நாடவில்லை. நாமார்க்கும் குடி அல்லோம் (தேவா. 11:1) என்னும் தொடரில் அவர் தழுவி இருந்த சமண சமய வாடை மணக்கிறது.

அடுத்து, நூலாசிரியரை ஆன்மீகவாதிகள் வறுத்தெடுத்த சூடிக் கொடுத்த சுடர்க்கொடி பற்றியது. இந்தியா மட்டும் இல்லை; மதங்களுக்கும் உண்மைக்கும் ஏழாம் பொருத்தம்தான். மதத்தைக் காட்டி ஏசுநாதர், கலிலியோ உட்பட உண்மையைச் சொன்ன பலர் வதைக்கப்பட்டார்கள்.

உலகம் தட்டையானது என்று பைபிள் கூறுகிறது. கலிலியோ உருண்டையானது என அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து உண்மையைக் கூறினார். மதத்திற்கு எதிராகக் கூறினார் என்று தண்டிக்கப்பட்டார். ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் கழித்துக் கலிலியோவுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காகப் போப்பாண்டவர் தற்போது வருத்தம் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் பெருமாள் முருகனின் மாதொரு பாகனுக்குக்கூட இப்படிப்பட்ட எதிர்ப்பு எழுந்து

அடங்கியது. விலங்கு நிலையில் இருந்து மனித இனம் வளர்ச்சி அடைந்தது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மகாபாரதத்தில் திருதராட்டிரன், பாண்டு, விதுரன் பிறப்புப் பற்றிய கதைக்கு யாருடன் போய் மோதுவார்கள்.

வரலாறு உண்மை சார்ந்தது. மதம், புராணம் நம்பிக்கை சார்ந்தவை. ஏதாவது ஒன்றைச் சொன்னால் மத உணர்வைப் புண்படுத்துவதாகக் குரல் எழுப்புகின்றார்கள். அவற்றுக்கு எல்லாம் கவலைப்படுகின்றவர்கள் ஒன்றை மட்டும் உரத்துப் பேச மறுக்கின்றார்கள்.

சைவம், வைணவம், சிறுதெய்வம் என்னும் வேறுபாடு இல்லாமல் இருந்த சிலைகளை எல்லாம் கடத்தி விட்டார்கள்; கடத்தல் தெரியாதிருக்கப் போலியாகச் செய்து வைத்து விட்டார்கள். சமூக ஆர்வலர்களுக்கு இருக்கும் அக்கறை ஆன்மீகவாதிகளிடம் இல்லை. எவ்வளவு கலைநயம் மிக்கவை? ஆலயங்களோடு தொடர்பில்லாதவர்களால் இவ்வாறு கடத்த முடியுமா? கோயில், மடங்களுக்கு உரிய நிலம், பொருள் எல்லால் ஆற்றில் போகும் நீரை ஆயா குடி; அம்மா குடி என்னும் நிலை ஆகிவிட்டது.

மதம், சாதிக்காக மாட்டிக் கொள்ளும் பூதக் கண்ணாடியை ஆலயங்களில் நடக்கும் ஊழல்களை ஒழிக்கவும் போட்டுக்கொள்ள வேண்டும்; மாட்டார்கள். கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைத் தாமே சொறிந்துகொள்ள அவர்கள் விவரம் தெரியாதவர்களா?

எப்படியோ மார்க்சியம், பகுத்தறிவுப் பார்வை கொண்ட தமிழாற்றுப் படை நூலாசிரியர் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ள ஒரே பெண் ஆழ்வாரின் சிறப்புகளை எடுத்துக் கூறித் தமிழை ஆற்றுப்படுத்துகின்றார். ஆண்டாளை ஓர் ஆழ்வாராக ஏற்றுக் கொள்ளாத நிலையும் இருக்கின்றது. இதற்குக் குரல் கொடுக்க வேண்டும். ஆண் ஆழ்வார்களுக்குச் சரி நிகராக ஆண்டாளையும் பார்க்கவேண்டும்.

பக்தி இலக்கியங்களைத் தொடர்ந்து தோன்றிய சிற்றிலக்கியங்களில் பரணியின் சிறப்பைக்கூறி அவ்வகை இலக்கியவழித் தோன்றிய கலிங்கத்துப்பரணி பாடிய செயங்கொண்டாரிடம் தமிழை நூலாசிரியர் ஆற்றுப்படுத்துகின்றார்.

பழந்தமிழர் காதல் வாழ்வையும் போர்க்கள வாழ்வையும் சுருங்கச் சொல்லும் வகையில் கலிங்கத்துப்பரணி இருப்பதை நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து சில சான்றுகளுடன் விளக்குகின்றார்.

அடுத்து, தமிழாற்றுப்படை நூலாசிரியர் கம்பரிடம் தமிழை ஆற்றுப்படுத்துகின்றார். நுவல் பொருள் வடமொழிக்கு உரியதாயினும் அதனைக் கவிச்சக்ரவர்த்தி எவ்வாறெல்லாம் தம் ஆளுமைக்குள் கொண்டு வருகிறார் என்பதைக் கவிஞர் வைரமுத்து விரிவாக விளக்குகின்றார். காளிதாசரோடும் ஷேக்ஸ்பியரோடும் வான்மீகியோடும் ஒப்பிட்டுக் கம்பரின் மொழி ஆளுமையை விரித்துக் காட்டுகின்றார்.

மனிதச் சிசுவைப் பத்துமாதம்தான் ஒரு தாய் சுமக்கிறாள். ஆனால் கம்பன் என்ற மகாகவியைப் பல நூற்றாண்டுகள் தன் கருவில் தமிழ்த்தாய் தரித்திருக்கிறாள் (தமிழா. ப.130). உலகப் பெருங்கவிஞர்கள் பெற்ற புகழைக் கவிச்சக்ரவர்த்தி கம்பர் பெறவில்லை என்ற ஆதங்கத்துடன் நூலாசிரியர் தமிழை அவரிடம் ஆற்றுப்படுத்துகின்றார்.

தமிழைத் திருமூலரிடம் ஆற்றுப்படுத்தும்போது அவர் யாத்த திருமந்திரம் பன்னிரு திருமுறைகளில் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தாலும் இது தமிழர் தத்துவ சாரத்தின் தனிப் பனுவல் என்று தடந்தோள் விரியலாம். இது அறமாக விளங்கும் தமிழர் மெய்யியலுக்கு வரமாக வந்த வரவென்றும், வெவ்வேறு காலவெளிகளில் விளங்கி வந்த தமிழர் தம் தத்துவ முத்துக்களை ஆரவாரமில்லாமல் தொடுத்த அறிவாரம் என்றும் தமிழ்ச் சமயம் கருதுகின்றது (தமிழா. ப. 141) என்று முத்தாய்ப்பாக நூலாசிரியர் வைரமுத்து குறிப்பிடுகின்றார்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (திருமந். 2104: 1) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (திருக். 972: 1) என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கோடு மதம் வளர்ந்த பிறகு மக்களுக்கு மதம் பிடிக்காமல் இருக்க திருமூலர் சொன்ன மந்திரமொழி. நூலாசிரியர் திருமூலர் மீது படிந்துள்ள கறைகளை நீக்கித் தூய்மைப்படுத்தித் தமிழ் மூலராகக் காட்டுகின்றார்.

**வள்ளலார் முதலானோர்**

திருமூலரை அடுத்துத் தமிழைத் தமிழாற்றுப்படை நூலாசிரியர் கால்டுவெல் பெருமகனிடம் ஆற்றுப்படுத்துகின்றார். அவருக்கும் திராவிடம் பேசுவோருக்கும் ஒரு தொடர்பு இருப்பதால் வள்ளலார், உ.வே.சாமிநாதையர், மறைமலையடிகள், பாரதியார் முதலியோருக்குப் பிறகு பெரியாரோடு சேர்த்துப் பார்க்கலாம்.

ஒன்றை நம்புவதில் தவறில்லை. ஆனால் அது மற்றவர்களை ஏமாற்றுகிறது, சுரண்டுகின்றது என்றால் கண்டிப்பாக அதனை விட்டொழிக்க

வேண்டும். வள்ளலாரின் வாழ்க்கையிலும் அப்படித்தான் பரிணாம வளர்ச்சி காணப்படுகின்றது. பாரதியாருக்கும் பெரியாருக்கும் முன்னோடியாக இருந்த வள்ளலாரைப் பற்றிய அரிய கருத்துகளை எல்லாம் திரட்டிச் செம்மையாகத் தமிழாற்றுப்படையில் கவிஞர் வைரமுத்து எழுதுகின்றார்.

*பிறப்பு - வளர்ப்பு - உணவு - உடை - உறைவிடம் - கல்வி பொருளாதாரம் என்று தொடங்கி இறப்பு வரையில் பேணப்படும் பேதங்களைக் கட்டிக்காக்கத்தான் இந்து மதத்தின் உருவ வழிபாடுகளும் அடையாளங்களும் துணைபோகின்றன (தமிழா. ப. 176)* என்பதை அறிந்தே வள்ளலார் ஒளி வழிபாட்டைத் தொடங்குகின்றார். சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். *உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே (மணி. 11: 96)* அமுத சுரபியுடன் மணிமேகலை உணவளிக்க அலைந்தாள். வள்ளலாரும் சத்திய தருமச் சாலை அமைத்து அனைவருக்கும் உணவளித்தார். இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தவாதியை நூலாசிரியர் தமிழுக்கு அறிமுகப்படுத்துகின்றார். தமிழை ஆற்றுப்படுத்துகின்றார்.

*எத்தனையோ ஏடுகள் இயற்கைச் சீற்றத்தாலும் அற்ப மானுடரின் செயற்கைச் சீற்றத்தாலும் அறியாமையாலும் அழிந்து விட்டன. தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தமிழரின் வரலாறு, நாகரிகம், பண்பாடு போன்றவற்றை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.* பெரும்பாலான சங்க நூல்களைத் தேடி எடுத்து, நுட்பமாய் ஆராய்ந்து பதிப்பித்துத் தந்தவர் மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர். *ஒரு செம்மொழியின் தலைமைத் தகுதியான தொன்மை என்பதற்குச் சங்க இலக்கியம் போலொரு தங்கப்பட்டயம் இல்லை (தமிழா. ப. 183)* என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். *நாடுதோறும் ஏடுதேடி ஓடி அலைந்து அந்த அந்தணக் கிழவன் சந்தனமாய்த் தேய்ந்திரா விடில் (தமிழா. ப. 182)* என்னும் வாசகத்தைப் படிக்கும்போது கண்கள் பனிக்கின்றன.

உ.வே.சாமிநாதையர் பதிப்பித்துள்ள நூல்களைப் புரட்டிப் பார்த்தாலே அவற்றின் பிரமாண்டம் புரியும். பொருள்புரியப் பகுத்திருக்கும் முறை, அருஞ்சொற்பொருள், ஒப்பீடு என எல்லாவற்றையும் ஒரு தாயைப்போலச் செம்மையாகச் செய்துள்ளார். *சாதிய மேலாதிக்கத்தின் மீதான சமூகக் கோபம் உண்டே தவிர எந்தப் பிராமணர் மீதும் எனக்கு வெறுப்பு இல்லை (பாற்கடல், ப - 90).* தம் நிலைப்பாட்டை மூவரைக் கொண்டு இந்நூலில் நிறுவியுள்ளார். குறிஞ்சி பாடிய அந்தணக் கபிலரையும் *சூரிய மூலையில் பிறந்த ஆரிய மூளையையும் (தமிழா. ப. 192)* மனம் உவந்து எழுதி வருணனை மழையால் கவிஞர் வைரமுத்து அவர்களை நீச்சல் அடிக்க விட்டுள்ளார். இன்னொருவர் மகாகவி. தமிழைத் தூக்கிப் பிடிப்பவர் யாராக இருந்தாலும் வணக்கத்திற்கு உரியவர்களே. சாமிநாத தேசிகரைப் போன்று தாக்க நினைப்போரைத் தமிழே பார்த்துக்கொள்ளும்.

*அன்றியும் தமிழ் நூற்கு அளவு இலை அவற்றுள் / ஒன்றே யாயினும் தனித் தமிழ் உண்டோ (இல.கொத். 7: 25-26).* சாமிநாத தேசிகருக்கு முன்னும் பின்னும் தமிழ் யாரிடம் சிறைபட்டிருந்தது? எந்த நுவல் பொருளைச் சுமந்திருந்தது? *காமப்படுக்கை கவலைக்கிடமாய்க் கிடந்தது கவிதை. சிற்றிலக்கியங்களில் வழிந்த சீழ் - சிலேடைகளில் தெறித்த இந்திரியம் - கட்டளைக் கலித்துறைகளில் வழிந்த கட்டில் வேர்வை - கடவுட் பாடல்களில் கசிந்த கண்ணீர் என்று நனைந்து நனைந்து நைந்து கிடந்தது நந்தமிழ் (தமிழா. ப. 209).* இப்படிப்பட்ட சூழல்களில் எழுதப்பட்ட கவிதைகளிலும் உரைகளிலும் தனித் தமிழையா எதிர்பார்க்க முடியும்?

தமிழை மறைமலையடிகளிடம் ஆற்றுப்படுத்துவதற்கு முன்னர்ப் பல சான்றுகளைச் சொல்லிவிட்டுத் தமிழாற்றுப்படை நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து இப்படிக் கூறுகின்றார்: *தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த தந்தை என்ற ஆழ்ந்த அடையாளத்திற்காகவே; எம்மொழித் துணையுமின்றித் தனித்தியக்க வல்ல செம்மொழி என்ற நம்பிக்கையைத் தமிழுக்குத் தந்ததற்காகவே (தமிழா. ப. 195).*

பேராசிரியர்கள் சொல்லிக் கொடுத்தும் பிடிபடாத இலக்கணத்தையும் இலக்கியத்தையும் சமயத்தையும் தாமாகக் கற்றுத் துறை போகிய மறைமலையடிகளிடம் நூலாசிரியர் தமிழை ஆற்றுப்படுத்துவது உள்ளம் மகிழத்தக்கது.

உலக வளத்தைச் சுரண்டுபவர்களுக்கும் மனிதநேயத்தையும் மதிக்காதவர்களுக்கும் *மாமேதை காரல் மார்க்ஸ் நெற்றிக்கண். தமிழையும் பகுத்தறிவையும் பாலாகப் பருகியவர்கள் தம் இரு கண்களையும் பாரதியாராகவும் பெரியாராகவும் கொள்வர்.* இனிவரும் தலைமுறையினர் நன்றி உணர்வோடு நினைத்துப் பார்க்கத் தக்கவர்கள் இம்மூவரும். ஓவியம் வரைந்து, சிலைவடித்துக் கண்திறப்பார்கள். கள்ளுக்கடைகளை மூடிய இழப்பை ஈடு செய்யப் பள்ளிக்கூடங்களை

மூடினார்கள். பட்டி, தொட்டி எங்கும் பள்ளிக்கூடங்களை நிறுவிக் கிராமங்களின் கண் திறந்த காமராசரும் இவர்களுடன் இணைந்து கொள்வார்.

சமுதாய நலம் நாடுபவன் சாதி, மதம் பார்க்க மாட்டான் என்பதற்குப் பாரதியாரே சான்றாவார். அதனாலேயே மகாகவியானார். கன்னிப் பேச்சாயினும் முதிர்ந்த பேச்சாயினும் எழுத்தாயினும் பாரதியை இழுக்காமல் யாரும் ஓரடி முன்வைக்க முடியாது. அப்படிப்பட்ட மகாகவியின் இறுதி ஊர்வலத்தைக் கவிஞர் வைரமுத்து வரைந்ததை முழுமையாகப் படிக்க முடியவில்லை. கண்ணீர் திரைபோட்டு விடுகிறது. இறுதி ஊர்வலத்தினரின் / எண்ணிக்கை / இருபதுக்கும் குறைவாக / இருந்ததாம் தோழர்களே! மகா கவிஞனுக்கு / மரியாதை பார்த்தீரோ! / அவன் உடம்பில் மொய்த்த / ஈக்களின் எண்ணிக்கையில் கூட / ஆட்கள் இல்லையே! (கவி. கதை.ப. 148).

நீண்ட காலம், குண்டும் குழியுமான வழி. செம்மையாகப் பாதை அமைத்துக் கொடுத்த மகாகவியை எப்படிப் போற்றினாலும் தகும். திருவல்லிக்கேணி மயானத்தில் பாரதியின் சதைக்கோளத்தைத் தின்றுதீர்த்த தீ அணைந்திருக்கலாம். அவன் கொளுத்தி எறிந்துபோன அழியா நெருப்பு அணைவதேயில்லை. அது 'யுகாக்கினி' (தமிழா. ப. 219)

**கால்டுவெல்**

'வெள்ளையும் சொள்ளையுமாக இருப்பவர்களுக்கு ஒரு பேச்சு; அழுக்கும் கிழுக்குமாக இருப்பவர்களுக்கு ஒரு பேச்சு; சதை இருக்கும் இடத்தைத் தான் கத்தி நாடும்' என்றெல்லாம் கிராமத்தில் பேசிக்கொள்வார்கள். அந்நியர் ஆண்டபோது, வெளிநாட்டில் இருந்து வந்த சிலர் இவற்றை மெய்ப்பித்தார்கள்.

வடமொழி எப்போதோ வழக்கிழந்து போய்விட்டது. ஆனால் அதனோடு தொடர்புடையவர்கள் அதிகார வர்க்கத்தோடு தொடர்புடையவர்கள். மக்களிடம் புழக்கத்திலுள்ள தமிழைக் கல்வி நிறுவனங்களில் படிக்க வாய்ப்பில்லை. எவ்வளவு பெரிய முரண்பாடு. வேறு எங்குமில்லை; தமிழ்நாட்டில்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones, 1788) கிரேக்கம், இலத்தீன் போன்ற இந்தோ - ஐரோப்பிய மொழிகளுடன் குடும்ப உறவுடையது சமஸ்கிருதம் என்று கூறிவிட்டார். இருப்பினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காரே, சார்லஸ் வில்கின்ஸ், கோல்புருக் (திராவிடச்சான்று, பக். 198 - 199) போன்றோர் தமிழ் முதலான இந்திய மொழிகளுக்குத் தாய் மொழி வடமொழியே என்று குறுக்குச்சால் ஓட்டினார்கள். அவர்கள் கருத்தை வலிமை இழக்கச் செய்த பெருமை இராபர்ட் கால்டுவெல் (A Comparative Grammar of Dravidian or South Indian family of languages, 1856). அவருக்கு முன்னர் எல்லீஸ் (Francis Whyte Ellis, 1816). என்னும் பெருமகன் திராவிடமொழிகளும் சமஸ்கிருதமும் வேறுவேறு குடும்பத்தைச் சார்ந்தவை என்று கூறியுள்ளார்.

காம்பெல் (Campell A Grammar of Teloogoo language, 1816) என்பவரின் நூலுக்கு எழுதிய முன்னுரையில் எல்லீஸ் வடமொழியும் திராவிட மொழியும் வேறுவேறு குடும்பத்தைச் சார்ந்தவை என்பதைத் தெளிவாகக் கூறுகின்றார். அவரது எதிர்பாராத மரணத்தில் அவரது கருத்தும் வெளிப்படாமல் போய்விட்டது. இருப்பினும் திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்படும் இராபர்ட் கால்டுவெல் பல சான்றுகளைக் காட்டி என்றும் வடமொழி இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது, தமிழோடு பண்பட்ட மொழிகள் - பண்படா மொழிகள் எனப் பன்னிரண்டு மொழிகள் திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்றும் கூறுகின்றார்.

பல குடும்ப மொழிகளின் இலக்கண கோட்பாட்டை அறிந்த கால்டுவெல் பெருமகனார் திராவிட மொழிகளில் காணப்படும் திணை - பால் பாகுபாட்டை அறிந்து இந்த மொழிபேசுவோரின் முற்போக்குச் சிந்தனையை உச்சத்திற்குக் கொண்டுபோய்ப் பாராட்டுகின்றார்.

The Peculiar Dravidian law gender which has now been described would appear to be a result of progressive intellectuial and grammatical cultivation... (1976: 222).

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் கட்டமைத்த திராவிடம் என்னும் கோட்பாட்டை வளர்த்தெடுத்திருந்தால் விடுதலையின்போது பழைய தென்னாட்டை மீட்டுருவாக்கம் செய்திருக்கலாம். இந்தியாவின் தொன்மைக் குடியினர் திராவிடரே என்பதற்கு இந்தியா முழுவதும் மொழி, தொல்பொருள் சான்றுகள் நிறையக் கிடைக்கின்றன.

பிராகூயி என்னும் வட திராவிடமொழி பாகிஸ்தானின் பலூசிஸ்தான் பகுதியில் இன்னும்

வழக்கில் உள்ளது. இந்தியாவின் தென்கோடி முதல் வடகோடி வரை இருபத்தைந்துக்கு மேற்பட்ட திராவிட மொழிகள் பேசப்படுகின்றன. சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்பதை 1920களிலேயே சர் ஜான் மார்ஷல் (1922) உறுதிபடக் கூறினார். இப்போதைய ஆய்வில் அக்கருத்தாக்கமும் கனிந்து திராவிடத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அஸ்கோ பர்போலா (2009:30), ஐராவதம் மகாதேவன் (2010-8-9) போன்றோர் சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என வலியுறுத்துகின்றனர்.

தமிழை முதன்மைப்படுத்த வேண்டும் என்பதற்காகத் திராவிடம் என்னும் கருத்தாக்கத்தை ஆரியம் சார்ந்தவர்தாம் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் திராவிடம் சார்ந்தவர்களும் மறுக்கின்றார்கள்.

ஆரியப் பாலை அதிகம் குடித்த ஆந்திரர், கன்னடர், கேரள மக்கள் திராவிடக் கோட்பாட்டை ஏற்க மாட்டார்கள். ஏற்க மாட்டார்கள் என்பதை நதிநீர்ப் பிரச்சினைகளிலேயே அறிந்து கொள்ளலாம். கடலளவு திராவிட வரலாறு குறுகிக் குட்டையாகி விட்டது. அந்நியர் வரவு மட்டுமல்லாது இங்கு நடந்த அடிபிடிச் சண்டையும் ஒரு காரணமாகும்.

திராவிடம் என்ற சொற்சுட்டு கால்டுவெல்லால் உண்டாக்கப்பட்டதன்று. அது ஓர் ஆதிச் சொல் (தமிழா. ப. 160). தமிழாற்றுப்படை நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து தொன்மையின் உண்மையை ஏற்றுக் கொள்வதற்காகப் பாராட்ட வேண்டும்.

இந்திய வரலாற்றில் திராவிட வரலாறு மறைக்கப்பட்டிருப்பதைப் பெரும்பெரும் வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ள தலையணை அளவுள்ள நூல்களைப் புரட்டிப் பார்த்தாலே தெரியும். இருப்பினும் இந்திய வரலாற்று ஆய்வில் அரசியல் கலக்காமல் மீட்டுருவாக்கம் (Reconstruction) செய்தால் தமிழை முதன்மையாகக் கொண்ட திராவிடம் முதலில் நிற்கும்.

பின்னாளில் ஓர் அரசியல்களம் திராவிடம் சார்ந்து அமைய வழி வகுத்துக் கொடுத்த கால்டுவெல் பெருமகனை நூலாசிரியர் வஞ்சம் இல்லாமல் பாராட்டுகின்றார்.

நன்றி அய்யனே! ஒரு தலைமுறைக்கே தலையறிவு தந்தவனே! எங்கள் மூலமுகவரி அறிந்து சொன்ன மூதறிஞனே! தாய்க்கு முதல் எழுதிய தனையனே! அயர்லாந்தில் கருவுற்று இடையன் குடியில் திருவுற்றவனே! பைன் மரங்களுக்கிடையே கண்விழித்துப் பனை மரங்களுக்கிடையே கண்மூடியவனே! உனக்கும் கிறித்துவச் சமுதாயத்தின் பெரும் தொண்டுக்கும் தமிழ்ச் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது (தமிழா. ப. 166).

நூலாசிரியர் குறிப்பிட்டு இருப்பவை உண்மை. தமிழிலுள்ள திருக்குறள் முதலான பல நூல்களை மொழிபெயர்த்திருக்கிறார்கள். இலக்கண, இலக்கியங்கள் நம்மவையாக இருந்தாலும் அவற்றின் நுட்பங்களை அறிய அவர்கள் காட்டிய மொழியியல் கோட்பாடும் இலக்கியக் கோட்பாடும் தமிழின் சிறப்பைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளன. கார்ல் கிரவுல் (Karl Graul, 1855) என்னும் ஜெர்மானிய அறிஞரின் மெல்வினை (Weak verb) இடைவினை (ஆனைனடந எநசதீ) வல்வினை (Middle verb) பற்றிய பகுப்புத் தமிழ் வினை ஆய்வுக்கு ஒரு கலங்கரை விளக்கம்.

டி.பர்ரோ (Strong verb) எம்.பி.எமனோ (M.B. Emeneau) என்னும் திராவிட மொழியியல் அறிஞர்கள் தொகுத்து வெளியிட்டுள்ள திராவிட இணைச் சொல் அகராதி (A Dravidian Etymological Dictionary, 1961) போன்று இன்னொரு விரிவான அகராதியை இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் நாம் தொகுக்க மாட்டோம்.

இப்படி அயலவர் தம் மொழியாகத் தமிழை நினைத்துச் செய்துள்ள தொண்டை நினைவுகூரும் நூலாசிரியரைப் பாராட்ட வேண்டும். கால்டுவெல் திராவிடத்திற்குத் தெளிவாக வழிகாட்டியுள்ளார். நாம்தான் பேசிக்கொண்டே வழியைத் தவற விட்டுவிட்டோம். இருப்பினும் விழிப்புணர்வைப் பெற்றோம் ஈரோட்டுப் பாதையால்.

### பெரியார் முதலானோர்

காரல் மார்க்சின் பொதுவுடைமைக் கோட்பாடு பூமியில் களையாய் மண்டிக் கிடந்த மூடப்பழக்க வழக்கங்கள், அறியாமை, அடிமைத்தனம் போன்றவற்றை எல்லாம் புரட்டிப் போட்டது. பெரியாரின் முற்போக்குச் சிந்தனைகள் பிற திராவிடம் சார்ந்த நாடுகளைப் பாதிக்கவில்லை என்றாலும் தமிழ்நாட்டில் உறுதியாக ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. முற்பட்டோர் அல்லாத மற்றவர்கள் அண்மைக் காலமாக நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையோடு வாழ முதன்மைக் காரணம் தந்தை பெரியாரே. இதனால்தான் பெரியார், அம்பேத்காரின் தலைகள் சிதைகின்றனவோ?

மனித நேசம்தான் பெரியாரின் இலக்கு; பகுத்தறிவுதான் அவர் பாதை; சுயமரியாதைதான் வாகனம். சமத்துவம்தான் அவர் சக்கரத்தின் அச்சு

(தமிழா. ப. 223). பல நூற்றாண்டுகள் பக்தியோடும் நிலக்கிழார்களோடும் பவனி வந்த தமிழுக்குப் பெரியாரைக் கண்டதும் பிணைத்திருந்த விலங்கு நொறுங்கி இருக்கும். சமுதாயச் சீர்திருத்தம், மொழிச் சீர்திருத்தம் எனப் பெரியார் தொட்டவை எல்லாம் துலங்கின. மார்க்சியமும் அம்பேத்கரியமும் அவரை ஆரத் தழுவிக் கொண்டதால்தான் 97 விழுக்காடு மக்களுக்கான விடியலைத் தேட முடிந்தது.

பெரியார் முரசம் என்றால் அதில் இருந்து முழங்கும் ஓசையாகப் பாவேந்தர், அண்ணா, கலைஞர் போன்றோர் தமிழகம் முழுவதும் அதிர்வு அலைகளை உருவாக்கினார்கள்.

பெரியார் சமுதாயத்தில் மண்டிக் கிடந்த களைகளை எடுத்துக்காட்டினார். பாரதிதாசன் அவற்றை எல்லாம் கவிதையில் முழங்கினார். தமிழகத்தில் காலங்காலமாகத் தேங்கிக் கிடந்த பிற்போக்குத் தனங்களைப் பாரதிதாசன் அளவிற்குச் சாடியவர் எவரும் இல்லை எனலாம்.

பெரியார் வழியில் வளர்ந்த அண்ணாவும் கலைஞரும் அரசுக் கட்டில் ஏறியதும் பல அரிய காரியங்களைச் செய்தார்கள். சனாதனக் கிடங்கிலிருந்து வருணாசிரமப் பள்ளத்தாக்கிலிருந்து 97 விழுக்காடு மக்களின் வாழ்வியல், உளவியல் இரண்டையும் மீட்டெடுக்கக் கருதியது அவர் கடமை (தமிழா. ப. 285) என்று அண்ணாவின் மனக்கிடக்கையை நூலாசிரியர் பதிவு செய்கின்றார்.

எல்லோரும் இந்நாட்டு மன்னர் (பார.பாட. 1831) என்னும் இலக்கை நோக்கி கலைஞர் போன்றவர்களை வீறுநடை போடவைத்தவை மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம் போன்ற முற்போக்குச் சிந்தனைகள். இறைவனையும் தலைவிதியையும் சொல்லிச் சொல்லி உழைப்பிலும் ஏழ்மையிலும் ஆழ்த்திச் சிந்திக்கவிடாமல் தடுத்த சிறு கூட்டத்தின் பிடியில் இருந்து கட்டுடைத்துக் கொண்டு வெளியே வந்தவர் கலைஞர்.

அதிகாரம் கைக்கு வரும்போது கூடவே ஊழல், கருப்புப் பணம் போன்றவை பற்றியும் பேசப்படும். அவற்றில் உண்மையும் இருக்கலாம்; பொய்யும் இருக்கலாம். அவை பற்றி இங்குப் பேச இடமில்லை. உலகமயம் போல ஊழலும் உலகமயமாகி விட்டது. தேனை எடுத்தவன் கையை நக்குவது இயல்பு. ஆனால் இன்றைய உலகில் பொதுவாழ்வு, அரசுத்துறை, தனியார்துறை என எல்லாவற்றிலும் உள்ளவர்கள் தேனையே குடித்து விடுகிறார்கள். தேனால் வந்த நோய்க்குத் தேனே மருந்து என்பார்கள். இப்போது தெய்வமே மருந்தாகி விட்டது. ஆலயங்களில் மக்கள் குவிகிறார்கள். பங்கைக் காணிக்கையாகக் கொட்டுகிறார்கள். காரல் மார்க்ஸ், அம்பேத்கார், பெரியார் போன்றோர் மறுபடியும் பிறந்து இன்றைய உலகச் சூழலைப் பார்த்தால் மயங்கியே விழுந்து விடுவார்கள்.

கவிஞர் வைரமுத்துகூடப் பல நூல்களில் வறுமை, சுரண்டலைப் பதிவு செய்துள்ளார். 1947 - ஆகஸ்ட் - 15 / அவன் / ஒரு / பட்டுவேட்டி பற்றிய/ கனவில் இருந்தபோது / கட்டியிருந்த கோவணமும் / களவாடப்பட்டது. (கேள்வியால், பக். 82 - 83) ஊருக்குள் வந்தது ஊமைச் சுதந்திரம் / ஒன்றும் தரவில்லையே / சுரண்டும் நரிகள் / எங்கே? எங்கே? (நேற்றுப்போட்ட. பக். 113 - 114). ஆனால் பெரியாரின் வருகைக்குப் பிறகு குறிப்பாக அண்ணா, கலைஞர் போன்றோரின் பேச்சாலும் எழுத்தாலும் பற்றி எரிந்தவற்றை தமிழாற்றுப்படை நூலாசிரியர் பட்டியலிடுகின்றார். எரிகிறது; பற்றி எரிகிறது. மடமை எரிகிறது; மூட நம்பிக்கை எரிகிறது; வருணாசிரமம் எரிகிறது; சூழ்ச்சி எரிகிறது; ஆட்சி எரிகிறது; யுகக் குப்பை எரிகிறது; ஒடுக்கப்பட்டவர் மீது ஆண்டாண்டு காலம் செலுத்தப்பட்ட ஆதிக்கம் எரிகிறது; இடது சாரிச் சிந்தனைகளால் அநியாயத்தின் அடிப்படை எரிகிறது. வற்றிக் கிடந்த வாழைத்தண்டு மனங்களிலும் லட்சியம் எரிகிறது. எரியாதவை எழுதிய காகிதமும் திரையிடப்பட்ட திரையும் மட்டும்தான் (தமிழா. ப. 291)

சனாதன தர்மம் அழிந்துவிட்டது என்னும் புலம்பல் இப்போது அதிகமாகக் கேட்கிறது. அழிந்தவை எல்லாம் நூலாசிரியர் மேலே கூறியவைதாம். புலம்புகின்றவர்களே பெரும்பாலான தர்மங்களைத் தலைகுப்புறப்போட்டுத் தாண்டி விட்டார்கள்.

**படைப்பாளர்கள்**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் / தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் (பார. பாட. 1787) என்கிறார் மகாகவி. அறிவியலைவிடப் படைப்பிலக்கியங்கள் தமிழில் சிறப்பாகவே வளர்ந்துள்ளன. செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் இந்த மண்ணைப் பாடியதை விடவும் புதுக்கவிதைகள் உலகம் தழுவி எல்லாவற்றையும் பேசுகின்றன. சிறுகதை, புதினம் வளர்ந்த அளவிற்கு நாடகம் வளரவில்லை.

படைப்பிலக்கியங்களில் குறிப்பாகச் சிறுகதைகளிலும் புதினங்களிலும் வகை வகையான

மாந்தர்களை வாழும் நிலம், சூழல் அடிப்படையில் சந்திக்கலாம். உலகத்தின் ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் புதுக்கவிதைகள் வழி அறியலாம். சொல்லப் போனால் பிரச்சினைகளைக் கூறுவதற்கே தோன்றியவை போலப் புதுக் கவிதைகள் உள்ளன.

புதுமைப்பித்தன் சிறுகதைக்கு வடிவம் தந்தவர். அவருடைய கதைக்கருவும் கதாபாத்திரங்களும் காலங்காலமாக இருந்தாலும் வெளியே தெரியாதவை. புதுமைப்பித்தனைப் போன்றே ஜெயகாந்தனுடைய சிறுகதையிலும் புதினங்களிலும் வரும் கதை மாந்தர்கள் நெஞ் சாங்குழிக்குள் நிழலாடிக் கொண்டே இருப்பார்கள். இவர்களிடமும் தமிழாற்றுப்படை நூலாசிரியர் தமிழை ஆற்றுப்படுத்துகின்றார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் திரையிசைப் பாடல்களும் தூங்கிக் கிடப்பவர்களைத் தட்டி எழுப்பக் கூடியவை. இந்தியாவில் ஆன்மீகம் தழைத்திருக்கிறது என்கிறார்கள். சகிப்புத் தன்மை நிறைந்துள்ளது என்கிறார்கள். உபதேசங்கள் மூட்டைக் கணக்கில் மொழியப்பட்டுள்ளன. சாதிச் சண்டை, மதச்சண்டை, ஊழல் சுரண்டல், ஆண்டான் - அடிமை என மானுட வளர்ச்சிக்கான பிற்போக்குத் தனங்கள் அனைத்தும் மண்டிக் கிடக்கின்றன.

பட்டுக்கோட்டையாரின் பாடல்களில் அடிக்கடி நினைவுக்கு வரும் அடிகள். சித்தர்களும் யோகிகளும் / சிந்தனையில் ஞானிகளும் / புத்தரோடு ஏசுவும் உத்தமர் காந்தியும் / எத்தனையோ உண்மைகளை / எழுதி எழுதி வச்சாங்க / எல்லாந்தான் படிச்சீங்க? என்ன பண்ணிக் கிழிச்சிங்க? (பட். பாட. ப. 193). ‘எங்கள் குருநாதர் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை’ என்று யாரும் தப்பிக்க முடியாது. மனித நேயத்தில் முரண்படுபவர்களுக்கு மரண அடிகொடுத்துள்ளார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். உலகில் எவ்வளவு முரண்பாடு? பாடல் அடிகளில் எவ்வளவு எதார்த்தம்!

தமிழை ஆற்றுப்படுத்த வேண்டியவர்களுள் கவியரசு கண்ணதாசனும் குறிப்பிடத்தக்கவர். எதார்த்த வாழ்க்கை, இலக்கியங்கள் என அனைத்திலிருந்தும் தேனீ போலச் சிறுகச் சிறுக உறிஞ்சி ஒரு கவிதைக் களஞ்சியத்தைத் தந்துள்ளார். முரண்பாடுகள் நிறைந்தவையாக அவர் வாழ்க்கை இருந்தாலும், தமிழ்க் கவிதைச் சமூகத்தில் யாரோடும் ஒப்பிட முடியாத தனியொரு தமிழ்க் கவிஞன் கண்ணதாசன். இலக்கிய வரலாற்றில் வேறெப்போதும் காணாத வித்தியாசம் அவர். அந்த வித்தியாசம்தான் அழகு (தமிழா. ப. 315) என நூலாசிரியர் முத்தாய்ப்பாக முடிக்கின்றார்.

இறுதியாகத் தமிழை ஆற்றுப்படுத்துவது அப்துல் ரகுமானிடம். அவரை மட்டுமல்லாமல் புதுக்கவிதையின் வரலாற்றையே நூலாசிரியர் மிகவும் எளிமையாக எழுதி முடித்து விட்டார். முன்பே கூறியது போலத் தமிழாற்றுப் படையில் வரும் இருபத்து நான்கு பெருமக்களும் குறியீடுகள்தாம். ஒவ்வொருவருள்ளும் எண்ணற்றவர்கள் இணைந்திருக்கிறார்கள்.

புல்லின் இதழ்கள் வழி ஒளிர்ந்த புதுக்கவிதை மகாகவி, ந.பிச்சமூர்த்தி வழியாக வளர்ந்து மணிக்கொடி, எழுத்து, வானம்பாடி வழியாகப் பரவியதைக் குறிப்பிடுகின்றார். மீரா, சிற்பி பாலசுப்பிரமணியன், நா.காமராசன், ஈரோடு தமிழன்பன், அக்கினிபுத்திரன், புவியரசு, மு.மேத்தா, சந்திக்கனல், ஞானி, கங்கைகொண்டான், தமிழ்நாடன், பா.செயப்பிரகாசம், சிதம்பரநாதன் எனப் பெரும்பான்மையான கவிஞர்களைப் பட்டியலிடுகின்றார்.

பலரையும் கவர்ந்த அப்துல் ரகுமானின் கவிதைகள் சிலவற்றை எடுத்துக்காட்டி நினைவு கூர வைக்கின்றார். கவிதை மட்டுமல்லாமல் அவரின் நூல் தலைப்புகளே கவித்துவத்தையும் கம்பீரத்தையும் வெளிப்படுத்தும்.

தமிழாற்றுப் படை என்னும் தலைப்பை முதலில் அறிந்தபோது ஆற்றுப்படையின் நீட்சியாகத் தெரிந்தது. கட்டுரைகள் வெளிவந்தபோது துண்டு துண்டாகத் தெரிந்தது. ஒட்டு மொத்தமாகப் படிக்கும் போது வழக்கமான இலக்கிய வரலாறுபோல அல்லாமல் தமிழரின் வரலாறு, நாகரிகம், பண்பாடு எனத் தமிழர் சார்ந்த எதனையும் விட்டு வைக்காமல் ஒட்டு மொத்தமாகத் திரட்டித் தந்த நூலாகத் தெரிந்தது.

நிறைவாக ஒன்று. தமிழாற்றுப்படை நூலாசிரியர் கவிஞர் வைரமுத்து நூற்றுக்கணக்கான நூல்களையும் கட்டுரைகளையும் படித்து ஒரு நல்ல ஆய்வைச் செய்துள்ளார் என்பதை நூலைப் படிப்போர் அறிந்துகொள்ளலாம். அடிக்குறிப்பும் துணை நூற்பட்டியலும் அமைந்திருந்தால் எல்லோருக்கும் இல்லையென்றாலும் தேவை உள்ளோருக்குப் பெரிதும் பயன்படும். தமிழாற்றுப்படைக்கு நெஞ்சம் நெகிழும் வாழ்த்துக்கள்! இன்னும் பல அறிஞர்களிடம் தமிழை ஆற்றுப்படுத்தலாம்.


KAAVYA TAMIL (QUARTERLY) OCTOBER - DECEMBER 2019
Regd No : TN TAM 8012 / 43610
தேவர் ஜெயந்தியை முன்னிட்டு
பேரா.சண்முகசுந்தரத்தின்
பசும்பொன் தேவர்
நான்கு நூல்கள்
ரூ.400
ரூ.650
பசும்பொன் களஞ்சியம்
ரூ.350
பசும்பொன் சரித்திரம்
ரூ.300
பசும்பொன் கருவூலம்
மொத்த விலை
ரூ.1650/-
சலுகை விலை
ரூ.1200/-
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
32
ஐப்பசி
அக்டோபர் - டிசம்பர் 2019
மலர் 8 இதழ் 4
காவ்யா
தமிழ்
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹100
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
பேரா.சு.சண்முகசுந்தரத்தின்
மதுரைவீரன் வழிபாட்டு அரசியல்
சுந்தரபாண்டியனின்
சிறுகதை 'முப்பிடாதி'
புதுவை கோபியின்
நவீன நாடகம் தோழர்
பேரா.தே.ஞானசேகரன்
அரிமளம் சு. பத்மநாபன்
இரா. அறவேந்தன்
ஜோசப் குமார்,
சோமசுந்தரம் போன்றோரின்
10 கட்டுரைகள்
விக்ரமாதித்யனின்
'இளம்பிறைக் கவிதைகள்'
சென்னிமலைதண்டபாணி,
அன்பாதவன் கவிதைகள்
மற்றும்
நூல் விமர்சனங்கள்



அனுபவம்

# குடுகுடுப்பைக்காரர் வாழ்வியல்: இனவரைவியல் நோக்கில் கள ஆய்வு அனுபவங்கள்

## ந.முருகேசபாண்டியன்

சிறுபத்திரிகை மனோபாவத்துடன் காத்திரமான இலக்கியப் படைப்புகளை வாசிப்பதுடன், படைப்பாளர்களைத் தே-டிச் சென்று மணிக்கணக்கில் உரையாடும் இயல்புடைய நான் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 1978ஆம் ஆண்டு தமிழில் முதுகலைப் படிப்பில் சேர்ந்தது, தற்செயலானது. அப்புறம் எம்.ஃபில் பட்ட வகுப்பில் சேர்ந்தேன். மொத்தம் 35 மாணவர்களில் 28 பேர் கல்லூரிப் பேரசிரியர்கள், எழுவர் மட்டும் எம்.ஏ., முடித்து நேரடியாகச் சேர்ந்திருந்தோம். சமூகவியல் நோக்கில் இலக்கியப் படைப்புகளை ஆராய்ந்திட வேண்டுமென மனதுக்குள் நினைத்து இருந்தேன். இலக்கியப் புத்தகங்களை வாசித்து மேற்கொள்ளும் ஆய்வுதான் முக்கியமானது என்ற கருத்து, எனக்குள் வலுவாகப் பதிந்திருந்தது. ஒரு நாள் வகுப்பறைக்கு வந்த துறைத் தலைவர் இராம.பெரியகருப்பன், மாணவர்கள் எல்லோரும் அவரவர் சாதி சார்ந்த சடங்குகள், குலதெய்வ வழிபாடுகள் குறித்து ஆய்வேடு எழுதிட வேண்டுமென ஆணை பிறப்பித்தார். எனக்குள் கனன்ற இலக்கிய வேட்கை, நசிந்து போனது. ஆய்வேடு தலைப்பைத் தேர்ந்தெடுக்கக்கூட உரிமை இல்லையா? என மனம் கொந்தளித்தது. மாணவர்கள் பெரும்பாலும் சொந்த சாதி சார்ந்து தலைப்புகளில் ஆய்வு செயவதாக எழுதிக் கொடுத்தனர். எனக்குள் கொப்பளித்த எரிச்சல் காரணமாக வித்தியாசமாக ஏதாவது செய்திட நினைத்துப் பழங்குடியினர் பற்றி ஆய்வு மேற்கொள்ளலாம் என முடிவெடுத்தேன். என்னுடைய ஊரான சமயநல்லூருக்கு அருகில் இருக்கிற சத்தியமூர்த்தி நகரில் வசிக்கிற குடுகுடுப்பைக்காரர்கள் பற்றி ஆராயப் போகிறேன் என வீம்புடன் எழுதிக் கொடுத்தேன். எனது நெறியாளரான பேராசிரியர்

தி.சு.நடராசன் உற்சாகத்துடன் பச்சைக் கொடி காட்டினார். இப்படியாகத்தான் நாட்டார் வழக்காறு என்று அறியப்பட்ட துறையில், தற்செயலாக நுழைந்து இளம் ஆய்வாளரானேன். அன்றைய காலகட்டத்தில் நாட்டார் வழக்காறு குறித்து விரிவான அளவில் தமிழ்ப் புத்தகங்கள் இல்லை. சரி, குடுகுடுப்பைக்காரர்களை நேரில் பார்த்து வரலாம் என உச்சி வெய்யிலில் இரண்டு மைல் தொலைவு சைக்கிளை மிதித்துக்கொண்டு போனேன். சத்தியமூர்த்தி நகர் சிறிய கிராமம், ஐந்தாறு தெருக்களில் வீடுகள். ஆள் நடமற்ற தெருக்களில் ஓட்டு வீட்டுத் திண்ணைகளில் வயதானவர்கள் படுத்திருந்தனர். யாரிடம் எதைக் கேட்பது என்ற குழப்பம் ஏற்பட்டது. யோசிக்காமல் தலைப்பைத் தேர்ந்தெடுத்தது குறித்து நொந்த மனநிலையுடன் வீட்டிற்குத் திரும்பினேன். ஆய்வு நெறிமுறை பாடத்தில் இடம் பெற்றிருக்கும் கள ஆய்வு பற்றிய இயலுக்கும் நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லை என்பது புலனாகியது. என்ன செய்யலாம் என்று யோசித்தவுடன் பாவைக்கூத்துக் கலைஞர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கிற பேராசிரியர் மு.ராமசுவாமி நினைவுக்கு வந்தார்.


முதுகலை மாணவனாக இருந்தபோது நண்பரும் ஆசிரியருமான மு.ராமசுவாமி கடச்சனேந்தல் கிராமத்தில் வசித்த பாவைக்கூத்துக்காரர்களைச் சந்தித்துத் தகவல்களைத் திரட்டியபோது, உடன் போயிருந்தேன். மராட்டிக்காரரன ராவ் கெத்தாகப் பேசுவதை, ராமசாமி பணிவுடன் கேட்டுக்கொண்டிருந்தார். எனக்குச் சற்று அலுப்பாக இருந்தது. ஏன் இந்த மாதிரி தலைப்பை முனைவர் பட்டத்துக்குப் பதிவு செய்து, கள ஆய்வில் தகவல் திரட்டுவதற்குப் படாத பாடுபட வேண்டும் எனத் தோன்றியது. ஆனால், இன்று எனது ஆய்வும் கள ஆய்வில் தகவல்களைத் திரட்டுவது என்ற நிலையில், சொல்வதற்கு என்ன இருக்கிறது? அன்றைய காலகட்டத்தில் கள ஆய்வின் மூலம் தகவல்களைத் திரட்டி ஆய்வு செய்திடும் போக்கு, அறிமுகமாகிக்கொண்டிருந்தது. எப்படி கள ஆய்வு செய்ய வேண்டுமென வழிகாட்டுகிற வழிகாட்டி நூல்கள் எதுவுமில்லை. 'மேயப் போகிற மாடு கொம்பில் புல்லைக் கட்டிக்கொண்டா போகும்?' என்ற சொலவடை, இனவரைவியல் ஆய்வாளருக்குப் பொருந்தியது, வேடிக்கைதான். புத்தகங்களை முன்வைத்துச் செய்கிற ஆய்வுகளுடன் ஒப்பீடும்போது, இனவரைவியல் ஆய்வில் ஈடுபடுகிற ஆய்வாளரின் பொறுப்பும் எதிர்கொள்கிற சவால்களும் ஏராளம். எனது கள ஆய்வு சார்ந்த இனவரைவியல் ஆய்வு, நாட்டார் வழக்காற்றியல் துறையில் ஆய்வினை மேற்கொண்டிருக்கிற இளம் ஆய்வாளர்களுக்கு நிச்சயம் பயன்படும் என்ற நோக்கில் அனுபவங்களை விவரித்துள்ளேன்.

இனவரைவியல் என்ற சொல் பெரிதும் பண்பாட்டு மானிடவியலுடன் தொடர்புடையது. ஒரு வட்டாரத்தில் தனித்துவமான போக்குகளுடன் பல்லாண்டுகளாக வாழ்கிற மக்கள் குழுவினர் குறித்துக் கள ஆய்வு மூலம் ஆய்வாளர் திரட்டுகிற தகவல்கள், இனவரைவியல் ஆய்வின் அடிப்படையாகும். பழங்குடியினர் அல்லது குறிப்பிட்ட சாதியினருடன் நெருங்கிப் பழகி, அவர்களுடைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பிறப்பு முதலாக இறப்பு வரையிலான சடங்குகள், கடவுள் வழிபாடு, விவசாயம், சாதியக் கட்டமைப்பு, உணவு, அன்றாட நடைமுறைகள், இயற்கைப் பின்புலம், மதிப்பீடுகள் போன்றவற்றைத் தொகுப்பது இனவரைவியல் ஆய்வு அணுகுமுறையாகும். ஆய்வாளர், குறிப்பிட்ட மக்களுடன் தானும் ஒருவனாக வாழ்ந்து, உற்றுநோக்கல் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களையும், பண்பாட்டுத் தரவுகளையும் மரபுகளையும் பொதுமைப்படுத்தி ஆவணப்படுத்துதல் இனவரைவியலின் தனித்துவம் ஆகும். தரவுகள் அடிப்படையிலான இனவரைவியல் ஆய்வுடன் தொடர்புடைய நிலையில், குறிப்பிட்ட வட்டாரத்தில் வாழ்கிற நாட்டார் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களையும் அனுபவங்களையும் தொகுப்பது, இனவரைவியல் ஆய்வாளரின் உடனடிப் பணியாகும்.

இனவரைவியியல் ஆய்வு தொடங்குவதற்கு முதலடியானது ஆய்விற்குட்பட்ட சாதியினர் அல்லது பழங்குடியினர் யார் என்ற கேள்வி, ஆய்வாளரின் மனதில் தோன்ற வேண்டும். எடுத்துக்காட்டாக குடுகுடுப்பைக்காரர்கள் பற்றிய இனவரைவியல் ஆய்வு என்று எடுத்துக்கொள்ளலாம். ஆய்வாளர், முதலில் பொதுப்புத்தியில் குடுகுடுப்பைக்காரர் பற்றி உருவாக்கப்பட்டிருக்கிற கதைகளைக் கண்டறிய வேண்டும். ஏற்கனவே நம்பிக்கை சார்ந்து கதைகளில் வெளிப்படும் பதிவுகளும் ஆய்விற்குரியன. கிராமத்துப் பின்புலத்திலிருந்து வந்த எனது மனம் புனைந்த குடுகுடுப்பைக்கார் பற்றிய விவரணையில் இருந்து ஆய்வினைத் தொடங்கினேன். "நள்ளிரவு நேரம். கிராமம் மௌனத்தில் அடங்கியிருக்கும். தொலைவில் மெல்லிதாக காற்றைக் கிழித்துக்கொண்டு வெளிப்படும் ஓசை கேட்கும். கூடவே நாய்களின் இடைவிடாத குரைப்பொலியும். சற்று நேரத்தில் தெருமுனையில் குடுகுடுப்பை கணீரென்று ஒலிக்கும்போது, மனம் திடுக்கிடும். அமானுடத்தின்

சக்தி, திகிலாகக் கிராமத்தினருக்குள் ஊடுருவும்; மாயப் புனைவின் வால் எல்லோரின் முகத்திலும் உரசிப்போகும். மனதிற்குள்ளிருந்து பயம், திடீரென உடலெங்கும் பரவும். ஏதாவது கெட்ட சேதியைக் குடுகுடுப்பைக்காரர் சொல்லிவிட்டல் என்ன செய்வது? ‘இந்தத் தெருவில பெரிய உசிரு ஒன்னு அய்யோனு போகப் போகுது’ என்று சாமக் கோடாங்கி சொன்னால், என்ன செய்ய முடியும்? தெரு விளக்குகள் என்ற பெயரில் குண்டு பல்புகள், வருடத்தில் சில நாட்கள் மட்டும் ஒளிர்ந்த காலகட்டத்தில், எங்கும் பேய்களும் முனிகளும் உலாவிடும் கிராமத்துத் தெருக்களில் நள்ளிரவில் தனியாக இருளை ஊடறுத்துச் செல்லும் குடுகுடுப்பைக்காரனின் இயக்கம் விநோதமானதுதான்.” நவீன வாழ்க்கையில் குடுகுடுப்பை ஒலித்துக்கொண்டு எதிர்காலம் குறித்துச் சொல்கிறவர்களின் பின்புலத்தில் ஏதேனும் அமானுட ஆற்றல் பொதிந்திருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டும் என்ற ஆர்வம்தான் கள ஆய்விற்கான அடிப்படையானது.

குடுகுடுப்பைக்காரர்களின் பாரம்பரியமான குலத்தொழில் குடுகுடுப்பை எனப்படும் சிறிய உடுக்கையை ஒலித்துக்கொண்டு குறி சொல்லுதல் ஆகும். அதன்மூலம் மக்களிடமிருந்து பெற்றும் உணவு, தானியம், பழைய துணிகள், பணம் போன்றவற்றைக்கொண்டு வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் குடும்பத்துடன் ஊர்ஊராக நாடோடி போலச் சென்று பொருளைத் தேடி அலைகின்றனர். எனினும் அவ்வப்போது, ஊருக்கு வந்து தங்கிச் செல்கின்றனர். வைகாசி மாதம் முழுக்க ஊரில் தங்கியிருப்பது கட்டாயமாகும். ஏதோவொரு மாய ஆற்றலினால் பிறருடைய எதிர்கால வாழ்க்கை குறித்தும், நடந்தவை குறித்தும் குறி சொல்லும் திறமை குடுகுடுப்பைக்காரர்களுக்கு இருப்பதாக மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை, கவனத்திற்குரியது. இவர்கள் யார்? எங்கிருந்து வருகின்றனர்? இவர்கள் வேலையே குறி சொல்வதுதானா? மாயமந்திரம் அறிந்தவர்களா? பில்லி, சூனியம், ஏவல், வசியம் தெரிந்தவர்களா? இப்படி பல்வேறு கேள்விகள் எனக்குள் தோன்றியதைக் கள ஆய்வில் கண்டறிந்திட வேண்டும் என்பது ஆய்வின் கருதுகோளானது. இன்னொருபுறம் வீட்டு வாசலில் நின்று குடுகுடுப்பையை ஒலித்து, ‘நல்ல சேதி வரப் போகுது” என்ற நன்னம்பிக்கையைக் காற்றில் பரப்புகிறவர்களை எளிதில் புறக்கணிக்க முடியாது இல்லையா?




**குடுகுடுப்பைக்காரர் வாழ்வியல்: இனவரைவியல் ஆய்வு.**
ந.முருகேசபாண்டியன்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.,
சென்னை, விலை.80/-

குடுகுடுப்பைக்காரர்களைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளும்போது, அவர்களுடைய இன்றைய வாழ்க்கைநிலையையும் சூழலையும் அப்படியே ஏற்றுக்கொண்டேன். கல்வியறிவு அற்றவர்கள், அன்றாட வாழ்க்கைக்கான பொருள், உணவு தேடலுக்காக வீடுவீடாகச் சென்று இரந்து நிற்கிறவர்கள், நாடோடி போல அலைகிறவர்கள், நவீன வாழ்க்கைச் சூழலில் இன்றளவும் பழமையான முறையில் வாழ்கிற நாகரிகமற்றவர்கள், காட்டுமிராண்டிகள், கீழானவர்கள், தீண்டத்தகாதவர்கள் போன்ற எண்ணங்கள், கள ஆய்வினுக்கு முரணானவை. எளிய மனிதர்கள் என்றாலும் எல்லோரையும் போல பண்புகள் உடையவர்கள் என்ற கருத்துடன் அவர்களை அணுகிடும்போது, தகவல்களைத் திரட்டுவது எளிதாகும். இனவரைவியல் நோக்கில் ஆய்வுக்குட்படுத்தப்படுகிறவர்களைப் பற்றிய தாழ்வான அபிப்ராயங்கள் அல்லது பொதுப்புத்தியில் ஏற்கனவே உருவாகியிருக்கும் மதிப்பீடுகளைப் புறக்கணித்துவிட்டு, ஆய்வாளர் எவ்விதமான முன்கூட்டிய அனுமானங்கள் இல்லாமல், திறந்த மனதுடன் அனுகிடும்போது, சரியான தரவுகளைத் திரட்டிட முடியும்.

எண்பதுகளின் தொடக்கத்தில் குறிப்பிட்ட இனக்குழுவினர், பழங்குடியினர், குறிப்பிட்ட சாதியினர் குறித்து ஆய்வை மேற்கொள்வது பெரிதும் மொழியியல் துறையினரின் பணியாக இருந்தது. இருளர், பளியர், நரிக்குறவர் போன்றவர்களின் வாழ்வியல் குறித்தும் அவர்களுடைய பேச்சு மொழிகள் குறித்தும் கட்டுரைகளும் புத்தகங்களும் வெளியாகியிருந்தன. அப்புறம் பிலோ இருதயநாத் எழுதிய பழங்குடியினர் பற்றிய புத்தகங்கள், புதிய உலகினை அறிமுகப்படுத்தின. இனவரைவியல் ஆய்வென்றால் கள ஆய்வுதான் முதன்மையானது என்றாலும், ஆய்வு மேற்கொள்விருக்கிற குறிப்பிட்ட குழுவினர் குறித்த பல்வேறு தகவல்களைத் திரட்டிட வேண்டும். அவை ஆய்வின் செல்நெறியைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையானவை. ஆய்வாளர், முதலில் கள ஆய்வு மேற்கொள்ளவிருக்கிற குழுவினரைப் பற்றிய அச்சு வடிவில் பிரசுரமாகி-

யிருக்கிற தகவல்களைக் கண்டறிந்து தொகுத்திட வேண்டும். அரசாங்க ஆவணங்களான மாவட்ட கெஜட்டியர், மானுவல், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நூல் போன்றவற்றில் இருந்து ஆய்விற்குட்பட்ட சாதியினர் அல்லது பழங்குடி-யினர் பற்றிய அடிப்படைத் தகவல்களைத் திரட்டுவது முதன்மையான பணி. ஆங்கிலேயரின் காலனியாதிக்க ஆட்சியின்போது, பல்வேறுபட்ட மக்கள் திரளினர் குறித்துச் சேகரிக்கப்பட்ட பழைய ஆவணங்களைத் தேடினால், ஆய்வாளர் செல்ல வேண்டிய ஆய்வின் திசைவழி புலப்படும். எட்கர் தர்ஷ்டனின் தென்னிந்தியப் பழங்குடிகளும் சாதிகளும், ஷெரிங்கின் மெட்ராஸ் மாகாணத்தில் பழங்குடிகளும் சாதிகளும் போன்ற ஆங்கிலப் புத்தகங்களில் இருந்து பெறப்படும் ஆய்விற்குட்பட்ட குடியினர் குறித்த அடிப்படைத் தகவல்கள், இனவரைவியல் ஆய்வு குறித்த புரிதலை மேம்படுத்தும். இனவரைவியல்ரீதியில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வந்திருக்கிற முக்கியமான புத்தகங்களைக் கண்டறிந்து வாசிப்பது அவசியம். ஆய்வு தொடர்பாக இதுவரை ஆய்விதழ்களில் பிரசுரமான ஆய்வுக்கட்டுரைகளையும், முனைவர் பட்ட ஆய்வேடுகளையும், கருத்தரங்கக் கட்டுரைகளையும் வாசிப்புக்குட்படுத்த வேண்டும். இணையத்தின் பக்கங்களைத் துழாவி, ஆய்வு தொடர்பாக மின்னணு ஊடகத்தில் பிரசுரமாகியுள்ள தகவல்களைத் தொகுப்பது, ஆய்வை அண்மைக்காலத்தியதாக்கும். களத்திற்குச் செல்லும் முன்னர் ஆய்வாளர் செய்கிற இத்தகைய முன் தயாரிப்புகள், கள ஆய்வில் தகவல்களைத் திரட்டிட எந்தவகையான அணுகுமுறையைப் பயன்படுத்துவது என்று திட்டமிட உதவும்

தகவல்களைச் சேகரிக்கும்போது எவ்விதமான முன்கூட்டிய மனப்பதிவு இல்லாமல் வெளிப்படையாக ஆய்விற்குட்பட்ட மக்கள் குழுவினருடன் பேச வேண்டியதன் அவசியத்தை எனது கள ஆய்வின்போது அறிந்துகொண்டேன். கள ஆய்வில் ஈடுபட்டபோது, முதலில் குடுகுடுப்பைக்காரர்கள் என்னிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. “இதெல்லாம் தெரிஞ்சிக்கிட்டு என்ன செய்யப் போறீங்க? இதுனால உங்களுக்கு எம்புட்டுப் பணம் கிடைக்கும்? எல்லாரையும் போலத்தான் நாங்களும் இருக்கிறோம், இதுல சொல்ல என்ன இருக்கு? எங்களை கிறிஸ்தவராக்கப் போறீங்களா” என்று எதிர்மறையாகப் பேசியதைப் பொறுமையுடன் கேட்டவாறு இருந்தேன். பலரும் தங்களுடைய வாழ்க்கை, வரலாறு, பழக்க வழக்கம் பற்றி அந்நியனான என்னிடம் சொல்வதைச் சற்று மரியாதைக் குறைவாகக் கருதியதைக் கள ஆய்வில் என்னால் கண்டறிய முடிந்தது. அப்போது 19ஆம் நூற்றாண்டில் எட்கர் தர்ஸ்டன் போன்ற ஆங்கிலேயர்கள் எப்படி இனவரைவியல் ரீதியில் இந்தியாவில் வாழ்ந்த மக்களைப் பற்றி எவ்வளவு தகவல்களைத் திரட்டினர் என நினைத்தேன். பழங்குடியினர் பற்றி வாசித்த ஆங்கிலப் புத்தகங்களில் இடம் பெற்றிருந்த தகவல்கள் போல நிச்சயம் குடுகுடுப்பைக்காரர் வாழ்க்கையில் இருந்து புதிய செய்திகளைத் திரட்டிட முடியுமென்று நம்பிக்கையுடன் காத்திருந்தேன். அடிக்கடி சத்தியமூர்த்தி நகருக்குப் போய், குடுகுடுப்பைக்காரர்களிடம் என்னைப் பற்றிய நம்பிக்கையை உருவாக்கிட முயன்றேன். சில இளைஞர்கள் என்னைப் பார்த்துப் புன்னகைக்கத் தொடங்கினர். நான் பொதுவான விஷயங்கள் பற்றி மெல்லப் பேசினேன். பரஸ்பரம் நம்பிக்கையின் காரணமாக பேச்சு உருவானது. அதற்குள் இரு வாரங்கள் கடந்து விட்டன. நடுத்தர வயதானவர்கள் தந்த சில தகவல்கள் சுவராசியமானவையாக இருந்தன. அவற்றை உடனுக்குடன் கையில் இருந்த நோட்டில் குறிப்பெடுக்கத் தொடங்கினேன். உடனே அவர்கள் பதற்றத்துடன் பேசுவதைக் குறைத்தனர். அப்புறம் எனது கள ஆய்வு முழுவதும் ஒருபோதும் பேனா, குறிப்பேட்டைத் தொடவே இல்லை. கள ஆய்வில் திரட்டிய தகவல்களைக் கூடியமட்டும் மனதில் நிறுத்தி, அன்று இரவில் வீட்டிற்குப்போய் விரிவாகக் குறிப்புகள் எழுதினேன். ஒருமுறை டேப் ரிகார்டர் மூலம் ஒலி நாடாவில் தகவல்களைப் பதிவாக்கிட முயன்றபோது, என்னிடம் சரளமாகப் பேசிய குடுகுடுப்பைக்காரர்களில் சிலர் மெல்ல மௌனமானார்கள். பதிவு இயந்திரமும் எனது கள ஆய்வில் உதவியாக இல்லை. குடுகுடுப்பைக்காரர் மூலம் எனக்குக் கிடைத்த அனுபவம் எல்லாக் கள ஆய்வாளர்களுக்கும் அப்படியே பொருந்தாது. இனக்குழுவினர் அல்லது பழங்குடியினர் அல்லது சாதியினர் போன்றவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட இயல்பினர். அத்தகையவர்களை அணுகிடும்போது, வேறுபட்ட அணுகுமுறைகளைச் சூழலுக்கேற்பக் கண்டறிந்து கள ஆய்வில் பயன்படுத்த வேண்டும்.

பண்பாட்டு மானுடவியல் ஆய்வாளர், தான் தேர்ந்தெடுத்த களப்பணியை வறட்சியாக அணுகிடாமல், உயிரோட்டமான மக்கள் குறித்த சமூகப் பதிவுகள் என்ற பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும். ஆய்விற்கான பொருட்கள் என்று இயந்திரரீதியில் கருதாமல், ரத்தமும் சதையுமான மனிதர்களிடம் பேசுகிறோம் என்பதை ஆய்வாளர் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். ஆய்விற்குள்ளாக்கப்படும் குழுவினரைப்

பிற குழுவினருடன் ஒப்பிட்டு, மட்டமாகக் கருதாமல், அவர்களிடம் வெளிப்படும் நல்லது கெட்டதுமான விஷயங்களைப் பரிவுடன் அணுகிட வேண்டும். அப்பொழுதுதான் களப்பணிக்காகச் செல்கிற கிராமத்தினரின் வீடுகளுக்குச் சென்று, அவர்களுடைய அன்றாட வாழ்க்கையை உற்றுநோக்குவதும், பழக்கவழக்கங்களைக் கூர்ந்து கவனிப்பதும் நடைமுறையாகும். ஓரளவு நெருங்கிப் பழகி அவர்கள் பல்லாண்டுகளாகப் பின்பற்றி வரும் மரபுகள், தொன்மங்கள், அடையாளங்கள் குறித்து அவர்களிடம் ஆழமாகக் கேட்டுத் தகவல்களைத் திரட்டுவது அடிப்படையானது. சில அடிப்படையான தகவல்களை வெவ்வேறு தகவலாளர்களிடம் இருந்து மீண்டும்மீண்டும் கேட்டு, அவற்றின் நம்பகத்தன்மையைக் கண்டறிவது, ஆய்வின் தரத்தை மேம்படுத்தும். பூர்வீகக் கதை, வரலாறு, சடங்குகள் போன்றவை குறித்து வேறுபட்ட காலகட்டத்தில், பல்வேறு வயதினரிடம் கேள்விகள் கேட்டுத் தரவுகளைச் சேகரித்து, ஒப்பிட்டுச் சரியான தகவல்கள் எனக் கருதப்படுவனவற்றைக் கண்டறிவது இனவரைவியல் நோக்கில் அடிப்படையான ஆய்வுப் பணியாகும்.

கேள்விகள் அடங்கிய வினாப் பட்டியலைக் குறிப்பிட்ட குழுவினரிடம் கொடுத்து, அவற்றுக்கான விடைகளைப் பெறுவது, புள்ளிவிவர ஆய்வின் அடிப்படையிலானது. எடுத்துக்காட்டாக ஆண்கள், பெண்கள் உள்பட சுமார் 900 எண்ணிக்கையுடைய குழுவினரிடம் வினாப் பட்டியல்களைத் தனித்தனியாகக் கொடுத்து, அவற்றை நிறைவுசெய்து குறைந்தபட்சம் 80% பேர்களிடமிருந்து திரும்பப் பெற வேண்டும். பின்னர் வினாக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பதில்களைத் தொகுத்து அவற்றைப் புள்ளிவிவர மென்பொருளைப் பயன்படுத்தி அலசி ஆராய்ந்து, ஆய்வு முடிவுகளைக் கண்டறியலாம். இத்தகைய ஆய்வு முறையியல், அறிவியல் அடிப்படையானது என்றாலும் இனவரைவியல் ஆய்வு, பெரிதும் விளக்கவியல் முறையியலைச் சார்ந்துள்ள நிலையில், உற்றுநோக்கலுக்கும் தகவல்களை வாய்மொழி மூலம் கேட்டுப் பதிவாக்குதலுக்கும் முன்னுரிமை தரவேண்டியுள்ளது.

எந்தவொரு சமூகக் குழுவினரும் தங்களுடைய முன்னோர்கள் குறித்தும், அவர்களுடைய வரலாற்றுப் பின்புலம் குறித்தும் செவிவழிக் கதைகளாகச் சொல்லிடும் மரபு, தமிழகத்தில் பரவலாக உள்ளது. இன்னொருபுறம் தாங்கள் செய்கிற பாரம்பரியமான தொழிலுக்குத் தங்களுடைய முன்னோர்கள் வந்த முறை குறித்தும் கதைகளை மரபாகச் சொல்லும் வழக்கும் நிலவுகிறது. முழுக்கக் கல்வியறிவு அற்ற இனக்குழுவினரும்கூட தங்களைப் பற்றிய கதைகளை வாய்மொழியாக அடுத்த தலைமுறைக்குக் கடத்துகின்றனர். இந்நிலையில் இனவரைவியல் ஆய்வாளர், இனக்குழுவினர் பற்றிய கதைகளைத் தொகுத்திடல் அவசியமானது. கடந்த காலம் குறித்து அல்லது முன்னர் எப்பொழுதோ நடைபெற்ற சம்பவங்கள், நினைவுகளாக மக்களிடம் உறைந்திருக்கின்றன. அத்தகைய வாய்மொழி வரலாறுகள், மொழியின் வழியாக காலத்தைக் கடந்து நிலைத்திருக்கின்றன. எனது இனவரைவியல் ஆய்வில் குடுகுடுப்பைக்காரர்கள், ஆந்திராவில் இஸ்லாமிய மன்னர்களின் ஆட்சி நடைபெற்றபோது, நவாபு மன்னர்களுக்குப் பெண் தர மறுத்துத் தமிழகம் வந்த ஒன்பது பிரிவுகள் அடங்கிய கம்பளத்து நாயக்கர் வம்சாவளியினரில் ஒருவரான நித்திரவார் என்ற பிரிவினராகத் தங்களைக் கருதுவதாகச் சொன்னார்கள். அந்தப் பூர்வீகக் கதையை வயதான குடுகுடுப்பைக்காரர்கள் பலரும் சொன்னதுடன், அது உண்மையில் நடந்த சம்பவம் என்பதில் உறுதியாக இருந்தனர். ஒரே கதையை வெவ்வேறு தகவலாளர்களிடமிருந்து கேட்டு, அடிப்படையான தகவல்கள் ஒத்துப் போகின்றனவா என்பதை உறுதி செய்திட வேண்டியது ஆய்வாளரின் கடமையாகும். எப்படி குடுகுடுப்பைத் தொழிலுக்கு வந்தீர்கள் என்ற கேள்விக்கு அவர்கள் சொன்ன கதை, பின்வருமாறு: கடவுள் எல்லோருக்கும் தொழிலைப் பிரித்து வழங்கியபோது, காட்டில் உறங்கிவிட்ட நித்திரவார் பிரிவினர் பின்னர் விழித்தெழுந்து, தங்களுக்கு ஏதாவது வேலை தருமாறு ஈஸ்வரனிடம் கேட்டனர். ஏற்கனவே எல்லா வேலைகளையும் பகிர்ந்து அளித்துவிட்ட ஈஸ்வரன், தன்னிடமிருக்கிற சித்துடுக்கையையும் சீங்குழலையும் தந்து,' நீ சொல்வதில் அஞ்சுக்கு ரெண்டு பலிக்கும்' என்று தந்த வாக்குத்தான் தங்களுடைய குடுகுடுப்பைத் தொழிலுக்கு அடிப்படை என்ற மரபுவழிக் கதை, இனவரைவியல்ரீதியில் முக்கியமானது. இது போன்ற கதைகளை எல்லாப் பழங்குடியினரும் நாடோடிகளும், விளிம்புநிலைச் சாதியினரும் தொன்மக் கதைகளாகச் சொல்கின்றனர். இத்தகைய கதைகள் அறிவியலுடன் பொருந்தாவிட்டாலும், குறிப்பிட்ட பிரிவினரின் கடந்த காலம் குறித்து தருக்கரீதியில் விளக்கிட முயலுகின்றன.

ஒவ்வொரு நாளும் கள ஆய்வுக்குச் செல்வதற்கு முன்னர் எந்தவகையான தகவல்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்பதை ஆய்வாளர் வரையறுத்துக்கொள்ள வேண்டும். எந்தத்

தகவல்கள் குறித்துக் கேள்விகளைக் கேட்க வேண்டுமென்று, முன்கூட்டித் திட்டமிடல் அவசியமாகும். குலச் சடங்குகளில் மகப்பேறு, பூப்புச் சடங்கு, திருமணம், ஈமச் சடங்கு போன்றவை முக்கியமானவை. ஆய்வாளர், சடங்குகளை நேரில் பார்த்துத் தகவல்களைத் திரட்டுவதற்கு முன்னுரிமை தரவேண்டும். ஒருக்கால் குறிப்பிட்ட காலகட்டத்தில் நேரில் பாத்துத் தகவல்களைத் தொகுக்க முடியாதபோது, விவரமறிந்த தகவலாளர்களிடமிருந்து சடங்குகள் எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றன என்று தரவுகளைத் தொகுத்திடலாம். வாய்மொழி மூலம் சடங்குகளைப் பற்றிக் கேட்டுப் பதிவாக்கிடும்போது, குறிப்பிட்ட சடங்கு குறித்து நுணுக்கமான முறையில் முழுமையாகத் தொகுப்பது, அவசியமானதாகும். சுருங்கக்கூறின், ஆய்வாளர், தான் தொகுத்திருக்கிற தரவுகள் முழுமையானவை என்ற கருதாமல், இன்னும் விடுபட்டவை இருக்கின்றன என்ற நோக்கத்துடன் தனது இனவரைவியல் ஆய்வைத் தொடர்ந்திட வேண்டும். தகவல்களைத் திரட்டுவதில் இனவரைவியல் ஆய்வாளர், எப்பொழுதும் திருப்தியற்ற மனநிலையுடன் இருந்தால்தான், முழுமையை நோக்கிப் பயணிக்க முடியும்.

இனவரைவியல் ஆய்வாளர், சம்பந்தப்பட்ட குழுவினருடன் தயக்கமின்றிப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். என்னைப் பொருத்தவரையில் ஆய்விற்குட்பட்ட குடுகுடுப்பைக்காரர்கள் தங்கியிருக்கிற சத்தியமூர்த்தி நகருக்கு ஆய்வாளர் என்ற முறையில் தொடர்ந்து அல்லது அடிக்கடி சென்று நெருக்கமாகப் பழகி, உறவை வளர்த்துக்கொண்டேன். சில நாட்களில் அவர்கள் மணிக்கணக்கில் பேசுகிற சொந்தக் கதையைப் பொறுமையுடன் கேட்டு, முடிந்த அளவில் ஏதாவது ஆலோசனை சொல்லுவேன். படித்தவர்களுக்கு நல்லது கெட்டது எல்லாம் தெரியும் என்று அப்பாவித்தனமாக என்னை நம்புகிறவர்களின் நம்பிக்கையை வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொண்டேன். வயதான பெண்கள் நான் கேட்கிற கேள்விக்குத் தொடர்பில்லாமல், விவரிக்கிற சம்பவங்களையும் பொறுமையுடன் கேட்பேன். சில நாட்களில் ஏழெட்டு மணி நேரம் பேசியிருந்தாலும், ஆய்விற்குத் தொடர்புடைய தகவல்கள் எதுவுமில்லாமல் திரும்ப நேரிடும். அவர்கள் அன்புடன் வாங்கித் தருகிற குண்டு பாட்டில் கருப்புக் கலர், பாயாசம், தேநீர் போன்ற பானங்களை மறுக்காமல் வாங்கிக் குடிப்பேன். அதனால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். ஆய்வின் தொடக்கத்தில் என்னை வெறுப்புடன் பார்த்த வயதானவர்கள்கூட நாளடைவில் என்னுடன் இயல்பாகப் பேசி பல்வேறு தகவல்களை உற்சாகத்துடன் சொன்னார்கள். அவர்களின் நம்பிக்கையைப் பெற்றதுதான் இனவரைவியல் ஆய்வாளர் என்ற முறையில் எனது ஆய்விற்கான தகவல்களைக் குறுகிய காலத்தில் திரட்டிட வழிவகுத்தது.

கள ஆய்வின்போது சில மாதங்கள் குடுகுடுப்பைக்காரர்களிடம் இணக்கமான உறவு வைத்திருந்த நான், பல்கலைக்கழகத்திற்கு ஆய்வேடு அளித்த பின்னர், அவர்களைப் பற்றி மறந்து விட்டேன். நான், எம்.ஃபில். பட்டம் பெற்ற பிறகு, ஒரு நாள் எங்கள் வீட்டு வாசலில் 'நல்ல காலம் பிறக்குது, ஜக்கம்மா சொல்றா.. இந்த வீட்டுக்காரங்களுக்கு கிழக்க இருந்து நல்ல சேதி வரப்போகுது...' எனக் குடுகுடுப்பையை ஒலித்துக்கொண்டு வெயிலில் நின்றவாறு குறி சொன்ன குடுகுடுப்பைக்காரரைப் பார்த்தடவுடன், மனதில் நெருடலும் சோர்வும். 1981இல் நடைபெற்ற எனது இனவரைவியல் ஆய்விற்குப் பின்னர் 38 ஆண்டுகள் கடந்து விட்டன. நுகர்பொருள் பண்பாடு காரணமாகத் தமிழகத்தில் பிரமாண்டமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குடுகுடுப்பைக்காரர்களில் கணிசமானவர்கள் கல்வி, வேலை, வீடு என மாறியுள்ளபோதிலும், இன்றைக்கும் எங்கள் வீட்டு வாசலில் சில்லறைக் காசுக்காகக் காத்திருக்கிற குடுகுடுப்பைக்காரரைப் பார்க்க நேரிடும்போது, கள ஆய்வு நாட்கள் நினைவுக்கு வருகின்றன. கூடவே வருத்தமும்.

துறைப் பேராசிரியர் தந்த நெருக்கடி காரணமாகத் தற்செயலாகத் தேர்ந்தெடுத்த குடுகுடுப்பைக்கார்கள் தலைப்பும், அது பற்றிய கள ஆய்வின் காரணமாகச் சந்திக்க நேர்ந்த பெண்களும் ஆண்களும், அவர்கள் விவரித்த அனுபவங்களும் என விரிந்திட்ட ஆய்வில் எனக்குக் கிடைத்த அனுபவங்களை ஒருபோதும் மறக்க இயலாது. இனவரைவியல் ஆய்வின் மூலம் குடுகுடுப்பைக்காரர்களின் பண்பாடு, சடங்குகள், பழக்கவழக்கம், உறவுமுறை, குடும்பம், நம்பிக்கை குறித்துத் திரட்டப்பட்ட தகவல்களைத் தொகுத்து என்னால் அளிக்கப்பட்ட ஆய்வேடு, இன்று சமூக ஆவணமாகியுள்ளது. மனித குல வரலாற்றில் இப்படியெல்லாம் மனிதர்கள் இருந்தனர்/ இருக்கின்றனர் என்ற பதிவுகளைத் தருகிற இனவரைவியலாளரின் ஆய்வுப் பணி, இன்றியமையாதது என்ற புரிதலை அடையும்போது, இனவரைவியல் ஆய்வின் முக்கியத்துவம் ஆய்வாளருக்குப் புலனாகும்.

●

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் வெளியீடாக...



# விரைவில் வெளியாகவுள்ள மே.து.ராசுகுமார் நூல்கள்

1. வரலாற்று நோக்கில் இடைக்காலத் தமிழகம்
2. தமிழ்நாட்டில் நிலவுடைமை வளர்ச்சி - சில குறிப்புகள்
3. தமிழகத்தில் சாதியக் குடிகளின் மேலேற்றமும் கீழிறக்கமும்
4. தமிழ்நாட்டின் சமூக-பொருளிய வரலாறு - சில குறிப்புகள்
5. பண்டைய தமிழகத்தைப் புரிந்துகொள்வோம்
6. சங்க காலச் சமூக-பொருளிய வாழ்முறையில் பரத்தையர் (ரா. வசந்தாவுடன் இணைந்து)
7. பண்டைத் தமிழகத்தில் காதல் உறவுகள்
8. வேளாண் நுட்பத்தை வேண்டிய புறப்பாடல்
9. சோழர் கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயில் பொருளியல்
10. பிற்காலச் சோழர் கால வாழ்வியல்
11. வரலாற்று நோக்கில் பண்டைத் தமிழகம்
12. சங்க காலத்தில் மாறுதல் மறுப்புகளும் முன்னேற்ற முனைப்புகளும்
13. அடிமை அமைப்பு முறையிலிருந்து தப்பிய தமிழகம்
14. சமூக-பொருளிய நோக்கில் சித்தர் பாடல்கள்
15. பதிற்றுப்பத்துப் பாடல்களைப் புரிதல்
16. புறநானூறு - புதிய புரிதல் உரை
17. வேளாண் சிக்கல்களும் ஊரகப் பொருளியமும்
18. மாநில சுயாட்சி
19. கல்விக் கண்ணோட்டங்கள் (கட்டுரைகளின் தொகுப்பு)
20. மொழிச் சிக்கல்
21. மே.து.ரா. சிறுகதைகள்
22. மே.து.ரா. பதிப்புரைகள்
23. கவிதைக் கனவுகள்
24. எண்ணிய எண்ணியாங்கு (பல்பொருள் படைப்புகள்)
25. ***Murder of the Constitution: Interpreting Article 356.***


# என்.சி.பி.எச்.சின்
# புதிய வெளியீடுகள்...





**கழலை**
இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்
₹ *220/-*





**பிச்சிப் பூ**
பொன்னீலன்
₹ *70/-*





**மஞ்சுவெளி**
சி.ஆர்.ரவீந்திரன்
₹ *170/-*




**மொழிபெயர்ப்பு நெறிமுறைகள்**
பேராசிரியர் இரா.மருதநாயகம்
₹ *135/-*




**மாடும் வண்டியும்**
(பொருள்சார் பண்பாட்டு ஆய்வு)
முனைவர் தி.ஜான்சி பால்ராஜ்
₹ 130/-




**நாங்கள் நாத்திகரானோம்**
கோரா
தமிழில்: டாக்டர் வெ.ஜீவானந்தம்
₹ *60.00*



நூல் அறிமுகம்

# சிற்றூர் வரலாறு

## பாவண்ணன்

'மரம் நட்டவன்' என்னும் பிரெஞ்சுச் சிறுகதையொன்று பல ஆண்டுகளுக்கு முன்னால் மஞ்சரி இதழில் வெளிவந்திருந்தது. என் பள்ளிப்பருவத்தில் நூலகத்தில் அதைப் படித்தேன். உலகமே போர்களில் திளைத்திருக்கிறது. புகுந்த ஊர்களையெல்லாம் அழித்து பாலைவனமாக்குகிறது. அதே நேரத்தில் அப்போரிலிருந்து வெளியேறிய ஒருவன் வறண்ட பொட்டல்வெளியை பல ஆண்டுகள் பாடுபட்டு ஒரு காடாக மாற்றுகிறான். மரங்களைத் தவிர வேறெந்த சிந்தனையும் அவன் மனத்தில் இல்லை. அந்தக் கதை பிரெஞ்சு வாசகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. ஒரு மனிதனின் வாழ்க்கை வரலாற்றின் சாயலில் எழுதப்பட்ட அக்கதையை உண்மை என நம்பிய பல வாசகர்கள் அந்த மனிதனைக் கண்டுபிடிக்கும் ஆவலில் தேடத் தொடங்குகிறார்கள். அப்போது எழுத்தாளர் அந்த மனிதன் தன் கற்பனையில் உருவானவனென்றும் மனிதர்களுக்கு மரங்கள் மீது ஓர் ஈடுபாட்டை உருவாக்கவேண்டும் என்னும் விழைவால் அக்கதையை எழுதியதாகவும் கூறினார். இலட்சியம் என்பது இன்னொருவரால் ஊட்டப்பட்டு ஒருவருக்கு அமைவதில்லை. ஒருவர் தன் வாழ்வின் போக்கில் தானாகவே கண்டடைந்து அதன் வழியில் செல்கிறார்.

கர்நாடகத்துக்கு நான் வந்த புதிதில் சாலுமரத திம்மக்கா என்பவரைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைச் சந்தித்து உரையாடினேன். அவரும் அவர் கணவரும் சேர்ந்து சாலையோரமாக ஏறத்தாழ ஐந்து மைல் தொலைவுக்கு மரங்களை நட்டு வளர்த்தவர்கள். அது மட்டுமல்ல, அக்கம்பக்கத்தில் ஏராளமான தோப்புகளையும் இருவரும் சேர்ந்து உருவாக்கினார்கள். இன்று கணவர் இல்லை. திம்மக்கா மட்டும் மரங்களைத் தவிர வேறெதையும் அறியாதவராக வாழ்ந்து வருகிறார். அசாமில் பிரம்மபுத்திரா நதிக்கரையோரத்தில் வெள்ளத்தால் பொட்டல்காடாகிவிட்ட ஓரிடத்தில் இதேபோல ஒரு காட்டை ஜாதவ் பயேஸ் என்பவர் உருவாக்கினார் என்று படித்த நினைவுள்ளது. இப்படி வாழ்ந்தவர்களும் வாழ்பவர்களும் இந்த நாடுமுழுக்க இருக்கக்கூடும். ஒவ்வொரு வட்டாரத்திலும் இப்படிப்பட்ட மனிதர் ஒருவராவது உறுதியாக இருப்பார்கள். இவர்கள் தனிமனிதர்களே என்றபோதும், இத்தகையோரின் வாழ்க்கை எழுத்தில் பதிவுசெய்யப்பட வேண்டும். நம் கண் முன்னால் வாழ்ந்த, வாழும் முன்னுதாரண மனிதர்களைப்பற்றி நாம் எழுதாவிட்டால், வேறு யார் வந்து எழுதுவார்கள்?

சமயவேல் தன்னுடைய 'புனைவும் நினைவும்' நூலில் இப்படிப்பட்ட ஒரு மனிதரைப்பற்றி எழுதியிருக்கிறார். அவர் பெயர் காளிக்குடும்பர். வெம்பூர் கண்மாய்க்கரையில் ஐந்நூறு புளியங்கன்றுகளை நட்டு வளர்த்தவர் அவர். ஒரு பெரிய மண்பானையில் நீர் சுமந்து சென்று மூன்று நாட்களுக்கொரு முறை அக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றி குழந்தைகளைப்போல காப்பாற்றினார். அவருக்கு மனைவி கிடையாது. இருந்த ஒரே மகள் ஏதோ ஒரு கிறிஸ்துவ மடத்தில் சேர்ந்து வேறு ஏதோ ஓர் ஊருக்குப் போய்விட்டார். ஒவ்வொரு மரமும் உறுதியாய் நிலத்தின் வேரூன்றி நின்று கிளைபரப்பி பூத்துக் காய்க்கத் தொடங்கும்வரைக்கும் அவற்றை காளிக்குடும்பர் ஒற்றை ஆளாக நின்று கவனித்துக்கொண்டார். அவர் மறைந்துபோனாலும் கண்மாயே காணாமல் போனாலும் அவர் நட்டு வளர்த்த புளியமரங்கள் ஊருக்கு நிழல் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. தொலைவிலிருந்து பார்த்தால் ஒரு நீண்ட புளியமர ரயில் ஊர்ந்துகொண்டிருப்பதைப்போல காட்சியளிக்கும் என்று எழுதுகிறார் சமயவேல். அம்மரங்கள் வழியாக காளிக்குடும்பர் ஒரு வரலாற்றுப் பாத்திரத்தைப்போல வாழ்ந்துவருகிறார்.

சமயவேல் பிறந்த ஊர் வெம்பூர். எட்டயபுரம் வட்டத்தில் அறுநூறு வீடுகளும் இரண்டாயிரம் பேர் மக்கள் தொகையையும் கொண்ட சின்ன கிராமம். ஊர் எல்லையில் கோவில். கோவிலை ஒட்டி தனித்தனியாகப் பிரியும் இரு பாதைகள். இடதுபுறப் பாதை சாதியின் மேலடுக்கில் இருப்பவர்கள் வாழும் குடியிருப்புகளை நோக்கி நீள்கிறது. வலதுபுறப் பாதை கீழடுக்கில் இருப்பவர்கள் வாழும் குடியிருப்புகளை நோக்கிச் செல்கிறது. தான் பிறந்து வளர்ந்த ஊரைப்பற்றியும் தன்னைச் சுற்றி வாழ்ந்த மனிதர்களைப்பற்றியும் அவர் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பு 'புனைவும் நினைவும்'. வெம்பூரைப்பற்றி அவர் அளிக்கும் சித்திரமே கவித்துவத்தோடு உள்ளது. வெட்டவெளியின் இசை விண்ணிலிருந்து இறங்கும் ஊர் என்று எழுதியுள்ளார் சமயவேல். வட்டவடிவத்தில் அங்கே நின்று அடிவானத்தைப் பார்க்கமுடியும். கீழ்த்திசையில் பூமி சரிந்து கடலில் முடிவதால் ஓர் அரை உருண்டையின் மீது நாம் நிற்பதுபோல உணரவைக்கும் ஊர். நாள்முழுதும் அமைதியில் உறையும் ஊர்.

ஊரில் கொண்டாடப்படும் இரு அம்மன்களைப்பற்றிய தகவல்கள் ஒரு கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. ஒன்று வடக்கத்தி அம்மன். இன்னொன்று சோலையம்மன். சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வடக்கிலிருந்து வந்து வெம்பூரில் குடியேறிய அம்மை ஒருவர் வேப்பங்குழையால் மந்தரித்து நோய்நொடிகளிலிருந்து கிராம மக்களை குணப்படுத்திவந்தார். அவர் இறப்பதற்கு முன்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தனக்கு பண்டிகை கொண்டாடவேண்டுமென்றும் அன்றைய தினம் தன்னை நினைத்து மக்கள் ஒருவருக்கொருவர் கஞ்சி ஊற்றி அருந்தவேண்டுமென்றும் தன்னை நினைத்து வாசலில் வேப்பந்தழையைச் செருகிவைத்தால் அந்த வீட்டில் எவ்விதமான நோயும் அண்டாமல் காப்பாற்றுவதாகவும் சொல்லிவிட்டு மறைந்தார். அந்த வாக்குக்குக் கட்டுப்பட்டு இரு நூற்றாண்டுகளாக அந்தப் பண்டிகையைக் கொண்டாடி வருகிறார்கள் மக்கள்.

இன்னொரு தெய்வம் சோலையம்மன். அவருக்கு 21 பிள்ளைகள் பிறந்து, எல்லோரும் பிறந்த வீட்டிலேயே இறந்துவிட்டார்கள். பெற்றெடுத்த பிள்ளைகள் அனைவரையும் பறிகொடுத்த சோகத்தில் ஆழ்ந்துவிட்டார் சோலையம்மன். இறுதியில் அவர் ஒரு முடிவெடுக்கிறார். அவரும் அவர் கணவரும் உயிருடன் உடன்கட்டை ஏறிவிடலாம் என திட்டமிடுகிறார்கள். ஊர்மக்கள் தடுத்தும் கேளாமல் இருவரும் மணக்கோலத்தில் நின்று

சிதைக்கு ஏற்பாடு செய்கிறார்கள். அதனால் ஊர்மக்கள் சிதைக்கு வைக்கவிருந்த நெருப்புக்கட்டையைப் பிடுங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். யாரும் அவர்களுக்கு நெருப்பு தரக்கூடாது என ஊர்க்கட்டளை விதிக்கப்படுகிறது. 21 நாட்கள் காத்திருந்து, 21 ஆம் நாள் அடுத்த ஊரிலிருந்து பொய்சொல்லி நெருப்பு வாங்கிவந்து சிதையை ஏற்றிவிட்டு இருவரும் மாண்டுபோய்விடுகிறார்கள். குழந்தைகளை இழந்த துக்கம் அவ்விருவரையும் மரணத்தை நோக்கித் தள்ளிவிடுகிறது. அவர்களைக் காப்பாற்றமுடியாத ஊர்மக்கள் அந்தச் சாம்பலை ஒரு பெட்டியில் வைத்து வணங்கத் தொடங்குகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அவருக்குப் படையலிட்டு கஞ்சி ஊற்றி வணங்குகிறார்கள். தன் துன்பம் என்னும் தொடர்கதை தன்னோடு முடிந்துபோகவும் தன்னைச் சுற்றியுள்ள மக்கள் துன்பத்தின் நிழலே படியாமல் வாழவும் தெய்வமாக நின்று அருள்புரிகிறார் சோலையம்மன்.




இரு பெண்தெய்வங்களில் ஒருவர் கருணையின் அடையாளம். இன்னொருவர் துக்கத்தின் அடையாளம். இருவரிடமும் அருள்வேண்டி கைகுவித்து நிற்கின்றனர் மக்கள். ஒருவர் சமுதாய மேலடுக்கின் தெய்வம். இன்னொருவர் அடியடுக்கின் தெய்வம். ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப்போல இரு தெய்வங்களும் ஒரே ஊரின் இரு அடையாளங்கள். இருவராலும் மதிப்படைகிறது ஊர். அழகான சித்தரிப்புகள் வழியாக, ஊரின் தன்மையை உணரவைக்கிறார் சமயவேல்.

சித்திரைக்கொண்டாட்டம் ஊரின் இன்னொரு முக்கியமான திருவிழா. பிள்ளைகளுக்கு கனவுப் பலகாரமான தோசை கிடைக்கும் நாள். அன்று புத்தாண்டு நாளேர் ஓட்டவேண்டும். ஏரோட்டுவதற்கு புதிய தார்க்குச்சிகள் வேண்டும். தார்க்குச்சிகளைத் தேடி பிள்ளைகள் ஓடுகிறார்கள். தலையாரி மூலம் ஊர் சாட்டுகிறார்கள். எல்லோரும் மாடுகளைக் குளிப்பாட்டி கொம்புகளுக்கு வர்ணமடித்து மஞ்சள் குங்குமப்பொட்டு வைத்து நிலத்துக்குச் சென்று ஆரவாரத்துடன் ஏர்பூட்டி உழுகிறார்கள். உழுதுமுடித்து திரும்பும் இளைஞர்கள் மேல் முறைப்பெண்கள் மறைந்திருந்து மஞ்சள் நீர் ஊற்றி விளையாடுவார்கள். எந்த வீட்டுக்கும் சென்று யார் வேண்டுமானாலும் பானக்காரம் அருந்திவிட்டுச் செல்லலாம்.

இன்னொரு சுவாரசியமான திருவிழா பங்குனிப் பொங்கலுக்கு இறுதியில் நடைபெறும் சேத்தாண்டி ஊர்வலம். தண்ணீர் வற்றிய குளத்தில் எஞ்சியிருக்கும் சேற்றை உடலெங்கும் பூசிக்கொண்டு சுண்ணாம்பையும் கண்மையையும் கொண்டு எழுதப்பட்ட கரும்புள்ளி செம்புள்ளிகளோடு கையில் ஏந்திய வேப்பிலைக்கொத்துகளோடு பிள்ளைகள் நிகழ்த்தும் ஊர்வலம் இது. மேளதாளம் ஒலிக்க ஆஹா அய்யாஹோ என்று குரலெழுப்பியபடி கண்மாய்க்கரையிலிருந்து ஊர்வலம் ஊருக்குள் நுழையும். அருள் வரப்பெற்றவர்கள் தரையில் உருள்வார்கள். கோவில் வாசலை நெருங்கியதும் பூசாரி வெளியே வந்து சாமிக்கு திருநீறு பூசி மலையேற்றிவிடுவார். சேறு பூசிக்கொண்டிருந்த சிறுவர்கள் எல்லோரும் கூச்சலிட்டபடி திரும்பியோடி கிணற்றில் விழுந்து தேய்த்துக் குளிக்கத் தொடங்குவார்கள். மாம்புலி கொளுத்தும் கார்த்திகைக் கொண்டாட்டமும் வெம்பூர்க்காரர்களின் பண்டிகைகளில் ஒன்று.

விழா சமயங்களில் நடைபெறும் பாவைக்கூத்து முக்கியமான பொழுதுபோக்கு நிகழ்ச்சி. சின்னஞ்சிறு ஊர்களில் எழுபது எண்பது கடந்தவர்களின் மரணம்கூட ஒரு திருவிழாத்தன்மையைக் கொண்டுவந்துவிடுகிறது. இறந்தவரை அமரர் நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு செய்யப்படும் இறுதி ஊர்வல ஏற்பாடுகள் ஒவ்வொன்றும் திருவிழா ஏற்பாடுபோலவே இருக்கும். இரவெல்லாம் கண்விழித்து படிக்கப்படும் நல்லதங்காள் கதை எல்லோரையும் உருகவைத்துவிடும். வெளியூரில் வசிப்பவர்களுக்கு சாவுச்செய்தியை சொல்லியனுப்புவதில் தொடங்கி இறுதித் தேருக்கான பூ அலங்காரம் வரை ஒவ்வொரு சடங்கையும் துல்லியமாக விவரிக்கிறார் சமயவேல்.

வீட்டில் வறுமை இருந்தாலும் நண்பர்களுடன் பேசியும் விளையாடியும் அலைந்தும் பொழுதுகளைக் கழித்த பால்யம் வெகுவிரைவில் முடிந்துவிட சட்டென இளம்பருவத்தின் வாசலுக்கு வந்துவிடுகிறார் சமயவேல். ஊரில் நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு ஒரு படிப்பகத்தைத் தொடங்கி அனைவரையும் படிக்கத் தூண்டுகிறார். படிப்பு நம் அகக்கண்களைத் திறக்கும் ஆற்றல் கொண்டதென தொன்றுதொட்டு நிலவிவரும் நம்பிக்கை அவரையும் இயக்குகிறது. பள்ளியிறுதியில் முதல் மதிப்பெண் பெற்று தேறி கல்லூரியில் சேர்ந்து படிக்க நகரை நோக்கிப் புறப்படுகிறார். சாதிச்சான்றிதழ் கொடுக்கவேண்டிய கிராம முன்சீப் "இவனுக்கெல்லாம் எஞ்சினீயரிங் படிப்பா?" என்ற மனவெக்கையில் சான்றிதழ் தராமல் முடிந்தவரையில் அலையவைக்கிறார். இரட்டைக்குவளை முறையை கடைபிடிக்கும் தேநீர்க்கடைக்காரர், அதை மீறியதற்காக அவர் முன்னாலேயே அந்தத் தம்ளர்களை கடைக்கு வெளியே வீசியெறிந்து உடைக்கிறார். வெம்பூரில் சாதிப்பூசல்கள் எதுவும் நிகழ்ந்ததில்லை. ஆனால் ஒவ்வொருவர் நெஞ்சிலும் சாதியம் ஏதோ ஒரு விதத்தில் வெள்ளைவேட்டியில் படிந்திருக்கும் ஒரு கறைபோல படிந்திருக்கிறது.

ஊரின் வறட்சிக்கு ஊரின் சூழலும் ஊர்க்காரர்களுமே ஒரு வகையில் காரணமாக இருப்பதை சமயவேலின் ஆய்வுமனம் கண்டடைகிறது. ஊரில் மிகமுக்கியமான தொழில் விவசாயம் மட்டுமே. நீரின்றி விவசாயமில்லை. நீருக்கு நீர்நிலைகள் மிகமிக முக்கியம். நீர் ஆதாரமாக விளங்கும் காடு அழிகிறது. அதைத் தடுக்க ஆளே இல்லை. அருகிலிருந்த அணைக்கட்டிலிருந்து நீரைக் கொண்டுவர கட்டப்பட்ட தடுப்பணை தேவையை நிறைவேற்றவில்லை. கண்மாய்க்கும் தடுப்பணைக்கும் இடைப்பட்ட மேட்டுப்பகுதியை மீறி தண்ணீரால் ஏறிவர முடியவில்லை. அதைக் கண்டுபிடிப்பதற்குள் ஆண்டுகள் உருண்டுவிடுகின்றன. கிராமத்துப் புகார்களை அதிகாரிகள் புறக்கணிக்கிறார்கள். கண்மாய் கொஞ்சம்கொஞ்சமாகத் தூர்ந்து வறட்சிக்காலம் தொடங்கிவிடுகிறது. சாதி ஆணவத்துக்கும் அரசியல் ஆணவத்துக்கும் ஒரு கிராமமே கரிய பாலைவனமாக மாறிவிடுகிறது.

பெண்களின் தற்கொலைகளைப்பற்றிய கட்டுரையை மனம் பதறாமல் யாராலும் படித்துக் கடந்துவிடமுடியாது. சிவராம காரந்த் கன்னட மொழியில் எழுதிய முக்கியமானதொரு நாவல் சோமனின் உடுக்கை. இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்நாள் முழுக்க அவனுக்குத் துணையாக நிற்பது அவன் உடுக்கை. இறுதியில் தன் உடுக்கையை இசைத்தபடியே அவன் இறந்துபோவான். உடுக்கையோசை என்பதே மரணத்தின் அடையாளமாக நாவல் முழுதும் ஒலித்தபடி இருக்கும். சமயவேல் தன் கிராமத்தில் ஒலிக்கும் உருமியின் ஓசையைப்பற்றி எழுதுகிறார். ஊருக்குள் எழும் ஒற்றை உருமியின் ஓசை யாரோ ஒரு பெண்ணின் அகால மரணத்தை அறிவிக்கும் ஓசையாக அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ஓசையைத் தொடர்ந்து அவர் நினைவிலிருந்து உதிரும் அக்காமார்களின் நினைவுச்சித்திரங்கள் மனம் கலங்கவைக்கின்றன.

ஊரின் நினைவுகளோடு தன் நெஞ்சில் சமயவேல் இன்னும் சுமந்திருக்கும் மனிதர்களைப்பற்றிய சித்திரங்களும் இந்தத் தொகுப்பில் ஏராளமாக நிறைந்திருக்கின்றன. கனியக்காவின் கதையைப் படிப்பவர்கள் யாரும் கனியக்காவை மறந்துவிடமுடியாது. காடை சண்முகம், லாந்தர் இருளாண்டி, கோழி ஆறுமுகம், மூக்கையா ரெட்டியார், மொட்டை இருளப்பர் என ஒவ்வொருவரையும் தன் வாழ்வோடு இணைத்துவைத்திருக்கும் ஒரு சிறு சம்பவச் சித்தரிப்போடு சமயவேல் தீட்டிக்காட்டும் கோட்டோவியங்கள் மகத்தானவை. அவற்றின் வழியாக அவர்களையும் நாம் அறிந்துகொள்கிறோம்.

சற்றே தன்வரலாற்றுச் சாயலுடன் சமயவேல் வழங்கியிருக்கும் வெம்பூர் வரலாறு மிகமுக்கியமான ஓர் ஆவணம் என்றே சொல்லவேண்டும். திருவிழா, கொண்டாட்டம், சாவு, கலை என தாவித்தாவிச் சென்றாலும் வெம்பூரின் பண்பாட்டு அம்சங்கள் அனைத்தையும் பதிவு செய்திருக்கிறார் சமயவேல்.

சென்னை வரலாறு, மதுரை வரலாறு போல சிற்றூர்களின் வரலாற்றை யாரும் எழுதுவதில்லை. எப்போது தோன்றியது, யார் உருவாக்கினார்கள், எப்படி வளர்ந்தது என்கிற புள்ளிவிவரங்களைத் திரட்டிக்கொண்டு வைப்பது மட்டுமல்ல வரலாறு. ஒருவர் நிலத்துடன் கொண்டிருக்கும் உறவு, அருகில் இருக்கும் சகமனிதர்களோடு கொண்டிருக்கும் உறவு, கோவில்கள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள், மரணங்கள், விளையாட்டுகள் போன்றவற்றைப்பற்றிய சித்திரங்களின் தொகுப்பையும் ஒருவகையில் வரலாறு என்றே சொல்லவேண்டும். வாழ்கிற விதத்தை முன்வைப்பதன் வழியாக எழுந்து நிற்கும் மற்றொரு வரலாறு. சமயவேல் எழுதியிருக்கும் வெம்பூர் கிராம வரலாறு அத்தகைய ஒன்று. மணல்வீடு பதிப்பகத்தின் வெளியீடுகள் அனைத்துமே அழகுற அமைந்திருப்பவை. சமயவேலின் புத்தகம் அந்த அழகின் உச்சம்.

●



மதிப்புரை

# அடித்தள மக்களின் அடையாளங்கள்

## சி.ஆர்.ரவீந்திரன்

காலத்தின் தேவைகளுக்குத் தகுந்த கற்பனைகளை வடிவமைப்பது மேல்தள மக்களின் இயல்பு. அந்தக் கற்பனைகளுக்கு வியக்கத்தகுந்த எதார்த்தமான வார்ப்புகளை உருவாக்குவது அடித்தள மக்களின் வாழ்க்கையில் நிலைநிற்கும் உழைப்பு. காணும் பொருள்களின் பின்னணியில் கடுமையான உழைப்பு மறைந்து கிடக்கிறது.

ஆனால், மேல்தள மக்களுக்கு மட்டும் வரலாறு பதிவு செய்யப்படுகிறது. அடித்தள மக்களின் வாழ்க்கை வாய்மொழியில் நிறைந்து கிடக்கிறது. அந்த வாழ்க்கை வரலாற்றில் நீண்டகாலம் வரை பதிவு செய்யப்படாமலே வாழ்மொழி வடிவில் தொடர்ந்து நிலைநின்று வருகிறது. உழைக்கும் அடித்தள மக்களின் வாழ்க்கை கடந்த சில நூற்றாண்டுகளாகத்தான் பதிவு செய்யப்படுகிறது.

அந்த வகையில், மாறுபட்ட கண்ணோட்டத்தில் ‘அடித்தள மக்களின் வரலாறு’ ஆய்வு முறையில் பதிவு செய்யப்பட்டு புத்தக வடிவில்

ஓர் ஆவணமாக வெளியாகியுள்ளது. இதை வடிவமைத்த ஆ.சிவசுப்பிரமணியன் தமிழகத்தில் நன்கு அறியப்பட்ட ஒரு மார்க்சியவாதி. ஆழ்ந்த அக்கறையும் தோய்ந்த ஈடுபாடும் உள்ள இவர் இந்த வரலாற்றை ஓர் ஆவணமாக வடிவமைத்துள்ளார். நாட்டார் வழக்காற்றியலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ள இவர் இதுவரை அறியப்படாத பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளார். அதே சமயத்தில் மக்கள் இயக்கங்களின் செயல்பாடுகளையும் சாதிகளையும் இனம் கண்டுபிடிப்பவர் அடித்தள மக்களாகிய உழைப்பாளர்களுக்கென தனிப்பட்ட வாழ்க்கை அவர்களுடைய கலை, கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களுடன் ஆய்வு செய்யப்பட்டுள்ளதை இது புலப்படுத்துகிறது. இடந்த வரலாற்று ஆய்வு நூலை எழுதத் தேவைப்பட்ட சூழலை இவர் முன்வைத்து அதன் முக்கியத்துவத்தை நூல்முழுவதும் குறிப்பிட்டு விளக்குகிறார்.

**“கடல் விழுங்கிய இரவில் மரணத்தின்**
**பிடியிலிருந்தோர்**
**அடிமைகளின் உதவியை நாடி**
**கூக்குரல் இடவில்லையா”**

என்ற கவிதை வரிகளை நினைவுபடுத்தும் வகையில் அடித்தள மக்களின், முதன்மையைக் குறிப்பிடும் கவிதையை முன்னுரையாக இவர் பயன்படுத்துகிறார். “படிப்பறிவுள்ள பாட்டாளியின் கேள்விகள்” என்ற தலைப்பில் ஜெர்மானிய நாட்டு நாடகாசிரியரும், கவிஞருமான பெர்ட்டோல்ட் பிரஸ்ட் எழுதிய கவிதை வரிகளின் உள்ளடக்கத்தை இந்த நூல் விளக்குவது போல வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

“சாதிய மேலாண்மையும், ஒடுக்கு முறையும் மேலோங்கியிருந்த இருக்கும் தமிழக மற்றும் இந்திய வரலாற்றைப் படிக்கும்போது பிரஷ்டின் கேள்விகளைப்போல் நம்மிடமும் கேள்விகள் எழவேண்டும். ஆனால், நமது மரபுவழி வரலாற்றாசிரியர்கள் இக்கேள்விகள் எழும்போதே தவிர்த்துவிட்டனர். எனவேதான் ஒரு மாற்று வரலாற்றைத் தேட வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது.”

“சமூகவியல் - மானிடவியல், பொருளாதாரம் உளவியல் போன்ற அறிவுத் துறைகளின் துணையுடன் வரலாற்றைக் காணத் தொடங்கிய பிரெஞ்சு அனல்ஸ் பள்ளியின் புதிய வரலாறும், இந்திய வரலாற்று வரைவில் புதிய அணுகுமுறையையும் சிந்தனையையும் ஏற்படுத்தியுள்ளன. எனவே ‘மாற்று வரலாறு’ என்று இங்கு குறிப்பிடும்போது அடித்தள மக்கள் வரலாறு புதிய வரலாறு என்று இரண்டு புதிய வரலாற்றுப் பள்ளிகளுக்கும் முக்கிய இடமுண்டு.

மேலும் சுமித் சர்க்கார், இந்திய வரலாறு எழுதப்பட்டுள்ள முறை, சமூகத்தின் வளர்ச்சிப் போக்கையும் அதில் நிலவிய, நிலவும் முரண்பாடுகளையும், வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்தாது கலை இலக்கியம், சமயம் சார்ந்த செய்திகளை மேலெழுந்த வாரியாகத் தொகுத்துக்கூறும் தன்மையிலேயே நமது சமூக வரலாறு எழுதப்படுகிறது என்று தெரிவித்த கருத்தை இவர் குறிப்பிடுகிறார். அதைப் போலவே சமூக அறிவியல் கண்ணோட்ட அடிப்படையிலான வரலாற்றை எப்படி எழுத வேண்டுமென்று அடையாளப்படுத்தும் இங்கிலாந்து சமூக வரலாற்றறிஞரின் கருத்தையும் விளக்குகிறார்.

“வாய்மொழியாக வழங்கும் வழக்காறுகள் மட்டுமின்றி சடங்குகளும் கூட வரலாற்றிற்குத் துணைபுரியும் தன்மையின” என்றும் தனது கருத்தை இவர் முன்வைக்கிறார். அவற்றுக்குரிய எடுத்துக்காட்டுக்களையும் முன்வைத்துக் கருத்துக்களை உணரவைக்கிறார்.

தமிழ்நாட்டில் பரவலாக வழக்கிலிருந்து சமணம் சைவத்துடன் நிகழ்த்திய மோதலில் தேய்ந்து மறைந்தது. மதுரையில் எண்ணாயிரம் சமண முனிவர்களைப் பாண்டிய மன்னன் கழுவேற்றியதாகத் திருத்தொண்டர்புராணம் குறிப்பிடுகிறது. அந்த நிகழ்வை உறுதிப்படுத்துவதுபோல மதுரை, திருநெல்வேலி, சீர்காழி ஆகிய திருத்தலங்களில் உள்ள கோவில்களில் “கழுவேற்று உற்சவம்” நவீட்பெறுவது சான்றாகும்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் நம்மை ஆளத்தொடங்கியபோது அவர்களை எதிர்த்துப் போராடிய பாளையக்காரர்களில் ஒருவர் வீரபாண்டியக் கட்டபொம்மன். அவன் நட்டாத்தி குரும்பூர் பகுதியில் வாழ்ந்த நாடார் சாதியினரிடமும் ஆழ்வார் திருநகரி பிராமணர் மற்றும் கோனார் சாதியினரிடமும் வழங்கும் வாய்மொழிக்கதைகள் வழக்கமான குறுநில மன்னர்களின் நடைமுறைகளிலிருந்து கட்டபொம்மன் மாறுபடவில்லை என்பதை உணர்த்துகின்றன.

தொடர்ந்து வெள்ளையர் ஆட்சி உருவாக்கிய சட்ட மன்றங்கள், மருத்துவ மனைகள், காவல்துறை நீதிமன்றங்கள் ஆகியவை குறித்து இந்தியாவின் பல்வேறு மொழிகளில் வழங்கிய பாடல்களும் கதைகளும் மக்களின் எதிர்ப்புணர்வை

வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவ்வாறு மாற்று வரலாற்றுக்கான தரவுகளாக வாய் மொழிகளும்,வ ழக்காறுகளும், சடங்குகளும் அமைகின்றன. இவற்றை அப்படியே வரலாற்றில் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதில் ஐயமில்லை. மரபு வழி வரலாற்றுக்கான தரவுகளை எவ்வாறு ஏனைய தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஒரு முடிவுக்கு வருகிறோமோ அதே போல இத்தரவுகளையும் பயன்படுத்தி உண்மையைக் கண்டறியலாம்.

வாய்மொழியாகக் கூறப்படும் மற்றும் வாய்மொழியாகப் பரவும் வழக்காறுகளே வாய்மொழி வழக்காறுகள் என்று இவர் அடையாளப்படுத்துகிறார். நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், வாய் மொழிக் கதைகள் போன்றவை அவற்றின் முக்கியமான வகைமைகள் அவைகளின் சான்றுகளாக, கண்ணால் கண்டவர் கூற்று, வாய்மொழிமரபு, வதந்தி என்று ஜான் வான்சினா கூறுவதை இவர் தன்னுடைய ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறார். தனித்தனியாக அவைகளை ஆய்வு செய்து அவைகளின் தனித்தன்மைகளை வகைப்படுத்துகிறார். இதைப்போலவே பல்வேறு வகையான வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துக்களைக் குறிப்பிட்டு விளக்குகிறார் இவர்.

இவர், தனது வரலாற்று ஆய்வுக் கண்ணோட்டத்தைக் குறித்த கருத்துக்களை முன்வைத்துத் தனது மதிப்பீடுகளை உறுதிப்படுத்துகிறார். "மேட்டிமையோரால் உருவாக்கப்பட்ட கல்வெட்டுக்கள், பட்டயங்கள், நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றில் விளிம்பு நிலையினர் அல்லது அடித்தள மக்களைக் குறித்த செய்திகளைக் குறிப்பிடத்தக்க வகையில் கண்டறிய முடியாது.

கடந்த காலங்களில் ஆட்சி புரிந்த அரசர்கள் குறுநில மன்னர்கள், ஜமீன்தார்கள், அவர்களைச் சுற்றியிருந்த அமைச்சர்கள், தளபதிகள் மற்றும் இவர்களைச் சார்ந்திருந்த கவிஞர்கள், மதகுருக்கள் கலைஞர்கள் ஆகியோரை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட மரபு வழி வரலாறு இன்னும் காலம் கடந்துவிட்டது. மையத்தைவிட்டு விலகி விளிம்பு நிலையினரைக் குறித்து எழுதப்படும் வரலாறு இன்று உருப்பெற்றுள்ளது. எனவே மக்களிடமிருந்தே மக்கள் வரலாற்றுக்கான சான்றுகளைத் திரட்ட வேண்டும். ஓலைச்சுவடிகள், ஆவணக் காப்பகத்தில் உள்ள ஒரு துண்டுக் கடிதம் ஆகியவை வரலாற்று ஆவணமாக ஏற்கப்படுவதைப் போல, கர்ணபரம்பரையாகக் கூறப்படும் கதை, பழமொழி பாடல் ஆகியவையும் வரலாற்று ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற தனது கருத்தைக் கூர்மையாகவும் தெளிவாகவும் இவர் குறிப்பிடுகிறார்.




**அடித்தள மக்கள் வரலாறு**
ஆ. சிவசுப்பிரமணியன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை - 50.விலை ரூ.250/-
தொலைபேசி: 044 26251968,

தொடர்ந்து, உள்ளூர் வீரர்கள் பற்றிய தனது ஆய்வுகளையும் முடிவுகளையும் முன்வைக்கிறார் இவர் "தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பின் தங்கியச் சாதியைச் சேர்ந்தவர்கள், ஆதிக்க சக்திகளுக்கும், அவர்கள் உருவாக்கிய சமூக மரபுகளுக்கும் எதிராகச் செயல்பட்டுள்ளார்கள். இதன் விளைவாக அவர்களின் ஆத்திரத்திற்கு ஆளாகிக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலோர் தெய்வமாக வணங்கப் படுகிறார்கள். இவர்களை உள்ளூர் வீரர்கள் என்று அழைக்கலாம். இவர்களைக் குறித்து பழமரபுக் கதைகள் அவ்வப்பகுதியில் வழங்கி வருகின்றன. சில இடங்களில் இவர்களை மையமாக வைத்துக் கதைப் பாடல்களும் உருவாகியுள்ளன. பரந்துபட்ட எல்லைக்குள் மேட்டிமையோரால் நிகழ்த்தப்படும் மாபெரும் நிகழ்ச்சிகளே வரலாறு என்ற கண்ணோட்டம் நம்மிடையே நிலைபெற்றுள்ளது.

"எனவே, உள்ளூர் அளவிலான மக்கள் வீரர்களைக் குறித்து நாம் கண்டு கொள்வதில்லை. ஆனால், அடித்தள மக்கள் வரலாற்று ஆய்வில் இவ்வீரர்களுக்கும் அவர்களது செயல்பாடுகளுக்கும் முக்கிய இடமுண்டு. இந்திய மக்கள் சகிப்புத் தன்மை கொண்டவர்கள்; பொறுமைசாலிகள்; அகிம்சைவாதிகள் என்று நம் மனத்தில் பதிய

வைக்கப்பட்டுள்ள கருத்து எவ்வளவு போலியானது என்பது வட்டார வீரர்களின் வரலாறு நமக்கு உணர்த்தும்."

"இக்கதைகளை மட்டுமின்றி, இக்கதைகளுடன் தொடர்புடைய வீரர்வழிபாடு, வழிபாட்டுச் சடங்குகள் நம்பிக்கைகள் போன்றவற்றையும் சேகரித்து ஆய்வு நிகழ்த்தும் பொழுது பல புதிய வரலாற்று வீரர்களை இனம் காணமுடியும்.

சமுதாயப் போராட்டங்களையும், அவற்றின் விளைவுகளையும் குறிப்பிடும் நொடிக்கதைகள் மக்களிடையே காணப்பட்டதை இவர் குறிப்பிடுகிறார். "திருவாங்கூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாகக் குமரி மாவட்டம் இருந்தபோது மிகவும் இழிவான பண்பாட்டு ஒடுக்கு முறைகள் அங்கு நிலவின. அவற்றுள் ஒன்றாகப் பல்வேறு சாதிகளைச் சார்ந்த பெண்கள் மார்பை மறைக்கும் உரிமை இல்லாதிருந்தனர். அரை நிர்வாணக் கோணத்திலேயே இப்பெண்கள் பொது இடங்களில் நடக்க வேண்டிய அவலம் நிலவியது. ஆதிக்கச் சக்திகளாக அன்று விளங்கிய நாயர்களும், வெள்ளாளர்களும் இவ்விதி முறையைக் கடைப்பிடிக்கும்படி உறுதியாகப் பார்த்துக் கொண்டார்கள்."

"இக்கொடுமையை எதிர்த்து கி.பி. 1822, கி.பி.1828-1829, 1858 என்ற மூன்று கட்டங்களில் தென் திருவிதாங்கூர்ப் பகுதி நாடார் சமூகத்தின் கிறிஸ்தவ மிஷனரிகளின் ஆதரவோடு போராட்டம் நடத்தி வெற்றி பெற்றனர். அதன் பின்னர் இக்கொடுமை ஒழிந்தது. இது 'தோள்ச் சீலைப் போராட்டம்' என்று அழைக்கப்படுகிறது."

அடுத்து, இவர் பண்பாட்டு அடையாளம் போராட்டங்களைக் குறித்து விரிவாக விளக்குகிறார். "உண்மையான சமூக வரலாறு என்பது பண்பாட்டு ஒடுக்கு முறைகளையும், அவற்றிற்கு எதிராக நிகழ்ந்த போராட்டங்களையும் உள்ளடக்கியதாகும். எனவே, இத்தகைய போராட்டங்களைக் குறித்து விரிவாக அறிந்துகொள்வது சமூக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறுகிறது."

தொடர்ந்து, பண்பாட்டு அடையங்களை வகைப்படுத்தி விளக்கம் அளிக்கிறார் "மொத்தத்தில் சமயம் - சாதி - மொழி - வழிபாடு - ஆடை அணிகலன்கள் - உணவு - உண்ணும் முறை - மக்கள் பெயர் இவையெல்லாம் பண்பாட்டு அடையங்களாகும். இப்படி பண்பாட்டு அடையாளங்கள் வெறும் அடையாளங்களாக மட்டுமின்றி அதிகாரம் குறித்த கருத்துருவாக்கமாகவும் அமைகிறது.

அடுத்து, மேட்டிமையோர் மற்றும் மேட்டிமைக் குழுக்களைக்குறித்து இத்தாலிய நாட்டு கிராம்-ஸ்கி, இங்கிலாந்து எங்கெல்ஸ் போன்றவர்களின் கருத்துக்களை முன்வைத்து உண்மை நிலையை அடையாளப்படுத்துகிறார் தொடர்ந்து அவர் குறிப்பிடும்பொழுது ஒரு கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் புலப்படுத்துகிறார். சமூகத்தின் அடித்தளமக்கள் கடுமையாக உழைத்து உழன்றாலும் அவர்களுக்குக் கிடைப்பதென்னவோ ஏளனமும் அவமதிப்பும்தான். "விளக்குத் தண்டைப்போன்று நாகரிக விளக்கினைத் தலையால் சுமந்துகொண்டு இக்கூட்டம் இருக்கிறது. விளக்கிலிருந்து கசிகின்ற எண்ணெயானது விளக்கைச் சுமப்பவர் மீது கசிந்து கொண்டிருக்க மேல்நிலை மக்கள் விளக்கின் ஒளியைப் பெறுகின்றனர். என்று தாகூர் குறிப்பிடுவார். என்று ஓர் எடுத்துக்காட்டை இவர் முன்வைக்கிறார்.

"அடித்தளமக்கள் யார் என்பதையும் தன்னுடைய வரையறை மூலமாகப் புலப்படுத்துகிறார்: மேட்டிமைக் குழுவிற்கு நேர்மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும், சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்கு பெற முடியாதவர்களாகவும், குறைந்த அளவு உணவு, குறைந்த அளவு உடை, குறைந்த கல்வி பெற்று வாழும் மக்கள் பிரிவினரே அடித்தள மக்கள் எனப்படுகின்றனர். இந்தச் சூழலில் அடித்தள மக்கள் என்பதற்கு, சாதி, செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம் பாலியல் நிலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்து நிலைகளிலும் தாழ்ந்திருக்கும் மக்கள் என ஓர் எளிய வரையறை செய்யலாம்."

அடித்தள மக்களின் பண்பாட்டு அடையாளங்களை இழிவுபடுத்தும் தன்மைகளையும் அவைகளை மாற்றியமைக்கும் நடைமுறைகளையும் இவர் விளக்குகிறார் மேலும் வர்க்கப் போராட்டத்தில் அடித்தள மக்களின் நிலைமைகளைப் பற்றியும் இவர் தன் ஆய்வை முன் வைக்கிறார். "வர்க்கப் போராட்டம் என்பது உடைமையாளர்களான முதலாளிகளுக்கும், உற்பத்தியில் ஈடுபடும் பாட்டாளிகளுக்கும் இடையே வேலைத்தளத்தில் நிகழும் யுத்தம் மட்டுமல்ல. அது பண்பாட்டிலும் சமயத்திலும் கூட வெளிப்படும். பண்பாடு, சமயம் தொடர்பான கண்ணோட்டம், தகவு, நம்பிக்கை போன்றவற்றில் சிக்கலைத் தோற்றுவித்து, மக்களின் சிந்தனையிலும் நடத்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற

கருத்தையும் தெரிவிக்கிறார். இது, 'பொருளாதாரம் அல்லாத சுரண்டல் முறை' என்று மார்க்ஸ் குறிப்பிடுவதை மனதிற் கொண்டு ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலுக்கு எதிராக வர்க்கப் போராட்டக் களத்தை விரிவுபடுத்தும் கிராம்ஸ்கியின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே பண்பாட்டு அடையாளங்களைப் புறக்கணித்துவிட்டு முழுமையான சமூக மாறுதலை உருவாக்க முடியாது. அரசியல் மற்றும் பொருளாதாரப் போராட்டங்களோடு பண்பாட்டு அடையாளப் போராட்டங்களையும் இணைத்துக்கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும் என்கிறார் இவர்.

தமிழர்களுடைய சமுதாய வாழ்க்கையில் நிலவுடைமை தோன்றிய பின்னணியையும், மாற்றங்களையும், வளர்ச்சியையும் தகுந்த ஆவணங்களைக் கொண்டு நிலைப்படுத்துகிறார். தொழில்களின் அடிப்படையில் சாதிகள் தோன்றி வளர்ந்து பிளவுபட்டு ஏற்றத் தாழ்வுகள் உருவான நடைமுறைகளையும் விளக்குகிறார். கணக்கன் வரலாற்றையும் மாறுபட்ட அரசுகளின் தோற்றங்களையும் வேறுபாடுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு வரலாற்று மாற்றத்தையும், வளர்ச்சியையும் அறிவியல் கண்ணோட்ட அடிப்படையில் மதிப்பீடுகளைக் கண்டறிகிறார். அவற்றிற்குப் பொருத்தமான வகையில் தகுந்த ஆதாரங்களை கணக்கன் வழக்காறுகளை முதன்மைப்படுத்தி விளக்கம் அளிக்கிறார்.

ஆங்கில ஆட்சியால் இந்திய சமூகத்திற்கு நேர்ந்த கொடிய விளைவுகளுள் ஒன்று இங்கு அடிக்கடி நிகழ்ந்த கடும் பஞ்சங்கள். அதைத் தாது வருடப்பஞ்சம் என்று குறிப்பிட்டு அடித்தள மக்கள் அனுபவித்த துன்பதுயரங்களைத் தகுந்த புள்ளிவிவரங்களோடு இவர் அடையாளப்படுத்துகிறார்.

தொடர்ந்து சமூகம் சார் கொள்ளையரின் தோற்றமும் தாக்கங்களும் நாட்டார் வழக்காறுகளிலிருந்து கண்டறிந்து அவற்றை எடுத்துக்காட்டாக முன்வைத்துத் தனது முடிவுகளை நிறுவுகிறார். அவைகள் நாட்டார் பாடல்கள், கதைகள். வாய்மொழிகள் போன்றவற்றில் நிறைந்து கிடப்பதைத் தகுந்த ஆவணங்களை ஆதாரமாக்கி விருப்புவெறுப்புக்களுக்கு இடமளிக்காமல் நேர்மையோடு இனம் காண்கிறார்.

மேலும், பரதவர்களின் 'மேசை எதிர்ப்புப் போராட்டம்' துவிக் குத்தகைப் போராட்டம் போன்ற வரலாற்று நிகழ்வுகளைத் தகுந்த பின்னணிகளோடு விளக்குகிறார்.

தமிழில் குறுநூல்கள் தோன்றிய பின்னணியையும், வளர்ச்சியையும், வகை-யினங்களையும் காலவரிசைப்படி அடையாளப்படுத்தி, இன்றைய ஊடகங்களின் உயர்ந்த கட்ட வளர்ச்சியையும் குறிப்பிடுகிறார்.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாகப் பழைய தானியங்கள் மறைந்து புதிய பயிர் வளர்ப்புக்கு உகந்த நவீன தானியங்களைப் பட்டியலிடுவதோடு, புதிய உற்பத்தி முறையில் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் நிகழும் மாற்றங்களையும் இனம் காண்கிறார் இவர்.

மக்களைக் கூடி வாழச் செய்யும் முறையில் நிகழ்ந்து வரும் பூப்புச்சடங்குகளைப் பற்றியும், நம்பிக்கைகளைப் பற்றியும் தெளிவான பார்வையை முன்வைத்து அவற்றிற்கே உரிய தனிச் சிறப்புக்களையும் குறிப்பிடுகிறார்.


"ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் கீழ் நிலையிலுள்ள ஆண்களோ, பெண்களோ தங்கள் எதிர்க் குரலைச் சாமியாட்டத்தின் வாயிலாகவே வெளிப்படுத்துகின்றனர். என்ற லெனின் கருத்துக்குப் பொருத்தமான வகையில் அடித்தள மக்களிடையே காணப்படும் சாமியாடும் தந்திரச் செயலைப் பல கோணங்களிலிருந்து கண்டறிந்து துல்லியமாகவும், தெளிவாகவும் விளக்குகிறார்.

தொடர்ந்து இந்தியாவில் பெரும்பாலான சமுதாயங்களில் தொடர்ந்து நிலவி வந்த உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தகுந்த ஆவணங்களின் அடிப்படையில் உறுதிப்படுத்துகிறார். மேலும், நாட்டார் வழக்காறுகளில் பரவலாகக் காணப்படும் பாலியல் வன்முறையைப் பற்றியும் தகுந்த சான்றுகளுடன் விளக்கிக் காட்டுகிறார். இவை அனைத்தும் அடித்தள மக்களின் வாழ்க்கையை முன்நிறுத்தி மதிப்பீடு செய்யப்பட்டவை என்பது தெளிவாகிறது.


கடந்த காலங்களில் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல வகையான நிகழ்வுகளை அவர்களுடைய வழக்காறுகளிலிருந்து கண்டறிந்து வியக்கத் தகுந்த வகையில் ஒரு மாற்று வகையாக இதை வடிவமைத்திருக்கிறார். இவர். வாசிப்பதற்கு உகந்த விதத்தில் எளிய நடையில் தெளிவாகவும், துல்லியமாகவும் 'அடித்தள மக்கள் வரலாறு' வடிவம் பெற்றுள்ளது. இதுவரை அறியப்படாத பலவகையான உண்மைகளை இது புலப்படுத்துகிறது.

●


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் மார்க்ஸிய வெளியீடுகள்





**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**
**கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்**
தமிழாக்கம், அறிமுகவுரை, விளக்கக் குறிப்புகள்
எஸ்.வி.ராஜதுரை
₹ 550/-




**மார்க்ஸ் - எங்கல்ஸ்**
**தேர்வு நூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்**
20 தொகுதிகள்
பதிப்பாசிரியர் - ந.முத்துமோகன்
₹ 5000/-




**மூலதனம்**
**கார்ல் மார்க்ஸ்**
மூன்று பாகங்களும் சேர்ந்து ஐந்து புத்தகங்களும்
₹ 2000/-




**கார்ல் மார்க்ஸ் 200**
பதிப்பாசிரியர் - எஸ்.வி.ராஜதுரை
₹ 675/-






# மொழி மட்டும் தனியாக வளராது

## த.ஸ்டாலின் குணசேகரன்

கொடுமணல், கீழடி, ஆதிச்சநல்லூர், பொருந்தல் போன்ற பல இடங்களில் அகழாய்வுகள் நடைபெற்று வருகின்றன. இக் களங்களில் ஏராளமான பழந்தமிழ் எழுத்துப் பொறிப்புகளைக் கொண்ட மண்பாண்டம் போன்ற பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. கல்வெட்டு, செப்பேடு, ஓலைச் சுவடி போன்றவற்றில் பழந்தமிழ் எழுத்துக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. தொல்லியல் ஆய்வுகளை முறையாகவும் முழுமையாகவும் மேற்கொள்ள வேண்டுமெனில் பழந்தமிழ் எழுத்துகளைப் படிக்கும் முழுத்தகுதி மிக்க இளம் வல்லுனர்கள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றனர்.

பழமைமிக்க தமிழ் எழுத்துகளைப் படிப்பதற்கென்று தனிப் பயிற்சியும் நீண்ட அனுபவமும் உள்ளவர்கள் மட்டுமே இப்பணியைச் செய்ய முடியும். அத்தகைய வல்லுனர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறது. தமிழ்மொழி மற்றும் தமிழர்களின் வரலாற்றை முழுமையாக ஆவணப்படுத்த வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். அத்தகைய நுட்பமான தமிழ்ப்பணிகளுக்கு ஆட்படுத்திக் கொள்ள மாணவர்கள் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

சமயப்பணிகளை மேற்கொள்வதற்காக இந்தியா வந்த ஜி.யு.போப் அப்பணிக்கு அவசியப்படும் என்பதற்காக தனது பதினேழாவது வயதில் தமிழ்மொழியைப் படிக்கத் தொடங்கினார். தமிழ் மொழியைப் படிக்கப் படிக்க அதன் தனிச்சிறப்பை உணர்ந்து தமிழ்மொழி ஆராய்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். திருக்குறள், நாலடியார், திருவாசகம் போன்ற பல தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். திருக்குறளை முதன்முதலில் முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததுடன் அதனைப் பதிப்பித்தும் லண்டன் மாநகரிலேயே வெளியிட்டதன் மூலம் திருக்குறளை உலகறியச் செய்தவர் ஜி.யு.போப். இந்த ஆண்டு அவர் பிறந்த 200 ஆவது ஆண்டு.

ஓலைச்சுவடி வடிவில் பல்லாண்டுகளாகக் கேட்பாரற்றுக் கிடந்த புறநானூறு போன்ற பல சங்கத் தமிழ் நூல்களை அரிதின் முயன்று தேடிக் கண்டுபிடித்ததோடு அவற்றை ஆய்வு செய்து பிழைதிருத்தி, பதிப்பித்து வெளியிட்டவர் உ.வே. சாமிநாத ஐயர். அவரது வாழ்வும் பணியும் பற்றி அடுத்த தலைமுறைக்கு அழுத்தமாக எடுத்துச் சொல்லப்பட்டால் தமிழாய்வுப்பணியில் இளைஞர்கள் பலர் ஈடுபட வாய்ப்பாக அமையும்.


தமிழ் வளர வேண்டுமெனில் தமிழர்கள் கல்வி, அறிவியல், வணிகம், ஆய்வு, தொழில், கலை, இலக்கியம், அரசியல் போன்ற அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டும். மொழி மட்டும் தனியாக வளர்வது சாத்தியமில்லை. தமிழ் இளைஞர்கள் உ.வே.சாமிநாத ஐயர் எழுதிய 'என் சரித்திரம்', ம.பொ.சிவஞானம் எழுதிய 'எனது போராட்டம்' போன்ற நூல்களை வாசித்தால் தமிழ் உணர்வோடு தன்னம்பிக்கையும் பெறுவார்கள்.

*(19-09-2019 அன்று சென்னை கிறித்துவக் கல்லூரி தமிழ்ப் பேரவைத் தொடக்க விழாவில் ஆற்றிய உரையின் கட்டுரை வடிவம்)*

# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்




**கருக்கு**
பாமா
₹ 110/-





**சத்சங்கம்**
வெ.இறையன்பு
₹ 150/-




**தொல்காப்பியம்**
**(மூலமும் உரையும்)**
கு.வெ.பாலசுப்பிரமணியன்
₹ 360/-




**வயல்** (நாவல்)
கு.வெ.பாலசுப்பிரமணியன்
₹ 80/-




**தலைவலியும் மருத்துவமும்**
டாக்டர் சு,நரேந்திரன்
₹ 90/-




**உடல்நலம்**
**காத்திடும் உண்மைகள்**
டாக்டர் ராமர் கோதண்டபாணி
டாக்டர் உமா ராமர்
₹ 165/-

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை

# உள்ளூரிலிருந்து உலக இலக்கியவியலுக்கு ஒரு பயணம்

கி.பார்த்திபராஜா




*சங்க இலக்கியங்கள் உள்ளிட்ட மரபிலக்கியங்களை வாசிப்பது என்பது, பண்டைய காலகட்டத்துத் தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றை அறிவதாகவும் உள்ளது. பண்டைய இலக்கியத்தோடு பிந்தைய காலத்து வாசகனை நெருக்கமாக்குவதற்கான குறிப்புகளைத் தொல்காப்பியர் போன்ற இலக்கணிகள் வழங்கியுள்ளனர். பிற்கால இலக்கணிகள் தங்களின் ஒப்பற்ற முன்னோடியாகத் தொல்காப்பியரையே கொண்டாடுகின்றனர். எனவே தமிழ் இலக்கியப் பரப்பின் நுட்பத்தையும் ஆழத்தையும் முற்றுமுழுதாக அறிந்துகொள்ள தொல்காப்பியக் கல்வி அவசியமாகிறது. தொல்காப்பியத்தின் இலக்கியக்குறிப்புகளைப் புதிய கோணத்தில் விளக்குகிறார் த.விஜயலட்சுமி. அவரது 'தமிழ் இலக்கியக் கோட்பாடு' என்னும் நூல், மரபிலக்கியங்களை உள்வாங்கிக் கொள்வதற்கான கைவிளக்காகத் திகழ்கிறது.*

கூற்று, கேட்போர், களன், காலம், முன்னம், நோக்கு, மாட்டு, எச்சம், பொருள், மரபு, பயன், மெய்ப்பாடு, அங்கதம், உள்ளுறை, திணை என்னும் இலக்கியக் கருவிகளை ஆய்ந்து விளக்குகிறது இந்நூல். இவ்விலக்கியக் கருவிகளின் துணைகொண்டு தமிழ் இலக்கியப் பரப்பின் முழுமையையும் உள்வாங்கிக் கொள்ளலாம் என்கிறார் நூலாசிரியர் த.விஜயலட்சுமி. புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்' சிறுகதையை எடுத்துக்கொண்டு மேற்குறித்த இலக்கியக் கருவிகளை விளக்கிச் செல்கிறார்.

தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கணங்கள், தமிழ் இலக்கியங்களின் வடிவம் குறித்து விளக்குவன என்ற பொதுப்புரிதலைக் கட்டுடைத்து, அவை தமிழின் மனவெளி சார்ந்த பொருள் - உள்ளடக்கம்- குறித்து உரையாடுவன என்ற புதிய புரிதலுக்கு நகர்த்துகிறார் இந்நூலாசிரியர்.

தமிழ்க்கவிதையியல் என்பது வெறும் செய்யுள் கட்டுமானம் குறித்தது மட்டுமல்ல; மாறாக, அதன் பொருண்மை சார்ந்த தனித்துவத்தையும் குறிக்கிறது. தமிழர் வாழ்வியல் பதிவு குறித்த இலக்கியத் திரட்சியே பொருள் இலக்கணம். தமிழ்க் கவிதையியல் என்னும் பொருளிலக்கணத்துக்குத் தந்தை தொல்காப்பியரல்லர்; தனக்கு முந்தைய இலக்கணிகளின் வழிநின்று அவற்றை வகுத்தும் தொகுத்தும் புதுக்கியும் சொல்லப் புகுந்தவரே அவர். 'என்ப, மொழிப, என்மனார் புலவர்' என்று பல இடங்களில் தொல்காப்பியரே, முன்னோடிகளைச் சுட்டிக்காட்டி நன்றியுரைக்கிறார். எனவே பொருளிலக்கணம் என்பது நீண்ட நெடிய தமிழ்மரபின் அனுபவத் திரட்சி என்பது புலனாகிறது.




தமிழ் இலக்கியக் கோட்பாடு
த.விஜயலட்சுமி
பூவரசி வெளியீடு
2, இரண்டாவது தளம், ஒன்றாவது குறுக்குத் தெரு, புஷ்பா காலனி, சாலிகிராமம், சென்னை - 600 093 பேசி: 9600131346
முதற்பதிப்பு : பிப்ரவரி, 2019
விலை: ரூ.150/-

பொருளிலக்கணம் என்னும் தமிழ்க் கவிதையியல் குறித்துத் தமிழ் இலக்கணிகள் வழங்கியுள்ள சட்டகங்கள் தனித்துவம் மிக்கவை. இலக்கியக் கட்டுமானத்திற்குத் தமிழ் வாழ்க்கை சார்ந்த பொருண்மையினை அளிப்பவை. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற அடிப்படைகள், காலம், இடம், சூழல், வாழ்வியல் அம்சங்களை விளக்குபவை. திணைக்களமும் அதன் துறை வகைமைகளும் தமிழ்க்கவிதையியலை அகம், புறம் என்ற நிலைக்களத்தில் அழகுற நிறுத்துபவை.

இவ்வாறு தொல்காப்பியர் குறிப்பிடும் செய்யுளுறுப்புகள் 34. அவற்றுள் பதினைந்து உறுப்புகளை மட்டும் எடுத்துக்கொண்டு விளக்கப் புகுகிறார் 'தமிழ் இலக்கியக் கோட்பாடு' நூலாசிரியர் த.விஜயலட்சுமி. மேற்குறித்த செய்யுளுறுப்புகளை விளக்கிச் சென்றிருக்கும் உரையாசிரியர்களின் முதன்மையாளர்கள் அனைவரது கருத்துக்களையும் தொகுத்துரைக்கிறார். இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், வெள்ளைவாரணர், மு.ராமலிங்கனார், ச.வே.சுப்பிரமணியம், ச.பாலசுந்தரம், தமிழண்ணல், செ.வை.சண்முகம் உள்ளிட்ட உரையாசிரியர்களின் கருத்துக்களை விளக்கிச் சொல்வதோடு, உரையாசிரியர்களுக்கிடையே குறிப்பிட்ட பொருண்மை குறித்து ஏற்படும் கருத்து மாறுபாடுகளையும் குறிப்பிட்டு அடையாளப்படுத்துகிறார் நூலாசிரியர். இந்த உரையாசிரியர்கள் தரும் விளக்க வெளிச்சத்தில் குறிப்பிட்ட செய்யுளுறுப்பை உள்வாங்கிக் கொண்டு, அது தற்காலப் படைப்பாகிய புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்' சிறுகதையில் எவ்வாறு பயின்று வந்துள்ளது என்றும் பொருத்திக்காட்டி விளக்குகிறார்.

தமிழ் இலக்கியக் கோட்பாடு - என்ற கல்விப்புலம் சார்ந்த தலைப்பில் இந்நூல் அமைந்திடினும், கல்விப்புலத்திற்கு வெளியே நின்று தமிழ் இலக்கியப் பரப்பை உற்றுநோக்கும் வாசகனுக்கும் திறனாய்வாளனுக்கும் ஆராய்ச்சியாளனுக்கும் இந்நூல் பெரிதும் வழிகாட்டுகிறது.

மேலைக் கோட்பாடுகள், தமிழ் இலக்கியப் பரப்பின் மேல் புதிய வெளிச்சங்களைப் பாய்ச்சியிருக்கின்றன என்பது உண்மைதான். மார்க்சியம், பிராய்டியம், அமைப்பியல், பின்னை அமைப்பியல், நவீனத்துவம், பின்னை நவீனத்துவம், இருத்தலியல் உள்ளிட்ட நவீனக் கோட்பாடுகளால் தமிழ் இலக்கியங்கள் அளக்கப்பட்டிருக்கின்றன. மரபார்ந்த திறனாய்வுக்கான எல்லைகளைத் தாண்டி, அவை புதிய நோக்குகளையும் உருவாக்கியிருக்கின்றன. ஆனால், த.விஜயலட்சுமியின் 'தமிழ் இலக்கியக் கோட்பாடு' என்னும் இந்நூலோ, தொல்காப்பியரைக் கொண்டு நவீன இலக்கியங்களை அளந்து பார்க்கலாமே என்று புதிய சாளரத்தைத் திறக்கிறது.

உலகப் பொதுவான இலக்கியக் கோட்பாட்டுக்கான அம்சங்கள் தமிழ்க் கவிதையியலில் இருப்பதால், அதைக் கொண்டு பல்வேறு மொழிகளில், பல்வேறு காலகட்டங்களில் உருவான இலக்கியப் பனுவல்களை அணுகிப் பார்க்கலாமே என்று முன்னுரைக்கிறார் த.விஜயலட்சுமி.

திணை இணக்கம், திணைப் பிணக்கம், திணை விரிவாக்கம் என்னும் நிலைகளில் திணைக் கோட்பாட்டை விரிவுபடுத்தி, உலக இலக்கியங்கள் அனைத்திற்கும் பொருந்தும் ஒரு இலக்கியக் கோட்பாடாக விரிவடையச் செய்யலாமென்றும் அதற்கான ஆற்றல் திணைக் கோட்பாட்டில் உள்ளது

என்றும் அடையாளப்படுத்திய மலையாளப் பேராசிரியர் கே.ஐயப்ப பணிக்கரை முன்மொழிந்து தனது ஆய்வைச் செய்துள்ளார் நூலாசிரியர்.

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன், பேராசிரியர் சிவ.சுப்பிரமணியம், தமிழவன், அ.ராமசாமி, தி.கு.ரவிச்சந்திரன், க.ஜவகர் ஆகியோர் திணைக்கோட்பாட்டு அடிப்படையில் புரிந்துள்ள ஆய்வுகளை உரமாக்கிக் கொண்டு தனது ஆய்வின் போக்கைத் தீர்மானித்துக் கொண்டுள்ளார் த.விஜயலட்சுமி. அந்த அடிப்படையில் அவர் புதிய நோக்கில் இந்நூலைப் படைத்தளித்துள்ளார்.

'முடிவன்று தொடக்கம்' என்று தன்னுடைய இறுதிப் பகுதிக்குத் தலைப்பிட்டிருக்கிறார் த.விஜயலட்சுமி. திணைக்கோட்பாட்டை உள்வாங்கிக் கொண்டு, தமிழ் இலக்கியப் பரப்பை நோக்கும் மரபு இடையறுந்து போயிருப்பதைக் குறித்துக் கவலையோடு பதிவு செய்யும் அவர், அதனை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் குறிப்பிடுகிறார்.

*'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த, இன்று விட்டுப் போன தமிழ்ச்சிந்தனை மரபைத் தற்காலத் தமிழ் அறிவுசார் சமூகத்திற்கு மீண்டும் கட்டமைப்பதாக, தொடர் உருவாக்கமாக, இக்கோட்பாடு அமைகின்றது. தொடர்ந்து இக்கோட்பாட்டடிப்படையில் ஆய்வு மேற்கொள்வதன் வழியாக இக்கோட்பாட்டை ஒரு செறிவான நிலைக்கு மேம்படுத்த இயலும். அவ்வாறு செறிவடைந்த தமிழ் இலக்கியக் கோட்பாட்டை ஆங்கிலமொழி வழியாக உலக இலக்கியங்களுக்குப் பயன்படும் ஒரு சிறந்த இலக்கியக் கோட்பாடை உலகிற்கு அளித்தல் என்பது தமிழர்களாகிய நமது கடமையும் பெருமையுமாகும்' (ப.108)* என்று அவர் குறிப்பிடுகிறார்.

கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழியற்புலப் பேராசிரியராகப் பணியாற்றும் த.விஜயலட்சுமியின் இம்முயற்சியை இளம் தமிழியல் ஆய்வாளர்கள் தொடர வேண்டும். அவ்வாறு தொடர்வதன் மூலம்தான் இக்கோட்பாட்டை விரிவாக்கவும் செழுமைப்படுத்தவும் இயலும். கவிஞர் சிற்பி குறிப்பிடுவதைப் போல, ஏற்கனவே தொடங்கித் தொடங்கி இடைநின்றுபோன இக்கோட்பாட்டு உருவாக்க முயற்சியில், த.விஜயலட்சுமியின் இந்நூல் ஒரு உத்வேகத்தை அளிக்கிறது. தமிழின் திறனாய்வு எல்லைகளை விரிவாக்குவதற்கான குறிப்புகளை முன்மொழியும் த.விஜயலட்சுமியின் 'தமிழ் இலக்கியக் கோட்பாடு' என்னும் இந்நூல் கவனம் பெற வேண்டிய படைப்பு.





இலங்கை யாழ் நகரில் வீர சிங்கம் மண்டபத்தில் 27.08.2019 முதல் 01.09.2019 வரை பூபால சிங்கம் புத்தக நிறுவனத்துடன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து, ''யாழ் நகரப் புத்தகக் கண்காட்சி'' நடத்தியது. துவக்க விழாவில் வட கிழக்கு மாகாண ஆளுநர், இந்திய தூதரக துணை ஆணையர், யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இலங்கை பூபாலசிங்கம் உரிமையாளர் திரு. ஸ்ரீதரசிங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சண்முகம் சரவணன், பொது மேலாளர் திரு.தி.ரத்தினசபாபதி, பேராசிரியர் திரு.மு.ராமசாமி மற்றும் முதன்மை நிர்வாகி திரு.எஸ். மணவாளன் ஆகியோர் கலந்துகொண்டனர்.


இரா.அறவேந்தனின்
சிறுநூல் வெளியீடுகள்
அசோகமித்திரன் படைப்பாளுமை
இரா.அறவேந்தன்
₹ 25/-
எண்ணங்களே ஏற்றத்தைத் தரும்
இரா.அறவேந்தன்
₹ 25/-
ஐங்குறுநூற்று முதல் முழு உரையின் இயல்புகள்
இரா.அறவேந்தன்
₹ 25/-
பெரியார் சமதர்மம்
இரா.அறவேந்தன்
₹ 25/-
பூரணி படைப்பாளுமை
(1913-2013)
இரா.அறவேந்தன்
₹ 25/-
சிலப்பதிகாரப் படைப்பாக்க முறை
இரா.அறவேந்தன்
₹ 20/-
தமிழ்ச் செவ்வியல்
இரா.அறவேந்தன்
₹ 25/-
திருக்குறள் வாசிப்பு
பெரியாரும் பின்வந்தோரும்
இரா.அறவேந்தன்
₹ 35/-
உரைவழிப் பாடமீட்டெடுப்பு
இரா.அறவேந்தன்
₹ 20/-
யதார்த்தச் சித்திரிப்பில் மனித மறுதலிப்பு
இரா.அறவேந்தன்
₹ 20/-

# *பெரும்பேராசிரியரின் ஆசிரியர்கள்

முனைவர் இரா. வெங்கடேசன்



*(ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் மாணவர் உ.வே. சாமிநாதையரும்)*

**1935,** மார்ச், 6-ஆம் நாள் நடைபெற்ற உ.வே. சாமிநாதையரின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கத்தார் அளித்த வாழ்த்துரையின் நடுப்பகுதி,

*“செயற்கரிய செயல்களைத் தமிழுலகத்திற்குத் தாங்கள் செய்து வந்திருப்பதோடு துரைத்தனக் கல்லூரிகளில் தமிழாசிரியராகவிருந்தே தங்கள் வாழ்நாளிற் பெரும்பாகத்தைக் கழித்தீர்களென்று அறிந்து தங்களைப் பெரிதும் நாங்கள் பாராட்டுகின்றோம். தங்கள்பாலுள்ள தெய்வபக்தி, உண்மை, அன்பு, உறுதி, சொல்வன்மை, கலைபயில் தெளிவு முதலிய அரிய குணங்கள் தங்கள் மாணவரின் மனத்தை முற்றிலும் தம்பால் வசீகரித்து அவர்தம் வாழ்க்கையையும் புனிதமாக்கின” (எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவில் அளிக்கப்பெற்ற உபசாரப் பத்திரங்கள், ப. 26)*

---

⋆ 1906, ஜனவரி, 1-ஆம் நாள் டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு அரசு ‘மகாமகோபாத்தியாயர்’ என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தியது. ‘மகாமகோபாத்தியாயர்’ என்றால் ‘பெரும்பேராசிரியர்’ என்று பொருள்

என அமைந்திருக்கிறது. இந்த வாழ்த்துரை சாமிநாதையர் கல்லூரிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றுப் பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னர் வழங்கப்பெற்றது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவர் முதன்முதலாகப் பணியாற்றிய கும்பகோணம் கல்லூரி மாணவர்களும் அப்போது வாழ்த்தி மகிழ்ந்திருக்கிறார்கள்.

லயோலா கல்லூரி, அரசு இசுலாமியக் கல்லூரி மாணவர்களும் சாமிநாதையர் அவர்களுக்கு வாழ்த்துப் பாக்களை வழங்கி-யிருக்கிறார்கள். சாதி, சமயப் பாகுபாடுகளின்றிப் பலரும் சாமிநாதையரின் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவின்போது வாழ்த்துரைகளை வழங்கி-யிருக்கின்றனர். இவ்வகைப் போற்றுதலுக்கெல்லாம் சாமிநாதையர் மாணவர்கள் போற்றிக் கொண்டாடிய நல்லாசிரியராக அரைநூற்றாண்டிற்கும் மேலாகக் கல்லூரிகளில் பணியாற்றியிருப்பதுதான் காரணமாக இருந்தது. சாமிநாதையரின் வரலாற்றுச் சிறப்பான செயல்களுக்கு ஆசிரியர்களின் பங்களிப்பு மகத்தானதாகும். சாமிநாதையரின் ஆசிரியர் பரம்பரை மிக நீண்ட நெடும்வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டமைந்திருக்கிறது. அவரின் ஆசிரியர் பரம்பரையை இரண்டு நிலைகளாகப் பகுத்துக்கொள்ளலாம். ஒன்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பாடம் கேட்பதற்கு முந்தைய நிலை (1860 - 1870), இரண்டு அதற்குப் பிந்தைய நிலை (1871 - 1876) என்பனவாகக் கொள்ளலாம்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பாடங்கேட்பதற்கு முந்தைய நிலை (1860 - 1870)

முதல்நிலை, ஐந்து வயதில் உத்தமதானபுரத்தில் நாராயண ஐயர் என்பவரிடம் அரிச்சுவடி முதலிய ஆரம்பப் பாடங்களைப் படிக்கத்தொடங்கியது முதல், செங்கணம் சின்ன பண்ணை விருத்தாசல ரெட்டியாரிடம் யாப்பருங்கலக் காரிகையைப் பாடங்கேட்டது வரையிலான காலப்பகுதியைக் கொள்ளலாம்.

உ.வே. சாமிநாதையர், தம் பாட்டி ஊரான காவி-ரியின் வடகரையில், கஞ்சனூரென்னும் தலத்துக்கு வடகிழக்கிலுள்ள சூரியமூலையில் 19, பிப்ரவரி, 1855இல் பிறந்தவர். சாமிநாதையர் குடும்பத்தார் அப்போது அரியிலூரில் வசித்துவந்தனர். சாமிநாதையர் ஆரம்பக் கல்வியைத் தம் சொந்த ஊரான உத்தமதானபுரத்தில் பயின்றிருக்கிறார். பின்னாளில் பல ஊர்களில் தமது கல்வியைக் கற்க வேண்டிய சூழல் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. தந்தை வேங்கடசுப்பையர் சங்கீதப் புலமை பெற்று விளங்கியவர். இவரது முன்னோர்களும் இசைப்பயிற்சியில் புலமை பெற்றவர்களாக இருந்திருக்கின்றனர். கீர்த்தனங்களை இசையுடன் பாடும் வல்லமை பெற்றவராக வேங்கடசுப்பையர் விளங்கியிருக்கிறார். ஊர் ஊராகச் சென்று திருவிளையாடல் புராணம், கம்பராமாயணம், பாரதம் முதலிய நூல்களைப் பிரசங்கம் செய்து, ஊரார் அளிக்கும் சன்மானங்களைப் பெற்று வாழ்ந்து வந்தவர். ஜமீந்தார்கள், செல்வந்தர்களின் ஆதரவிலும் வேங்கடசுப்பையர் சங்கீத வித்துவானாக இருந்திருக்கிறார். இதனால் தந்தை செல்லும் இடமெல்லாம் சாமிநாதையரும் உடன் செல்லக்கூடிய சூழல் இருந்தது.

பிரசங்கம் செய்யச் செல்லும் ஊரில் தங்கி-யிருக்கின்ற காலத்தில், அந்த ஊரில் உள்ள கற்றுத்தேறியவர்களிடம் சாமிநாதையரைப் பாடம் கேட்க வைப்பது வேங்கடசுப்பையரின் வழக்கமாக இருந்தது. தம் முன்னோர்கள் வழக்கப்படி சாமிநாதையரும் இசைப் பயிற்சியைப் பெறவேண்டுமென்ற பெருவிருப்பம் தந்தை வேங்கடசுப்பையருக்கு இருந்தது. காலம் சாமிநாதையரைத் தமிழின்பால் ஈடுபாடுகொள்ளச் செய்துவிட்டது.

**உத்தமதானபுரம்**

கல்வியறிவு பெற்ற குடும்பச்சூழலில் பிறந்துவளரும் குழந்தைகள், ஆரம்பக்கல்வியைப் பெறுவதைப் போன்றே உ.வே. சாமிநாதையரும் குடும்ப உறுப்பினர்களாகிய பாட்டி, பாட்டன், தாய், தந்தை, சிறிய தந்தை ஆகியோர்களிடம் அரிச்சுவடி, தெய்வத் துதிப் பாடல்களைப் பாடம் கேட்டிருக்கிறார். தம் தந்தை வேங்கடசுப்பையரிடம் நிகண்டு போன்ற பல கருவிநூல்களையும், சதக நூல்களையும் பாடங்கேட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். தாம் ஆரம்பக் கல்வி பெற்றது குறித்து என் சரித்திரத்தில் விரிவாக எழுதியிருக்கிறார் உ.வே.சா. அதில் ஓரிடத்தில்,

"எனக்கு ஐந்தாம் பிராயம் நடைபெற்றபோது வித்தியாப்பியாசம் செய்வித்தார்கள். என் பாட்டனார் அரிச்சுவடி சொல்லித்தந்தார். முதலில் உத்தமதானபுரத்தில் தெற்கு வடக்குத் தெருவில் இருந்த பள்ளிக்கூடத்தில் நாராயண ஐயரென்பவரிடம் சில மாதங்களும், பிறகு வடக்குத் தெருவில் இருந்த பள்ளிக்கூடத்தில்

சாமிநாதையரென்பவரிடம் சில வருஷங்களும் படித்தேன். தமிழில் கீழ்வாயிலக்கம், நெல் இலக்கம் முதலியவற்றையும், வடமொழியில் சில நூல்களும் படித்தேன். பள்ளிக்கூடத்தில் படிப்பதோடு வீட்டிலும் என் பாட்டனார், தந்தையார், சிறிய தகப்பனார் ஆகியவர்களும் எனக்குக் கற்பித்து வந்தனர்'' *(என் சரித்திரம், ப. 51)*

என்று பதிவுசெய்திருக்கிறார் (கீழ்வாயிலக்கம், நெல் இலக்கம் என்பன தமிழ் - எண் குறியீடாகும்).

ஆரம்பக்காலத்தில் உத்தமதானபுரத்திலிருந்த நாராயண ஐயர் என்பவரிடம் அரிச்சுவடி, எண் சுவடி பாடங்களைக் கேட்டறிந்திருக்கிறார். அவ்வூரிலிருந்த சாமிநாதையர் என்பவரிடம் தமிழும் கணக்கும் கற்றறிந்திருக்கிறார்; இவரிடமே ஏட்டில் எழுதும் பயிற்சியையும் உ.வே.சா. பெற்றிருக்கிறார். இவரிடம் சங்க்ஷேப ராமாயணம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம், நீதிசாரம் முதலிய நூல்களையும் பாடம்கேட்டிருக்கிறார். உத்தமதானபுரத்திலிருந்த சிவஸ்வாமி ஐயர் என்பவரிடம் ஆங்கில எழுத்துக்களைக் (கி,ங்ி,சி...) கற்றறிந்திருக்கிறார். தமிழ் எண்களை மட்டுமே அறிந்திருந்த உ.வே.சா. இவரிடமே ஆங்கில எண்களைக் (1,2,3...) கற்றுத் தெரிந்திருக்கிறார்.

தமிழ், கணக்கு உள்ளிட்ட பாடங்களை யார் யாரிடம் கேட்டறிந்துகொள்ளும் சூழல் தமக்கு வாய்க்கப்பெற்றது என்பது பற்றிய தகவல்களுடன், அவரின் சமகால ஆசிரியர்களுக்குக் கிடைத்த ஊதியம் குறித்த செய்திகளையும் உ.வே.சா. பதிவுசெய்திருக்கிறார். அதில் ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

''உபாத்தியாயருக்கு மாதம் கால் ரூபாய் சம்பளம்; ஒவ்வொரு பையனும் கொடுப்பான். பணக்காரர்கள் வருஷாசனமாக நெல் கொடுப்பார்கள். விசேஷ காலங்களில் மரியாதையும் செய்வார்கள். நவராத்திரி காலங்களில் உபாத்தியாயருக்கு ஒரு வகையான வரும்படி உண்டு. அந்த உத்ஸவத்தை 'மானம்பூ' என்று சொல்வார்கள்; மகா நோன்பு என்னும் சொல்லே அந்த உருவத்தை அடைந்தது. அக்காலத்தில் பிள்ளைகள் நன்றாக அலங்கரித்துக்கொண்டு வந்து பாட்டுப்பாடுவார்கள்; கோலாட்டம் போடுவார்கள். அதற்கெனவே தனியே பாட்டுக்கள் உண்டு. ஒவ்வொருவர் வீட்டுக்கும் பிள்ளைகளை அழைத்துச் சென்று பாடச் செய்வது உபாத்தியாயர் வழக்கம். வெளியூருக்கும் அழைத்துச் செல்வது உண்டு. அவரவர்கள் தங்கள் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி பணம் தருவார்கள். இந்தப் பணம் முழுவதையும் உபாத்தியாயர் எடுத்துக் கொள்வார். மானம்பூ வருவாயினால்தான் உபாத்தியாயர்கள் தங்கள் வீட்டுக் கல்யாணம் முதலிய காரியங்களைச் சிறப்பாக நடத்துவார்கள்'' *(என் சரித்திரம், பக். 56 - 57)*

**அரியிலூர்**

உ.வே.சா. அவர்களின் ஆறாம் வயது நடைபெற்றுக்கொண்டிருந்தபோது பாட்டி, பாட்டனார் இருவரும் இயற்கையெய்தி விடுகின்றனர். பெற்றோர்கள் ஊரில்வந்து உடனிருக்க வேண்டுமென்ற விருப்பத்தினாலேயே முன்பிருந்த அரியிலூரைவிட்டு உத்தமதானபுரம் வந்து வசித்துவந்தார் உ.வே.சா. வின் தந்தையார் வேங்கடசுப்பையர். பெற்றோர்களின் இறப்பிற்குப் பின்னர் அவர்களுக்குரிய இறுதிக் கடன்களையெல்லாம் செய்துமுடித்துவிட்டு உத்தமதானபுரத்தைவிட்டு மீண்டும் அரியிலூருக்கே வந்து வசிக்கத் தொடங்கினார் வேங்கடசுப்பையர். அந்தக் காலத்தில் அரியிலூரிலிருந்த சமஸ்தானத்தில் வேங்கடசுப்பையர் சங்கீத வித்துவானாக இருந்துவந்தார். அந்தச் சமஸ்தானத்து ஜமீந்தாரால் இலந்தங்குழி எனும் ஓரூரில் பத்துக்காணி நிலத்தைச் சர்வமானியமாக உ.வே.சா. தந்தை வேங்கடசுப்பையர் பெற்றிருக்கிறார்.

உ.வே.சா. அவர்களின் ஏழாம் வயது முதல் பதினொன்றாம் வயதுவரையில் வேங்கடசுப்பையர் அரியிலூரில் வசித்துவந்திருக்கிறார். தந்தை அரியிலூருக்குச் சென்றபிறகு உ.வே.சா. முதன்முதலாகக் கிருஷ்ண வாத்தியார் என்பவரிடம் பாடங்கேட்டிருக்கிறார். அவரிடம் ஆத்திசூடி, மூதுரை, மணவாள நாராயண சதகம் முதலிய சில சதகங்கள், இரத்தினசபாபதி மாலை, நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களை. பாடங்கேட்டிருக்கிறார். கறடா (மட்டி)க் காகிதம் அறிமுகமான காலமாதலின், அக்காகிதத்தில் கொறுக்காந் தட்டைப் பேனாவால் எழுதும் பயிற்சியையும் இவரிடமே உ.வே.சா. பெற்றிருக்கிறார்.

அரியிலூரிலிருந்த முத்துவேலாயுத பண்டாரம் என்பவரிடம் தெலுங்கு, கணிதம், வேமன்ன சதகம், ராமதாச சதகம் முதலிய நூல்களை உ.வே.சா. பாடங்கேட்டிருக்கிறார். இதே காலத்தில் உ.வே.சா. அவர்களை, அவ்வூரிலிருந்த தில்லைகோவிந்த பிள்ளை என்பவரிடம் கிராமக்

கணக்கு வேலையைப் பயிற்றுவிக்கும்படி வேங்கடசுப்பையர் ஒப்பித்திருந்தார். அங்குக் கிராமக் கணக்குப் பயிற்சியும் பெற்றுவிளங்கினார்.

உ.வே. சாமிநாதையரின் ஆசிரியர்களுள் முக்கியமானவர் அரியிலூர்ச் சடகோப ஐயங்கார். பரம்பரையாக வித்துவான்களாக இருந்த மரபிற் பிறந்த சடகோப ஐயங்கார், தமிழும் சங்கீதமும் நன்கு அறிந்தவர்; உ.வே.சா. அவர்களைத் தமிழில் நன்கு ஈடுபாடுகொள்ளச் செய்தவர் இவரேயாவார். சடகோப ஐயங்கார் தாம் இயற்றிய ஆலந்துறையீசர் பதிகத்தில் உள்ள கீர்த்தனங்களைப் பாடி இசைப் பயிற்சியும் அளித்திருக்கிறார். திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை முதலிய தமிழ் நூல்களையும் கற்றுக்கொடுத்திருக்கிறார். இவரைப் பற்றி என் சரித்திரத்தில்,

“என் பிதா சடகோபையங்காரிடம் என்னை ஒப்பித்ததற்கு முக்கியமான காரணம் சங்கீதத்தில் எனக்கு நல்ல பழக்கம் உண்டாக வேண்டுமென்றும், அதற்கு உதவியாகத் தமிழறிவு பயன்படுமென்றும் எண்ணியதே. ஆனால் என் விஷயத்தில் அந்த முறை மாறி நின்றது. தமிழில் அதிகப் பழக்கமும் அதற்கு உபகாரப்படும் வகையில் சங்கீதமும் இருப்பதையே நான் விரும்பினேன். சடகோபையங்காரிடம் என்று நான் மாணாக்கனாகப் புகுந்தேனோ அன்றே தமிழ்த் தாயின் அருட்பரப்பிற் புகுந்தவனானேன். எனக்குத் தமிழில் சுவை உண்டாகும் வண்ணம் கற்பித்த முதற் குரு சடகோபையங்காரே. பொம்மை (பாவை) களைக் காட்டிக் குழந்தைகளைக் கவர்வது போலத் தமிழ்ச் செய்யுட்களின் நயத்தை எடுத்துக்காட்டி என் உள்ளத்துக்குள் அந்த இளம்பருவத்தில் தமிழ் விதையை விதைத்தவர் அவரே” *(என் சரித்திரம், ப. 71)*

என்று உ.வே.சா. பதிவுசெய்திருக்கிறார். இவரிடம் கற்றுக்கொண்டிருந்த நூல்களன்றி வீட்டில் சூடாமணி நிகண்டின் பன்னிரண்டு தொகுதிகளையும், மணவாள நாராயண சதகம், அறப்பளீசுவர சதகம், குமரேச சதகம், இரத்தினசபாபதி மாலை, கோவிந்த சதகம், நீதி வெண்பா என்னும் நீதி நூல்களையும், நன்னூற் சூத்திரங்களையும் மனப்பாடம் செய்து தந்தையாரிடம் ஒப்பித்து வந்ததாகவும் உ.வே.சா. குறிப்பிடுகிறார்.

**குன்னம்**

அரியிலூர் ஜமீந்தாரின் ஆதரவு மெல்ல மெல்லக் குறைந்துவந்தமையால் உ.வே.சா. அவர்களின் தந்தை வேங்கடசுப்பையர் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகிறார். குடும்பத்திற்குக் கடனும் ஏற்பட்டுவிடுகிறது. வேங்கடசுப்பையரின் குடும்பம் ஜமீந்தாரின் ஆதரவில்லாமல் இருப்பதைக் குன்னம் சிதம்பரம் பிள்ளையென்பவர் அறிந்துகொள்கிறார். இவர் வேங்கடசுப்பையரின் பால்யகால நண்பர். அரியிலூருக்கு அருகிலுள்ள குன்னம் என்னும் கிராமத்துக் கணக்குவேலை பார்த்துவந்தவர். இவர் உ.வே.சா. குடும்பத்தாரைக் குன்னத்திற்கு அழைத்துச்சென்று ஆதரவு அளித்து வந்திருக்கிறார். குன்னம் சென்றவுடன் வேங்கடசுப்பையர் அருணாசலகவி ராமாயணத்தை இரவிற் பிரசங்கம் செய்வித்து வந்திருக்கிறார். உ.வே.சா. அப்போது சிதம்பரம் பிள்ளையிடம் சில பிரபந்த நூல்கள், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களைப் பாடம் கேட்டுவந்திருக்கிறார். தந்தையின் விருப்பப்படி கிராமக் கணக்கு வேலையில் நன்கு பயிற்சிபெற்றுள்ள சிதம்பரம் பிள்ளையிடம் கணக்கு வேலையையும் கற்றுவந்திருக்கிறார்; அவருடன் உதவிக் கணக்கு வேலையையும் பார்த்துவந்திருக்கிறார்.

உ.வே.சா. அவர்கள், சிதம்பரம் பிள்ளையைச் சந்திப்பதற்கு வந்துபோகும் பல வித்துவான்களுள் ஒருவரான கதிர்வேற் கவிராயர் என்பவரிடம் தனிப் பாடல்களைப் பாடம் கேட்டிருக்கிறார். இந்தக் கதிர்வேற் கவிராயர் சேலத்தைச் சேர்ந்த, அரியிலூர், உடையார்பாளையம் முதலிய சமஸ்தானத்தில் வித்துவானாக இருந்த குமாரசாமிக் கவிராயரின் மாணவராக இருந்து விளங்கியவர்.

**கார்குடி**

குன்னத்தில் இருந்த காலத்தில் அவ்வூர் வைஷ்ணவர் ஒருவர் வீட்டுத் திருமணத்திற்கு வந்திருந்த கார்குடி கஸ்தூரி ஐயங்காரின் அறிமுகம் உ.வே.சா. அவர்களின் தந்தை வேங்கடசுப்பையருக்கு ஏற்படுகிறது. அவர், குன்னம் சிதம்பரம் பிள்ளைக்கு நன்கு பழக்கமானவர்; கம்பராமாணயத்தில் நன்கு புலமைபெற்றவராகவும் விளங்கியிருக்கிறார். அவர் கார்குடிக்கு வரும்படி வேண்டிக்கொண்டார். அவர் பிரசங்கத் தொழிலையும் செய்துவந்தவராதலின், வேங்கட சுப்பையருக்கும், கஸ்தூரி ஐயங்காரின் விருப்பப்படி கார்குடி சென்றால் தாமும் அங்குப் பிரசங்கம் செய்யலாம், பிள்ளையையும் அவரிடம் பாடங்கேட்க வைக்கலாம் என்ற விருப்பம் ஏற்படுகிறது. சிதம்பரம்பிள்ளையின் விருப்பமும் அதுவாகவே இருந்தமையால் உ.வே. சா. குடும்பம் கார்குடிக்குச் சென்றது. கார்குடி

சென்றதும் கஸ்தூரி ஐயங்காரிடம் நாலடியார், நன்னூல், இராமாயணம், பாரதம், பாகவதம், நைடதம் முதலான நூல்களை உ.வே.சா. பாடம் கேட்டிருக்கிறார். விசாகப் பெருமாளையர் இயற்றிய நன்னூல் காண்டிகையுரையை முழுவதும் பாடம் சொல்லி அதன் கருத்துரை, விசேட உரை முதலியவற்றை உ.வே.சா. அவர்களுக்குப் பாடம் பண்ணி வைத்தவர் இவரே ஆவார்.

குன்னத்திலிருந்த கஸ்தூரி ஐயங்காருடைய நண்பரான சாமி ஐயங்கார் என்பவரிடம் பாடம் கேட்க வேண்டுமென்று விரும்பிக் கம்பராமாயணப் பாடத்தைக் கேட்டறிந்திருக்கிறார். ஆறுமாத காலமே கார்குடியில் இருந்துவிட்டு உ.வே. சா. குடும்பத்தார் மீண்டும் குன்னத்திற்குத் திரும்பிவந்துவிடுகின்றனர். கார்குடியிலிருந்தபோது ஸ்ரீநிவாஸையங்கார் என்பவர் உ.வே.சா. அவர்களுக்கு மகாலிங்கையர் இலக்கணம், விசாகப்பெருமாளையர் நன்னூற் காண்டிகை ஆகிய இலக்கண நூல்களின் அச்சுப்பிரதியைப் படிப்பதற்காகத் தந்திருந்தார். குன்னம் வந்த பின்னர் அந்நூல்களை முழுவதுமாகப் படித்துப் பாடம்பண்ணிவிட்டு ஐயம் உள்ள பாடங்களைக் குறித்துவைத்துக்கொண்டு மீண்டும் கார்குடி சென்று நான்கு நாட்கள் தங்கியிருந்து கஸ்தூரி ஐயங்காரிடம் அந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்திருக்கிறார். குன்னத்திலிருந்தபோது இராமாயணப் பிரசங்கம் செய்யும்பொருட்டுச் சிலகாலம் வெண்மணி எனும் ஊருக்குச் சென்று உ.வே.சா. குடும்பம் வசித்துவந்துள்ளது.

உ.வே.சா. அவர்களுக்குப் பதினான்கு வயது நடந்துகொண்டிருந்தபோது தந்தை வேங்கடசுப்பையர் திருமண ஏற்பாடுகளைச் செய்யத்தொடங்கிவிட்டார். திருமணத்திற்கு வேண்டிய பொருளை ஈட்டும் முயற்சியில் அரியிலூரைவிட்டுப் பெரும்புலியூர்த் தாலுகாவிலுள்ள களத்தூருக்குச் சென்று சிலகாலம் உ.வே.சா. குடும்பம் வசிக்கலானது. வேங்கடசுப்பையர் அவ்வூரில் இராமாயணம், நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளைப் பிரசங்கம் செய்து, வேண்டிய பொருளை ஈட்டிவந்து, உ.வே.சா. அவர்களுக்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கியுள்ளார்.

### பாபநாசம்

தம் சொந்த ஊரான உத்தமதானபுரத்தில் 16, ஜூன், 1868இல் உ.வே.சா. அவர்களுக்கும் மதுராம்பாள் என்பவருக்கும் திருமணம் நடைபெற்று முடிந்தது. அப்போது இவருக்கு வயது 14; மனைவி மதுராம்பாளுக்கு வயது 8. திருமணம் முடிந்த பின்னர்ச் சிலகாலம் அங்கேயே இருந்துவிட்டு மீண்டும் களத்தூருக்குச் சென்று உ.வே.சா. குடும்பம் வசிக்கத் தொடங்கியது. தலைதீபாவளியின் பொருட்டு உத்தமதானபுரம் வந்த உ.வே.சா. அவர்கள், ஆறுமாதகாலம் அங்கேயே இருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. தந்தையாருக்கு ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக மேலும் ஆறுமாத காலம் உத்தமதானபுரத்திலேயே இருக்கவேண்டிய சூழல் அவருக்கு வாய்த்துவிடுகிறது. இந்தக் காலத்தில் உத்தமதானபுரத்திற்கு அருகில் பாபநாசத்திலிருந்த இராகவையரிடம் சென்று நன்னூல் காண்டிகையுரையைப் பாடங்கேட்டு வந்திருக்கிறார். பாபநாசத்தில் சிறு பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியராக இருந்த அவர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார் ஆகியோரிடம் பாடம் கேட்டுப் புலமைபெற்று விளங்கியவர். பிற்காலத்தில் மதுரைக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றியவர். இவரிடம் தினந்தோறும் உத்தமதானபுரத்திலிருந்து பாபநாசம் சென்று பாடம்கேட்டு வந்திருக்கிறார். தியாகராச செட்டியார் பாடம் நடத்தும் அருமையைத் தினம் தினம் சொல்லிச் சொல்லி மகிழும் இவர் இயல்பின் வழியாகத் தியாகராச செட்டியாரின் தமிழ்ப் புலமையை உ.வே.சா. அவர்கள் அறியும் வாய்ப்பேற்பட்டுள்ளது.

வேங்கடசுப்பையர் மீண்டும் குன்னத்திற்கு வந்து வழக்கம்போலவே பிரசங்கத் தொழிலைச் செய்யத் தொடங்கியுள்ளார். இவருடன் உ.வே.சா. அவர்களும் வந்து இருக்கவேண்டிய சூழல் இருந்தது. இந்தக் காலத்தில் ஒருநாள் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நண்பர் ஒருவரை வேங்கடசுப்பையர் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவர் உ.வே. சா. அவர்களுக்கு இருக்கும் தமிழ் ஈடுபாட்டைக் கண்டு வியந்து, இவரைக் கொண்டுபோய் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் பாடம் கேட்கச் சொல்லுங்கள் என்று வேங்கடசுப்பையரிடம் சொல்லியிருக்கிறார். வேங்கடசுப்பையருக்குத் திருமணமான இவரை எப்படித் தனியே அனுப்புவது என்ற தயக்கமும், செலவிற்குப் போதிய பணம் இல்லை என்ற வருத்தமும் இருந்தது. இதனால் அப்போது அவர் சொன்னபடி மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பாடம்கேட்க அனுப்பிவைக்க முடியாமல் போகிறது. இந்தக் காலத்தில் உ.வே.சா. அவர்களுக்குப் பிள்ளையவர்களிடம் பாடம்கேட்க வேண்டும் என்ற விருப்பம் நன்றாக ஏற்பட்டுவிட்டது.

**செங்கணம்**

குன்னத்தில், வேங்கடசுப்பையர் தங்கியிருந்த வீட்டு உரிமையாளராகிய ராமையங்கார் என்பவர் உ.வே.சா. அவர்களின் தமிழ் ஈடுபாட்டைக் கண்டு, ஒருநாள் வேங்கடசுப்பையரிடம் 'செங்கணம் சின்ன பண்ணை விருத்தாசல ரெட்டியார் அவர்களிடம் கொண்டுபோய்விட்டால் அவர் பாடஞ் சொல்வார்' என்று சொல்லியிருக்கிறார். சிலநாள் கழித்து அவர் சொல்லியபடி வேங்கடசுப்பையர் குடும்பத்துடன் செங்கணம் சென்று தங்கியிருந்து உ.வே.சா. அவர்களை ரெட்டியாரிடம் பாடங்கேட்கச் செய்விக்கிறார். ரெட்டியாரிடம் யாப்பருங்கலக் காரிகை *(1869; சுக்கில - மார்கழி)* தனிப்பாடல் திரட்டு, செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம், பாட்டியல் நூல்கள், திருக்குறள் உள்ளிட்ட நூல்களை உ.வே.சா. கற்றுத் தெரிந்துகொண்டிருக்கிறார். ரெட்டியார் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பெருமைகளை நாளும் சொல்லிக்கொண்டே இருக்கும் இயல்பினராதலின், பிள்ளையின் பெருமைகளை நாளும் கேட்டுக்கொண்டே இருக்கும் சாமிநாதையருக்கு அவரிடம் எப்போது பாடம் கேட்கும் சூழல் அமையும் என்ற ஏக்கம் பெருகிக்கொண்டே சென்றுள்ளது. உ.வே.சா. மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பாடம் கேட்க வேண்டுமென்ற தம் விருப்பத்தை ரெட்டியாரிடம் சொன்னபோது, அவர்,

"ஆம், அவரிடம் போனால்தான் இன்னும் பல நூல்களை நீர் பாடங் கேட்கலாம்; உமக்குத் திருப்தியுண்டாகும்படி பாடம் சொல்லக்கூடிய பெரியார் அவர் ஒருவரே. நாங்களெல்லாம் மேட்டு நிலத்தில் மழையினால் ஊறுகின்ற கிணறுகள். என்றும் பொய்யாமல் ஓடுகின்ற காவிரி போன்றவர் அவர். அவரிடம் போய்ப் படிப்பதுதான் சிறந்தது" *(முன்னது, ப. 150)*

என்று சொன்னதாக என் சரித்திரத்திலே குறிப்பிட்டிருக்கிறார். ரெட்டியார் உ.வே.சா. அவர்களிடம் சொன்னது மட்டுமின்றித் தந்தை வேங்கடசுப்பையரிடமும்,

"என்னால் இயன்றதைச் சொல்லிக் கொடுத்தேன். இன்னும் நன்றாகப் படித்துப் பயன் அடைய வேண்டுமானால் பிள்ளையவர்களிடம் இவரை விட்டுப் படிப்பிப்பதுதான் நலம். உங்களை ஆதரிக்க வழியில்லாமல் இவ்வாறு சொல்லுகிறேனென்று நீங்கள் சிறிதும் எண்ண வேண்டாம். நீங்கள் எவ்வளவு வருஷம் இருந்தாலும் எனக்குச் சிரமம் இல்லை. கடவுள் கொடுத்திருப்பதைக்கொண்டு என்னால் இயன்ற அளவு ஆதரித்து வருவேன். இவரால் எனக்குச் சிரமம் உண்டென்று நான் நினைப்பதாகவும் எண்ணாதீர்கள். இவருக்குப் பாடம் சொல்வதும், இவரோடு தமிழ் நூல் சம்பந்தமாகப் பொழுதுபோக்குவதும் உண்மையில் எனக்கு அளவற்ற திருப்தியைத் தருகின்றன. எப்பொழுதும் இப்படியே இருக்கலாம். ஆனால் எனக்கு இனிமேல் வாழ்க்கையில் ஆகவேண்டியது ஒன்றும் இல்லை; இவர் இனிமேல்தான் முன்னுக்கு வந்து பிரகாசிக்க வேண்டும். தக்க இடத்தில் இருந்து பாடங் கேட்டால் இவர் அபிவிருத்தி அடைவாரென்பதில் தடையில்லை. இவரை அனுப்புவதற்கு எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. என் வருத்தத்தை மாத்திரம் உத்தேசித்து, இவருடைய அபிவிருத்திக்குத் தடை உண்டாக்குவது பாவமல்லவா?" *(முன்னது, ப. 150)*

என்று சொல்லியதாகக் குறிப்பிட்டிருக்கிறார். செங்கணத்தில் உ.வே.சா. குடும்பம், பிரமோதூத வருஷம் மார்கழி மாதம் முதல் பங்குனி வரையில் *(1870 டிசம்பர் முதல் 1871 மார்ச்சு வரையில்)* இருந்துவிட்டு அங்கிருந்து அரியிலூர் வந்து சேர்ந்திருக்கிறது. அரியிலூருக்கு அருகில் உள்ள கீழைப்பழூவூர் என்ற ஊரிலிருந்த செல்வந்தராகிய சபாபதி பிள்ளை என்பவர் சிலகாலம் வந்து எங்கள் ஊரில் தங்கியிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் உ.வே.சா. குடும்பத்தினர் அரியிலூரிலிருந்து புறப்பட்டுச் சென்று கீழைப்பழூவூர் சென்று சிலகாலம் தங்கியிருந்தனர். அப்பொழுது தமிழ்ப் புலமை பெற்றிருந்த சபாபதி பிள்ளையிடம் தஞ்சைவாணன் கோவை நூலை உ.வே.சா. பாடங்கேட்டிருக்கிறார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுப் பெரிய திருக்குன்றம் வந்து சிலநாள் தங்கியிருந்துவிட்டுப் பின்னர்ச் சொந்த ஊரான உத்தமதானபுரம் வந்துசேர்ந்தனர் உ.வே.சா. குடும்பத்தினர். அங்கிருந்து மாயூரம் சென்று மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்கச் செல்வது என்பது அப்போது அவர்களின் திட்டமாக இருந்தது. அதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் வேங்கடசுப்பையர் செய்துமுடித்திருந்தார். உ.வே.சா. அவர்களும் தம் எதிர்கால இலக்கு நோக்கிய பயணத்திற்கு ஆயத்தமாக இருந்தார்.

*மீனாட்சிசுந்தரம் பிள்ளை சந்திப்பும் - சந்திப்பிற்குப் பின்னரும் (1871 - 1880)*

**மாயூரம்**

தந்தை செல்லும் ஊர்களிலெல்லாம் உடன்சென்று அந்தந்த உர்களிலுள்ள பண்டிதர்களிடம் பாடம் கேட்டுவந்த உ.வே. சாமிநாதையர் 1871, ஏப்ரல் மாதம் மாயூரம் சென்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் மாணவராகச் சேர்ந்து பாடம் கேட்கத் தொடங்கினார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பாடம் கேட்கவேண்டுமென்ற நெடுநாள் கனவு நிறைவேறியதில் உ.வே.சா. அவர்களுக்கு பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. தக்க ஆசிரியரிடம் தம் மகனைப் பாடம் கேட்கவைக்க வேண்டுமென்ற வேங்கடசுப்பையரின் நெடுநாள் விருப்பமும் கைகூடிவந்துநின்றது.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பாடம் கேட்கவேண்டுமென்று உ.வே.சா. அவர்களுக்கு எவ்வளவு ஆவல் மிகுந்திருந்தது என்பதற்குச் சான்றாகக் கீழ்வரும் அவரின் கூற்றை நோக்கினால் நன்கு விளங்கும்.

“நெடுநாளாக இப்புலவர் பெருமானைக் காணவேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்து வந்தமையால் இவரைக் கண்டவுடன் என்னை அறியாமலே ஒருவகை மகிழ்ச்சியும் அன்புணர்ச்சியும் உண்டாயின. இவருடைய தோற்றப் பொலிவும் முகமலர்ச்சியும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன. ‘இவரைப் பார்த்தல் கூடுமோ? கூடாதோ!’ என்று ஏங்கியிருந்த எனக்கு அந்தச் சமயத்தில் உண்டான இன்பத்திற்கு எல்லையில்லை. இவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன்” *(மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், பாகம் - 2, ப. 3)*

மாயூரம் சென்று மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் கண்ட முதற் காட்சியை என் சரித்திரத்தில் இவ்வாறு பதிவுசெய்து நமக்குக் காட்சிப்படுத்துகிறார்.

“புலவர் பெருமான் வரும்போதே அவருடைய தோற்றம் என் கண்ணைக் கவர்ந்தது. ஒரு யானை மெல்ல அசைந்து நடந்து வருவதைப்போல் அவர் வந்தார். நல்ல வளர்ச்சியடைந்த தோற்றமும் இளந்தொந்தியும் முழங்கால் வரையில் நீண்ட கைகளும் பரந்த நெற்றியும் பின்புறத்துள்ள சிறிய குடுமியும் இடையில் உடுத்திருந்த தூயவெள்ளை ஆடையும் அவரை ஒரு பரம்பரைச் செல்வரென்று தோற்றச் செய்தன. ஆயினும் அவர் முகத்திலே செல்வர்களுக்குள்ள பூரிப்பு இல்லை; ஆழ்ந்து பரந்த சமுத்திரம் அலையடங்கி நிற்பதுபோன்ற அமைதியே தோற்றியது. கண்களில் எதையும் ஊடுருவிப்பார்க்கும் பார்வை இல்லை; அலக்ஷியமான பார்வை இல்லை; தம் முன்னே உள்ள பொருள்களில் மெல்லமெல்லக் குளிர்ச்சியோடு செல்லும் பார்வைதான் இருந்தது” *(என் சரித்திரம், 159)*

உ.வே.சா. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்பதற்கு முன்னர், அவரிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்த மாணவர் ஒருவரிடம் முதன் முதலாக நைடதத்தைப் பாடம் கேட்டு முடித்திருக்கிறார். பின்னர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் நேரடியாகப் பாடம்கேட்கத் தொடங்கியுள்ளார். பிள்ளையிடம் முதன் முதலாகப் பிரபந்த நூல்களுள் ‘திருக்குடந்தைத் திரிபந்தாதி’யைப் பாடங்கேட்டு முடித்திருக்கிறார். பின்னர் பழமலைத் திரிபந்தாதி, திருப்புகலூர்த் திரிபந்தாதி, மருதூர் யமகவந்தாதி, தில்லை யமகவந்தாதி, திருவேரகத்து யமகவந்தாதி, துறைசை யமகவந்தாதி, மறைசையந்தாதி முதலிய அந்தாதிகளும், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலிய சில பிள்ளைத் தமிழ்களும், அஷ்டப்பிரபந்தத்துள் சில பிரபந்தங்களும் பாடம் கேட்டு முடித்திருக்கிறார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் இவர் பாடம் கேட்கத் தொடங்கிய காலத்தில் காரைக்காற் சவேரிநாத பிள்ளை, கூறைநாட்டுக் கனகசபை ஐயர், சிவப்பிரகாச ஐயர், திருமங்கலக்குடி சேஷையங்கார், வல்லம் கந்தசாமி பிள்ளை, மாயூரம் முத்துசாமி பிள்ளை, நாகம்பாடிச் சாமிநாத பிள்ளை, மூவலூர்ச் சாமிப்பிள்ளை, திட்டைச் சோமசுந்தரம் பிள்ளை, சீயாலம் சிதம்பரம் பிள்ளை ஆகியோர் மாணவர்களாகப் பயின்றுகொண்டிருந்தனர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் 1870ஆம் ஆண்டு முதல் 1876ஆம் ஆண்டுவரை ஆறு ஆண்டுகள் முறையாகத் தமிழைக் கற்றுத் தேறியிருக்கிறார். நிலையாக ஒரே இடத்தில் ஒரே ஆசிரியரிடம் பாடம் கேட்கும் வாய்ப்பு இங்குதான் உ.வே.சா. அவர்களுக்கு வாய்க்கப்பெற்றிருக்கிறது.

அரிய பல நூல்களை, நுட்பமாகப் பாடம் கேட்கும் நல்வாய்ப்பும், பாடத்தில் ஐயம் ஏற்படுகின்றபோது அதைத் தீர்த்துக்கொள்ளும் அறிஞர் பெருமக்களின் தொடர்பும் இந்தக் காலத்தில்தான் உ.வே.சா. அவர்களுக்கு வாய்க்கப்பெற்றது. அந்த நல்வாய்ப்புதான் அவரை உயர்நிலைக்குச் செல்லக்கூடிய அடித்தளத்தை நன்றாக அமைத்துக்கொடுத்திருக்கிறது.

## திருவாவடுதுறை

திருவாவடுதுறை மடத்தில் மகாவித்துவானாக இருந்து பாடம் சொல்லிவந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 1876, பிப்ரவரி, 1-ஆம் நாள் இயற்கையெய்தி விடுகிறார். அவரின் இறப்பிற்குப் பின்னர், அவரிடம் பாடம் கேட்டுவந்த மாணவர்கள் திருவாவடுதுறை மடத்தில் அப்போது ஆதீனகர்த்தராக விளங்கிய மேலகரம் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகரிடம் பாடம் கேட்கத் தொடங்கினர். உ.வே.சா. அவர்கள் நான்கு ஆண்டுகள் (1876 - 1880) தேசிகரிடம் மாணவராக இருந்து பாடங்கேட்டிருக்கிறார். இந்தக் காலத்தில் குட்டித் தம்பிரான்களுக்குப் பாடம் சொல்லும் ஆசிரியராகவும் விளங்கியிருக்கிறார். இதன் தொடர்ச்சியாகத்தான் 16, பிப்ரவரி, 1880இல் கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியர் பணியை ஏற்கும் பேறு அவருக்கு வாய்க்கப்பெற்றது. கும்பகோணம் கல்லூரியில் 23 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் 1903 நவம்பர் மாதத்தில் சென்னை மாநிலக் கல்லூரிக்கு வந்து தமிழாசிரியர் பணியைச் செய்யத்தொடங்கியிருக்கிறார். மாநிலக் கல்லூரியில் 1903ஆம் ஆண்டுமுதல் 1919ஆம் ஆண்டு வரையில் 16 ஆண்டுகள் ஆசிரியர் பணியாற்றிவிட்டு ஓய்வுபெற்றிருக்கிறார். ஓய்வுக்குப் பின்னர் சிலகாலம் கழித்து 1924 முதல் 1927 வரையில் மூன்றாண்டுகள் சிதம்பரத்தில் அண்ணாமலை செட்டியார் தொடங்கிய மீனாட்சித் தமிழ்க் கல்லூரியில் முதல்வராக இருந்து பணிசெய்திருக்கிறார். இந்த மீனாட்சித் தமிழ்க் கல்லூரிதான் அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக 1929இல் உருவானது.

திருவாவடுதுறை மடத்தில் வித்துவானாக இருந்தது முதல், கும்பகோணம் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி இரண்டிடங்களில் ஆசிரியராகவும், மீனாட்சித் தமிழ்க் கல்லூரியில் முதல்வராகவும் இருந்ததுவரையில் ஏறத்தாழ அரைநூற்றாண்டிற்கும் மேலாக உ.வே.சா. கல்விப்புலப் பின்னணியிலேயே இருந்திருக்கிறார். இந்த ஆசிரியப் பணிக்காலத்தின் இடையிலேதான் தமிழின் பல பெருவளங்களை ஓலைச்சுவடிகளிலிருந்து ஆராய்ந்து அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

தாம் சங்கீதப் புலமைபெற்றிருந்தாலும் அதைத் தனையன் சாமிநாதையர் மீது வலிந்து வற்புறுத்தித் திணிக்காமல், பிள்ளையின் விருப்பம் அறிந்து நல்ல ஆசிரியர்களைத் தேடி அடையாளங்கண்டு, கொண்டு சேர்த்துத் தமிழ்ப் பயிற்சி அளித்து நாடுபோற்றும் நல்லாசிரியராகப் பெயர் பெறும்படி செய்தவர் அவரின் தந்தை வேங்கடசுப்பையர். இதனால்தான் தந்தை செய்த நற்செயலை இவ்வாறு ஓரிடத்தில் குறிப்பிட்டு நினைவுகொள்கிறார் சாமிநாதையர்.

“இளமையில் எனக்கு ஒரு தக்க ஆசிரியரைத் தேடித் தந்ததும், பின்பு தமிழ்ச் சுவடிகளே கதியாகக் கிடந்த எனக்கு லௌகிகத்தொல்லை அணுவளவேனும் இல்லாமற் பாதுகாத்ததும், சிவபக்தியின் மகிமையைத் தம்முடைய நடையினால் வெளிப்படுத்தியதுமாகிய அரிய செயல்களை நான் மறக்கவே முடியாது. அவருடைய ஆசாரசீலமும் சிவபூஜையும் பரிசுத்தமும் சங்கீதத் திறமையும் அவரைத் தெய்வமாக எண்ணும்படி செய்தன. அவருக்கு என்பாலுள்ள வாத்ஸல்யம் வெளிப்படையாகத் தோற்றாது. அவரது உள்ளமாகிய குகையிலே அது பொன்போற் பொதியப்பட்டிருந்தது. அதன் ஒளியைச் சில முக்கியமான சந்தர்ப்பங்களில் நான் அறிந்திருக்கிறேன்” (என் சரித்திரம், ப. 27)

உ.வே.சாமிநாதையர், பல அறிஞர் பெருமக்களிடம் தமிழ்ப் பாடங்களைக் கற்றுத்தேறி, அரைநூற்றாண்டிற்கும் மேலாக மாணவர்கள் போற்றும் நல்லாசிரியராகப் பணியாற்றி விளங்கி, ஆசிரியர் பணிக்கால இடையில் பல அரியதமிழ் நூல்களைச் சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டவர்; உரையில்லாத சில பழந்தமிழ் நூல்களுக்கு உரையியற்றியும் பதிப்பித்து அளித்தவர். சாமிநாதையர் அவர்களின் வரலாறு போற்றும் செயல்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாகத் தந்தை காட்டிய நல்வழியும், ஆசிரியர்கள் ஊட்டிய தமிழறிவும், அதனை நன்முறையில் கைக்கொண்டு உழைத்த அவரின் கடும் உழைப்பும் இருந்தன என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும்.

## துணைநின்ற நூல்கள்


1. சாமிநாதையர், உ.வே. 2008 (ஏழாம் பதிப்பு). என் சரித்திரம். சென்னை: மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்.
2. சாமிநாதையர், உ.வே. 1940 (இரண்டாம் பதிப்பு) திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம். சென்னபட்டணம்: லிபர்ட்டி அச்சுக்கூடம்.
3. மகாமகோபாத்தியாயர் தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவில் அளிக்கப்பெற்ற உபசாரப் பத்திரங்கள், 6.3.1935. சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம்.